
ஏபிஎல்



இயற்றமிழ் இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

PH

ஏபிஎல்

இயற்றமிழ் இலக்கணமும் மொழிப்பயிற்சியும்

(பதினொன்றும் வகுப்பு)

ஆசிரியர் :
புலவர் பு. செல்வராசன்,
தலைமைத் தமிழாசிரியர்,
சி. அப்துல் அக்கீம் இந்து-முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி,
சென்னை-1.

பதிப்பாசிரியர் :
செந்தமிழ்க் களஞ்சியம், சிந்தாமணிச் செல்வர்,
மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

மாட்ரோ பப்ளிஷிங் அவுஸ்
சென்னை-1.

பதிப்புரிமை]　　1968　　[விலை ரூ. 1·80

முதற்பதிப்பு—டிசம்பர், 1967.
இரண்டாம் பதிப்பு—ஜூன், 1968.

விலை ரூ. 1·80

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part II—Section 3 of the
Fort St. George Gazette dated 24-4-1968, Page 19]

[D./Cr. 10·9 கி.கி. வெள்ளைத்தாளில் அச்சிடப்பெற்றது]

(அரசியலாரின் புதிய பாடவியலைத் தழுவி
எழுதப்பட்டது.)

Kabeer Printing Works, Madras (940)

முன்னுரை

உயர்பள்ளியிறுதி வகுப்பில் படித்து அரசாங்கத்தார் நடத்தும் பொதுத் தேர்வுக்குச் செல்லும் மாணுக்கர் எளிய முறையில் இயலுமளவு ஆசிரியர் துணையின்றித் தாமே கற்றறியுமாறு இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.

அரசியலார் அண்மையில் வெளியிட்டுள்ள இலக்கணப் பாடத் திட்டத்தை முற்றிலும் தழுவி, பல்லாண்டுக் காலம் பயில்வித்துப் பெற்ற பட்டறிவின் துணையினுல் மாணுக்கர் மன நிலையை உளத்தே கொண்டு எழுதப்பட்ட இவ்விலக்கண நூல், மொழியறிவு சிறக்கப் பெறுவதில் அவர்க்குப் பெரிதும் துணை புரியுமென்னும் நம்பிக்கையால், இதனை மாணுக்கர் பயன்படுத்துமாறு செய்ய வேண்டுமெனப் புலவர் பெருமக்களையும் தலைமை ஆசிரியப் பெருமக்களையும் வேண்டுகின்றேன்.

ஆசிரியர்

உள்ளுறை

முதற்பகுதி

இலக்கணம்

I. எழுத்து

எழுத்திலக்கணம் எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதனிலை, இடை நிலை, கடைநிலை, போலி, பதம், புணர்பு எனப் பன்னிரண்டு பகுதியினை உடையதாகும்.

செவிக்குப் புலனாகும் ஒலி வடிவமும், கண்ணுக்குப் புலனாகும் வரி வடிவமும் பெற்றுச் சொல்லுக்கு உறுப்பாயமைவது, எழுத்தெனப் படும். பிற ஒலிகள் எழுத்தெனப்படா.

தமிழ் எழுத்துக்கள், **முதலெழுத்து**, **சார் பெழுத்து** என இரு வகைப்படும். அ, ஆ முதலிய உயிரெழுத்துப் பன்னிரண்டும், க், ங் முதலிய மெய்யெழுத்துப் பதினெட்டும் ஆகிய முப்பதும் **முதலெழுத்து** எனப்படும்.

உயிர்மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து, உயிரள பெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம், குற்றிய லிகரம், ஐகாரக்குறுக்கம், ஔகாரக்குறுக்கம், மகரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் ஆகிய பத்தும் **சார்பெழுத்து** எனப்படும்.

1. எழுத்துக்களின் பிறப்பு

முதலெழுத்தும் சார்பெழுத்தும் ஒலிவடிவாகத் தோன்றுவது எழுத்தின் பிறப்பு எனப்படும்.

அப்பிறப்பு இடப்பிறப்பு, முயற்சிப்பிறப்பு என இரு வகைப்படும்.

நாம் பேச முயலும் போது, நிறைந்த உயிரினது முயற்சியால் உள்ளே நின்ற காற்ருனது எழுப்ப, எழுகின்ற செவிப்புலனும் அணுக்கூட்டம் (காதால் கேட்கும் ஒலிக்கூட்டம்) மார்பும் கழுத்தும் தலையும் மூக்கும் ஆகிய நான்கிடத்தையும் பொருந்தி, உதடும், நாக்கும், பல்லும், மேல் வாயு மாகிய நான்கனுடைய முயற்சியால் வேறு வேறு எழுத்தாகிய ஓசைகளாய்த் தோன்றுதல் எழுத்தின் பிறப்பாகும்.

> 'நிறையுயிர் முயற்சியின் உள்வளி துரப்ப
> எழுமணுத் திரளுரம் கண்டம் உச்சி
> மூக்குற் றிதழ்நாப் பல்லணத் தொழிலின்
> வெவ்வே றெழுத்தொலி யாய்வரல் பிறப்பே.'
>
> (நன்னூல் சூத்திரம், 74)

(வளி - காற்று. துரப்ப - எழுப்ப. உரம் - மார்பு. கண்டம் - கழுத்து. அணம் (அண்ணம்) - மேல்வாய். அணுத்திரள் - அணுக்கூட்டம். ஒலி அணுக்கள் ஒன்ருேடொன்று உராய்வதால் எழுத்தாம் ஒலியுண்டாகிறது.)

2. இடப்பிறப்பும் முயற்சிப்பிறப்பும்

முதலெழுத்துக்களின் இடப்பிறப்பு :

மேற்கூறியவாறு எழுத்துக்கள் பிறக்கு மிடத்து, உயிர் எழுத்துக்களும், இடையின எழுத்துக்களும் கழுத்தை இடமாகவும், மெல்லின எழுத்துக்கள் மூக்கை இடமாகவும், வல்லின எழுத்துக்கள் மார்பை இடமாகவும் பெறும்.

கழுத்து—உயிர் எழுத்தும், இடையினமும் பிறக்குமிடம்.

மூக்கு—மெல்லினம் பிறக்குமிடம்.

மார்பு—வல்லினம் பிறக்குமிடம்.

'அவ்வழி,
ஆவி இடைமை யிடமிட றாகும்;
மேவு மென்மைமூக் குரம்பெறும் வன்மை.' (ந. சூ. 75)

(அவ்வழி - அங்ஙனம் பிறக்குமிடத்து. மிடறு - கழுத்து.)

முதலெழுத்துக்களின் முயற்சிப்பிறப்பு:

உயிரெழுத்து

அ, ஆ—இவ்விரண்டு உயிர் எழுத்துக்களும் வாய் திறத்தலாகிய முயற்சியாற்பிறக்கும்.

'அவற்றுள்,
முயற்சியுள் அஆ அங்காப் புடைய.' (ந. சூ. 76)

(அங்காப்பு - வாய்திறத்தல்.)

இ, ஈ, எ, ஏ, ஐ—இவ்வைந்து உயிர் எழுத்துக்களும், வாயைத் திறத்தலோடு, மேல் வாய்ப்பல்லை நாக்கடியினது ஓரம் பொருந்தப்பிறக்கும்.

'இஈ எஏ ஐஅங் காப்போ
டண்பல் முதல்நா விளிம்புற வருமே.' (ந. சூ. 77)

(அண்பல் - மேல்வாய்ப் பல். முதல் நா - நாக்கின் அடி.)

உ, ஊ, ஒ, ஓ, ஔ—இவ்வைந்து உயிர்களும் உதடுகள் குவிவதாற்பிறக்கும்.

'உஊ ஒஓ ஔவிதழ் குவிவே.' (ந. சூ. 78)

மெய்யெழுத்து

க், ங்—இவ்விரு மெய்யெழுத்துக்களும் நாக்கினடி மேல்வாய் அடியைப் பொருந்துவதாற் பிறக்கும்.

ச், ஞ்—இவ்விரு மெய்களும் நாக்கின் நடு, மேல்வாய் நடுவைப் பொருந்துவதாற்பிறக்கும்.

ட், ண்—இவ்விரு மெய்களும் நாக்கின் நுனி (கடை) மேல்வாய்க்கடையைப் பொருந்துவதாற் பிறக்கும்.

'கஙவும் சஞவும் டணவும் முதலிடை
நுனிநா அண்ணம் உறமுறை வருமே.' (ந. சூ. 79)

த், ந்—இவ்விரு மெய்களும், மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதாற் பிறக்கும்.

'அண்பல் அடிநா முடியுறத் தநவரும்.' (ந. சூ. 80)

ப், ம்—இவ்விரு மெய்களும், மேலுதடும் கீழ் உதடும் பொருந்துவதாற்பிறக்கும்.

'மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்.' (ந. சூ. 81)

ய்—இம்மெய்யெழுத்து, நாக்கின் அடி, மேல் வாயைப் பொருந்துவதாற்பிறக்கும்.

'அடிநா அடியண முறயத் தோன்றும்.' (ந. சூ. 82)

ர், ழ்—இவ்விரு மெய்களும், நாக்கின் நுனி யானது, மேல்வாயைத் தடவுவதாற்பிறக்கும்.

'அண்ணம் நுனிநா வருட ரழவரும்.' (ந. சூ. 83)

ல்—இம்மெய்யெழுத்து, மேல்வாய்ப் பல்லின் அடியை நாவின் ஓரம் தடித்து நெருங்குவதாற் பிறக்கும்.

ள்—இம்மெய்யெழுத்து மேல்வாயை நாவின் ஓரமானது தடித்துத் தடவுவதாற்பிறக்கும்.

'அண்பல் முதலும் அண்ணமும் முறையின்
நாவிளிம்பு வீங்கி ஒற்றவும் வருடவும்
லகார ளகார மாயிரண்டும் பிறக்கும்.' (ந. சூ. 84)

(வீங்கி - தடித்து. ஒற்றுதல் - நெருங்குதல். வருடல் - தடவல், ஆயிரண்டும் - (அ + இரண்டும்) அவ்விரண்டும்.

வ்—இம்மெய்யெழுத்து, மேல் வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்துவதாற்பிறக்கும்.

'மேற்பல் லிதழுற மேவிடும் வவ்வே.' (ந. சூ. 85)

ற், ன்—இவ்விரு மெய் எழுத்துக்களும், மேல் வாயை நாக்கின் நுனி மிகப் பொருந்துவதாற் பிறக்கும்.

'அண்ணம் நுனிநா நனியுறிற் றனவரும்.' (ந. சூ. 86)

சார்பெழுத்துக்களின் இடமுயற்சிப்பிறப்பு

சார்பெழுத்துக்கள் பத்தனுள் ஒன்ருகிய ஆய்தவெழுத்தின் இடப்பிறப்புத் தலை ஆகும்; முயற்சிப்பிறப்பு வாயைத் திறத்தலாம்.

மற்றச் சார்பெழுத்துக்கள் ஒன்பதும் தத்தம் முதலெழுத்துக்களைப் போல, இடத்தாலும் முயற்சியாலும் பிறக்கும்.

'ஆய்தக் கிடந்தலை ; அங்கா முயற்சி ;
சார்பெழுத் தேனவுந் தம்முத லனைய.' (ந. சூ. 87)

பயிற்சி வினுக்கள் :

1. 'இடப்பிறப்பு, முயற்சிப்பிறப்பு' என்பன யாவை?
2. மூவின மெய்கள் பிறக்கும் இடங்கள் யாவை?
3. அ, ஆ, இ, ஈ, உ, ஊ—இவற்றின் முயற்சிப்பிறப்பு யாது?
4. க, த, ப, ர, ற—இவற்றின் முயற்சிப்பிறப்பு யாது?
5. மேல்வாயை நாவின் நுனி தடவவும், மேல் வாயை நாவின் நுனி மிகப் பொருந்தவும், மேல் வாய்ப் பல்லடியை நாவோரம் தடித்து நெருங்கவும், தடித்துத் தடவவும் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?

II. சொல்

1. ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி

ஓர் எழுத்துத் தனித்தோ, அல்லது பல எழுத்துக்கள் தொடர்ந்தோ நின்று ஒரு பொருளை உணர்த்துவது சொல் எனப்படும். சொல், மொழி, பதம் என்பன ஒரே பொருளைத் தருவனவாகும். இச்சொல் **பகாப்பதம், பகுபதம்** என இரு வகைப்படும்.

ஒருமொழி, தொடர்மொழி, பொதுமொழி எனச் சொல் மூன்று வகைப்படும்.

(1) பகாப்பதமேனும் பகுபதமேனும் ஒரு சொல் நின்று தன் ஒரு பொருளைத் தருவது **ஒரு மொழி** எனப்படும்.

(எடுத்துக்காட்டு)

நிலம், நிலத்தன், நட, நடந்தான், தில், மன், தவ, நனி.

(2) பகாப்பதமேனும், பகுபதமேனும் இரண்டு முதலியவாகத் தொடர்ந்து நின்று, இரண்டு முதலிய பல பொருள்களைத் தருமாயின், அது **தொடர்மொழி** எனப்படும்.

(எ. கா.) நிலம் பெரிது, அதுகொல், சாலப் பகை, நிலங்கடந்த நெடுமால்.

(3) ஒரு மொழியாய் நின்று ஒரு பொருளைத் தந்தும், அதுவே தொடர்மொழியாய் நின்று பல பொருள்களைத் தந்தும், ஒரு மொழி, தொடர்

மொழி ஆகிய இரண்டனுக்கும் பொதுவாய் நிற்கும் சொல் பொதுமொழி எனப்படும்.

(எ. கா.) எட்டு, தாமரை, வேங்கை, எழுந்திருந்தான்.

இவை, ஒரு மொழிகளாய் நின்று ஒரு பொருளைத் தருவதன்றி, எள் + து = எள்ளைத் து (து = உண்), தாம் + மரை = தாவுகின்ற மரை (மான்), வேம் + கை = வேகின்ற கை, எழுந்து + இருந்தான் = எழுந்து (பின்) இருந்தான் (இருந்தான்—உட்கார்ந்தான்) எனத் தொடர்மொழிகளாய்ப் பல பொருளைத் தருதலான், பொது மொழி எனப்படும்.

'ஒருமொழி யொருபொரு ளனவாம்; தொடர்மொழி
பலபொரு ளன;பொது இருமையு மேற்பன.'
(ந. சூ. 260)

பயிற்சி வினாக்கள் :

1. 'சொல்' என்பது-யாது?
2. 'மூவகை மொழிகள்' என்பன யாவை?
3. பொது மொழி என வழங்கப்படக் காரணம் யாது?
4. சீரகம், பெருங்காயம், வெந்தயம்—இவை பொது மொழியாகுமாற்றை விளக்குக.

2. பொதுப்பெயர்

தான், தாம், எல்லாம்

தான், தாம் என்னும் பெயர்கள், உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டனுக்கும் பொதுவாக வருபவை ஆகும்.

எல்லாம் என்பது இருதிணை மூவிடத்திற்கும் பொதுவாக வரும் பெயராகும். எனவே, இம் மூன்றும் **பொதுப்பெயர்** எனப்படும்.

தான்—ஒருமைப் பொதுப்பெயராகிய இஃது, இருதிணை, முப்பால், மூவிடங்கட்கும் பொதுவாய் வரும்.

(எ. கா.)

அவன் **தான்** வந்தான்—ஆண்பால்
அவள் **தான்** வந்தாள்—பெண்பால் } உயர்திணை
அது **தான்** வந்தது—ஒன்றன்பால்—அஃறிணை
(இவை மூன்றும் படர்க்கையிடம்)
நீ **தான்** செய்தாய்—முன்னிலையிடம்
நான் **தான்** செய்தேன்—தன்மையிடம்

தாம்—பன்மைப் பொதுப் பெயராகிய இஃது, இருதிணை, இருபால், மூவிடங்கட்கும் பொதுவாய் வரும்.

(எ.கா.)

அவர் **தாம்** செய்தார்—பலர்பால் —உயர்திணை
அவை **தாம்** செய்தன—பலவின்பால்—அஃறிணை
(இவை படர்க்கையிடத்தன)
நீர் **தாம்** செய்தீர்—முன்னிலையிடம்
நாம் **தாம்** செய்தோம்—தன்மையிடம்

எல்லாம்—பன்மைப் பொதுப் பெயராகிய இஃது, இருதிணை, இருபால், மூவிடங்கட்கும் பொதுவாய் வரும்.

(எ. கா)

நாம் **எல்லாம்** செய்தோம்—தன்மை
நீர் **எல்லாம்** செய்தீர்—முன்னிலை
அவர் **எல்லாம்** செய்தார்—படர்க்கை—உயர்திணை
அவை **எல்லாம்** செய்தன—படர்க்கை—அஃறிணை

இவற்றுள் **தான்** என்பது ஒருமைக்கே வரும். **தாம்** என்பதும், எல்லாம் என்பதும் **பன்மைக்கே** வரும் என்பதை நினைவில் வைக்க வேண்டும்.

‘ ......எல்லாம் தாம்தான் இன்னன பொதுப்பெயர்.’
(ந. சூ. 282)

‘ அவற்றுள்,
ஒன்றே இருதிணைத் தன்பால் ஏற்கும்.’ (ந. சூ. 284)

பயிற்சி வினாக்கள் :

1. பொதுப்பெயர்கள் யாவை? பொதுப்பெயரென வழங்குதற்குக் காரணம் என்ன?
2. இருதிணை, முப்பால், மூவிடங்கட்கும் பொதுவாக வரும் பெயர் யாது?
3. ‘எல்லாம்’ என்பது எவ்வெவற்றுக்குப் பொதுவாக வரும்?
4. ஒருமைக்கே வருவன எவை? பன்மைக்கே வருவன யாவை?

3. ஆகுபெயர்—அன்மொழித்தொகை வேறுபாடு

நாடு களித்தது.

நாடு என்பது இடத்தின் பெயர். இஃது அந்த நாட்டில் உள்ள மக்களை உணர்த்துகிறது. களிப்பவர் மக்களேயாதலின், இங்கு நாடு என்னும் இடப்பெயர், அங்கு வாழும் மக்களுக்கு ஆகி வந்தது.

இவ்வாறு ஒன்றன் பெயர் அதனோடு தொடர் புடைய வேறொரு பொருளுக்குத் தொன்று தொட்டு ஆகி வருவது **ஆகு பெயர்** எனப்படும்.

இஃது அறுவகைப் பெயரின் அடியாகவும், அளவைகளினடியாகவும், சொல்லாகு பெயர்,

தானியாகு பெயர், கருவியாகு பெயர், காரியவாகு பெயர், கருத்தாவாகு பெயர், உவமையாகு பெயர், இருமடியாகு பெயர், மும்மடியாகு பெயர், அடை யடுத்தவாகு பெயர் எனவும் பலவாக வரும்.

'பொருள்முத லாறோ டளவைசொல் தானி
கருவி காரியம் கருத்த னாதியுள்
ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
தொன்முறை யுரைப்பன ஆகு பெயரே,' (ந. சூ. 290)

பொற்றொடி பாடினாள்.

இங்குப் பொற்றொடி என்பது ஒரு பெண்ணைக் குறிக்கிறது. பொற்றொடி—பொன் + தொடி—பொன்னாலாகிய தொடி (தொடி - தோள் வளை—வங்கி) மூன்றாம் வேற்றுமைத்தொகை. பாடினாள் என்னும் சொல்லால் பொற்றொடி என்பது பொன் தோள் வளை எனப்பொருள் தாராமல், அவ்வளையை அணிந்துள்ள பெண்ணைக் குறிக்கிறது. எனவே, இது 'பொன்னாலாகிய தொடியை உடையாள் பாடினாள்' என விரியும். இது மூன்றாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை ஆகும்.

பொற்றொடி—மூன்றாம் வேற்றுமைத்தொகை.

உடையாள்—புறத்தே தொக்கு வந்த அன்மொழி (தொகை அல்லாத பிறமொழி).

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை என்னும் ஐந்து தொகைகளுக்கும் புறத்தில் ஒரு சொல் தொக்கு வருவது **அன்மொழித்தொகை** ஆகும். அதாவது ஐந்து தொகைகளுக்கும் உரியன

அல்லாத மொழி இறுதியில் தொக்கு நிற்பது அன்மொழித்தொகை.

'ஐந்தொகை மொழிமேல் பிறதொகல் அன்மொழி.'

(ந. சூ. 369)

ஆகுபெயர், அன்மொழித்தொகை ஆகிய இரண்டிலும் ஒன்றன் பெயர் தன் பொருளை உணர்த்தாமல் வேறு பொருளையே உணர்த்துமாயினும், இவ்விரண்டுக்கும் வேறுபாடுகள் உண்டு. அவை, பின் வருவன:

எண்	ஆகுபெயர்	அன்மொழித்தொகை
1.	ஒரு சொல்லாய் வரும்.	பல சொற்களாய் வரும்.
2.	முதல், சினை முதலிய தொடர்பால் வேறு பொருளை உணர்த்தும்.	ஐவகைத் தொகையாற்றலால் வேறு பொருளை உணர்த்தும்.
3.	இடுகுறிப்பெயராய் வரும்.	இடுகுறிப் பெயராய் வாராது.
4.	தொன்றுதொட்டு வரும்.	யாதானும் ஒரு காரணத்தால் புதிது புதிதாக உண்டாக்கப்படும்
5.	தொகும் சொல் இல்லை.	ஐந்தொகைப் புறத்தே ஒரு சொல் தொகும்.
6.	தன்னொடு தொடர்புடைய பிறிதொரு பொருளை உணர்த்தும்.	உடைமை உடையாரை உணர்த்தும்.

இவ்விரண்டற்குமுள்ள வேறுபாட்டினை நன்கு உணர்ந்து தெளிக.

ஆகுபெயர்	அன்மொழித்தொகை
பாவை வந்தாள்.	பூங்குழல் பாடினாள்.
திருக்குறள் படித்தாள்.	ஆய்தொடி எழுதினாள்.

ஆகுபெயர்	அன்மொழித்தொகை
கார்த்திகை மலர்ந்தது.	ஆண்டகை மகிழ்ந்தான்.
நீலம் சூடினுள்.	மலர்விழி படித்தாள்.

பயிற்சி விஞக்கள் :

1. 'ஆகுபெயர்' என்பது யாது? இரு சான்றுகளுடன் விளக்குக.
2. 'அன்மொழித்தொகை' என்பது யாது?
3. இவ்விரண்டிற்குமுள்ள வேறுபாடு யாது?
4. காளே வந்தான், தாமரை முகம், பாட்டுப் படித்தாள், துடியிடை பேசினுள், சேரன் குடி சென்றேன், பொற்ருலி வாழ்த்தினுள்—இவற்றில் உள்ள ஆகு பெயர், அன்மொழித்தொகைகளே எடுத்து எழுதுக.

4. உருபு மயக்கம்

பெயர்ச்சொற்களில் ஒரு வேற்றுமை உருபு நிற்கவேண்டுமிடத்தில் மற்ருெரு வேற்றுமை உருபு நின்று மயங்குவதும் உண்டு. அவ்வண்ணம் மயங்குவதே **உருபு மயக்கம்** எனப்படும். இவ்வாறு உருபு மயங்கிவரின், வேற்றுமைப் பொருளுக்கேற்ப அவ்வேற்றுமை உருபைத் திரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஒரு வேற்றுமைப் பொருள் மற்ருெரு வேற்றுமையுருபாற் சொல்லப்பட்டதாயினும், அப்பொருளுக்கியையவே அவ்வுருபு சேரும்.) மயக்கம் - மாறுதல்)

(எ. கா.) " இந்நகர்க்கே வாழ்கின்ரேம்."

(நளவெண்பா)

இதில் நகர்க்கே என்பதில் உள்ள கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு ஏழாம் வேற்றுமை

உருபாகிய கண் நிற்கவேண்டுமிடத்தில் நின்றுள்ளது. நகர்க்கண் என்றிருக்க வேண்டுவது நகர்க்கே என்றிருப்பது, உருபு மயக்கமாகும்.

"காலத்தி ஞற்செய்த நன்றி." (குறள்)

இதில், காலத்திஞல் என்பதிலுள்ள ஆல் என்னும் மூன்ரும் வேற்றுமை உருபு ஏழாம் வேற்றுமைப் பொருளில் நின்றுள்ளது.

பயிற்சி விஞக்கள் :

1. 'உருபு மயக்கம்' என்பது யாது?
2. 'செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும்,' 'கிழங்கு மணற்கீன்ற முளை', 'குறில்வழி லளத்தவ் வணையி ஞய்தம் ஆகவும் பெறூஉ மல்வழி யானே,' 'புலியொடு ஒத்தான்'—இவற்றில் உள்ள உருபு மயக்கங்களை எடுத்துக் காட்டுக.

5. பொது வினைகள்–I

தன்மை, முன்னிலை, வியங்கோள் வினை முற்றுக்களும், பெயரெச்சங்களும், வினையெச்சங்களும், வேறு, இல்லை, உண்டு என்னும் மூன்று குறிப்பு வினைமுற்றுக்களும், செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்றும் இருதிணைப் பொது வினைகளாகும்.

'தன்மை முன்னிலை வியங்கோள் வேறில்லை
உண்டீ ரெச்சம் இருதிணைப் பொதுவினை' (ந. சூ. 330)
(உண்டீரெச்சம் – உண்டு + ஈர் + எச்சம்)

தன்மை ஒருமை :

'கு, டு, து, று' என்னும் விகுதிகளுள் ஒன்றை ஈற்றில் உடைய குற்றியலுகர மொழிகளும், 'அல், அன், என், ஏன்' என்னும் விகுதிகளையுடைய

மொழிகளும் உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால் ஆகிய இருதிணை முப் பால்களுக்கும் பொதுவாக வரும்.

(எ. கா.)

கு—உண்கு (உண்பேன்)
டு—உண்டு (உண்டேன்)
து—வந்து (வந்தேன்)
று—சென்று (சென்றேன்)
அல்—செய்வல் (செய்வேன்)
அன்—செய்தனன்
என்—செய்தனென்
ஏன்—செய்தேன்

'குடுதுறு என்னும் குன்றியல் உகரமோ
டல்அன் என்ஏன் ஆகும் ஈற்ற
இருதிணை முக்கூற்று ஒருமைத் தன்மை.' (ந. சூ. 331)

(குன்றியல் உகரம்—குற்றியல் உகரம். ஈற்ற—இறுதியினை உடையவை. முக்கூற்று—ஒருவன், ஒருத்தி, ஒன்று எனும் மூன்று பால்களுக்கு முரிய.)

தன்மைப் பன்மை:

அம், ஆம் என்னும் விகுதிகளையுடைய மொழிகள் முன்னிலையாரையும், எம், ஏம், ஓம் என்னும் விகுதிகளையுடைய மொழிகள் படர்க்கை யாரையும், கும், டும், தும், றும் என்னும் விகுதி களையுடைய மொழிகள் முன்னிலையாரையும் படர்க்கையாரையும் தன்னுடன் கூட்டும் பொது வினைகளாம். இவை **உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைகள்** என்றும் கூறப்படும்.

(எ. கா.)

அம்—உண்டனம், உண்கின்றனம், உண்பம்.

ஆம்—உண்டாம், உண்கின்றாம், உண்பாம்.

யாம்-யானும் நீயும்

(இத்தன்மைப் பன்மை வினைகள் தன்மை, முன்னிலை ஆகிய இரண்டு இடங்களுக்கும் பொதுவாய் மூன்று காலங்களிலும் வந்திருத்தலை அறிக.)

எம்—உண்டனெம், உண்கின்றனெம், உண்பெம்.

ஏம்—உண்டேம், உண்கின்றேம், உண்பேம்.

ஓம்—உண்டோம், உண்கின்றோம், உண்போம்.

யாம்-யானும் அவனும்

(இத்தன்மைப் பன்மை வினைகள், தன்மை, படர்க்கை ஆகிய இரண்டு இடங்களுக்கும் பொதுவாய் மூன்று காலங்களிலும் வந்திருத்தலை அறிக.)

கும் —	—	— உண்கும்	
டும் —	உண்டும்	— —	
தும் —	வந்தும்	— வருதும்	
றும் —	சென்றும்	— சேரும்	

} யாம் யானும் நீயும்

(இத்தன்மைப் பன்மை வினைகள், தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூவிடங்களுக்கும் பொதுவாய் வந்திருத்தலை அறிக. கும் விகுதி எதிர் காலத்தை மட்டும் காட்டும். டும் விகுதி இறந்த காலத்தை மட்டும் காட்டும். தும், றும் என்னும் விகுதிகள் இறந்த காலத்தையும் எதிர் காலத்தையும் காட்டும் என அறிக.)

'அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்

எம்ஏம் ஓம்இவை படர்க்கை யாரையும்

உயிரளர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை.' (ந. சூ. 332)

(உம் ஊர் கடதற—உம் ஊர்ந்து வருகின்ற கடதற—கும், டும், தும், றும். தன்னொடு படுக்கும்—தன்னுடன் கூட்டும், உளப்படுத்தும்.)

முன்னிலை ஒருமை :

ஐ, ஆய், இ என்னும் விகுதிகளையுடைய மொழிகளும், விகுதி பெற்றும் பெறுமலும் ஏவலில் வருகிற இருபத்து மூன்று மொழிகளும் ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால் ஆகிய மூன்றனுக்கும் இரு திணைக்கும் பொதுவாய் வரும்.

ஐ —உண்டனை, உண்கின்றனை, உண்பை.
ஆய்—உண்டாய், உண்கின்றாய், உண்பாய்.
இ —உண்டி, உண்ணுநின்றி, சேறி.
(செல்வாயாக)

'ஐஆய் இகர ஈற்ற மூன்றும்
ஏவலின் வருஉம் எல்லா ஈற்றவும்
முப்பால் ஒருமை முன்னிலை மொழியே.' (ந. சூ. 335)

முன்னிலைப் பன்மை :

இர், ஈர்—என்னும் விகுதிகளையுடைய மொழிகள் இரு திணைகளுக்கும் பொதுவாக வரும்.

இர்—உண்டனிர், உண்கின்றனிர், உண்பிர்.
ஈர் —உண்டீர், உண்கின்றீர், உண்பீர்.

'இர்ஈர் ஈற்ற இரண்டு மிருதிணைப்
பன்மை முன்னிலை; மின்னவற் றேவல்.' (ந. சூ. 337)

ஏவல் வினைகள் :

உண்மின், உண்ணீர், உண்ணும் என வரும் ஏவற்பன்மை வினைமுற்றுக்களும், செய், செய்வாய் என வரும் ஏவல் ஒருமை வினைமுற்றுக்களும், உண்டனிர், உண்மின் என வரும் உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்களும் பொது வினைகளாம்.

வியங்கோள் :

வாழ்க, வாழிய, வாழியர், ஓங்க, எழுந்தருள, ஒரால், ஆதல், எனல் என வரும் வியங்கோள் வினை முற்றுக்கள், இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாகும்.

('ஓங்க, எழுந்தருள' என்பவற்றில் அ என்பதும், ஒரால் (ஒருவுக) என்பதில் ஆல் என்பதும், ஆதல் (ஆகுக) என்பதில் தல் என்பதும், எனல்— உடன்பாடு (என்க), எதிர்மறை (என்னற்க) என்பதில் அல் என்பதும் வியங்கோள் வினைமுற்று விகுதிகளாம்.)

(எ. கா.)

தன்மை	முன்னிலை	படர்க்கை-ஐம்பால்	
நான் வாழ்க	நீ வாழ்க	அவன் வாழ்க	உயர்திணை
நாம் வாழ்க	நீர் வாழ்க	அவள் வாழ்க	
யான் வாழ்க	நீங்கள் வாழ்க	அவர் வாழ்க	
யாம் வாழ்க		அது வாழ்க	அஃறிணை
		அவை வாழ்க	

பிற வியங்கோள் வினைகளையும் இவ்வாறே கொள்க.

'கயவொடு ரவ்வொற் றீற்ற வியங்கோள்
இயலு மிடம்பா லெங்கு மென்ப.' (ந. சூ. 338)

பெயரெச்சம் :

வந்த, சென்ற, உண்ட, உண்ணாத என்பன போன்ற உடன்பாடு எதிர்மறைப் பெயரெச்சங்கள் ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் வருபவையாகும்.

(எ. கா.)

தன்மை	முன்னிலை	படர்க்கை-ஐம்பால்	
வந்த நான்	வந்த நீ	வந்த பையன் வந்த பெண் வந்த பெரியோர்	உயர்திணை
வந்த நாம்	வந்த நீர்	வந்த மாடு வந்த மாடுகள்	அஃறிணை

வினையெச்சம் :

வந்து, சென்று, உண்டு, உண்ணாது என்பன போன்ற உடன்பாடு, எதிர்மறை வினையெச்சங்கள் ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாய் வருவனவாம்.

(எ. கா.)

தன்மை	முன்னிலை	படர்க்கை-ஐம்பால்	
வந்து நின்றேன்,	வந்து நின்றாய்,	வந்து போனான் வந்து போனாள் வந்து போயினர்	உயர் திணை
வந்து நின்றோம்,	வந்து நின்றீர்,	வந்து போயிற்று வந்து போயின	அஃறிணை

'செய்யும்' என்னும் வாய்பாட்டு வினைமுற்று :

செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று. இருதிணை நாற்பால்களுக்கும் பொதுவாய் வரும், இது படர்க்கைப் பலர்பாலிலும் முன்னிலையிலும் தன்மையிலும் வாராது.

(எ. கா.)

அவன் வரும் }
அவள் வரும் } உயர்திணை

அது வரும் }
அவை வரும் } அஃறிணை

குறிப்பு: 'நீர் உண்ணும்' என முன்னிலையில் பன்மை ஏவலாக இவ்வாய்பாட்டு வினைமுற்று வருதல் புதியன புகுதலாகும் என்க.

6. பொது வினைகள்–II

வேறு, இல்லை, உண்டு

வேறு, இல்லை, உண்டு என்னும் இந்த மூன்று குறிப்பு வினைமுற்றுக்களும் இருதிணை, ஐம்பால், மூவிடங்கட்கும் பொதுவாக வருதலின், இவை பொது வினைகளாம்.

(எ. கா.)

உயர்திணை—படர்க்கை

வேறு	இல்லை	உண்டு
அவன் வேறு.	அவன் இல்லை.	அவன் உண்டு.
		—ஆண்பால்
அவள் வேறு.	அவன் இல்லை.	அவள் உண்டு.
		—பெண்பால்
அவர் வேறு.	அவர் இல்லை.	அவர் உண்டு.
		—பலர்பால்

அஃறிணை—படர்க்கை

அது வேறு.	அஃது இல்லை.	அஃது உண்டு.
		—ஒன்றன் பால்
அவை வேறு.	அவை இல்லை.	அவை உண்டு.
		—பலவின் பால்

முன்னிலை

நீ வேறு.	நீ இல்லை.	நீ உண்டு.
நீர் வேறு.	நீர் இல்லை.	நீர் உண்டு.

தன்மை

நான் வேறு.	நான் இல்லை.	நான் உண்டு.
நாம் வேறு.	நாம் இல்லை.	நாம் உண்டு.

'வேறில்லை யுண்டைம் பான்மூ விடத்தன.'
(ந. சூ. 339)

யார்?

வினாப்பொருளைத் தரும் '**யார்**' என்னும் குறிப்பு வினைமுற்று, உயர்திணைப்படர்க்கை முப்பாலுக்கும் பொது வினையாகும்.

(எ. கா.)

அவன் யார்? அவள் யார்? அவர் யார்?

'யாரென் வினாவினைக் குறிப்புயர் முப்பால்.' (ந. சூ. 349)

(உயர் முப்பால்-உயர்திணைக்குரிய ஆண், பெண், பலர் பால்கள்)

குறிப்பு: 'நான் யார், நாம் யார், நீ யார், நீர் யார்' எனத் தன்மை முன்னிலைகளிலும், 'என் நெஞ்சம் யார்' என அஃறிணையிலும் வருதல் புதியன புகுதலாம்.

எவன்?

வினாப்பொருளைத் தரும் **எவன்** என்னும் குறிப்பு வினைமுற்று அஃறிணை இரு பாலுக்கும் பொது வினையாகும்.

(எ. கா.)

அஃது எவன்? அவை எவன்?

'எவனென் வினாவினைக் குறிப்பிழி யிருபால்.'
(ந. சூ. 350)

(இழி இருபால்-அஃறிணைக்குரிய ஒன்றன்பால், பலவின்பால்)

'எவன்' என்னும் பொதுக் குறிப்பு வினை முற்று 'என், என்ன, என்னை' என்று விகாரப் பட்டும் வரும். இங்கு வந்துள்ள எவன் என்பது உயர்திணை ஆண்பாலை உணர்த்தும் வினாப் பெயர் அன்று. (யார் என்பது உயர்திணைப் பொதுவினை; எவன் என்பது அஃறிணைப் பொதுவினை.)

7. காலங்காட்டும் உறுப்புக்கள்

தெரிநிலை வினைச்சொற்கள் வெளிப்படை யாகக் காலங்காட்டுபவை. வினைச்சொல்லிற் குரிய **பகுதி**, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, **விகாரம்** என்னும் வினையுறுப்புக்கள் ஆறனுள் **இடைநிலை** என்னும் உறுப்பு, இறந்த காலம், **நிகழ்காலம்**, எதிர்காலம் என்னும் மூவகைக் காலங்களைக் காட்டும். இவ்வாறு இடைநிலைகள் காலங்காட்டுதலேயன்றிச் சிறுபான்மை, பகுதி விகுதி ஆகிய உறுப்புக்களுள் ஒன்று காலங் காட்டு தலும் உண்டு.

காலம் காட்டும் இடைநிலைகள் :

இறந்த கால இடைநிலைகள்

செய்தான்—செய் + த் + ஆன்—த்
உண்டான்—உண் + ட் + ஆன்—ட்
தின்றான் —தின் + ற் + ஆன்—ற்
ஓடினான் —ஓடு + இன் + ஆன்—இன்

த், ட், ற், இன்—இவை இறந்த கால இடை நிலைகள்.

இவற்றுள் **இன்** இடைநிலை 'சொல்லி யது (சொல் + இ + அ + து) எனக் கடைகுறைந்தும்,

சொன்னது (சொல்+ன்+அ+து) என முதல் குறைந்தும் வரும். இவ்விடைநிலைகள் ஐம்பால் மூவிடங்களிலும் வரும்.

'தடறவொற் றின்னே ஐம்பால் மூவிடத்
திறந்த காலந் தருந்தொழி லிடைநிலை.'

(ந. சூ. 142)

நிகழ்கால இடைநிலைகள்

நடவாநின்றான் — நட + ஆநின்று + ஆன் —ஆநின்று

நடக்கின்றான்—நட+கின்று+ஆன்—கின்று

நடக்கிறான் —நட+கிறு +ஆன்—கிறு

(ஆநின்று, கின்று, கிறு—இவை நிகழ்கால இடைநிலைகள். இவை ஐம்பால் மூவிடங்களிலும் வரும்.)

'ஆநின்று கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழு தறைவினை இடைநிலை.'

(ந. சூ. 143)

(அறை - கூறுகின்ற)

எதிர்கால இடைநிலைகள்

உண்பான்—உண்+ப்+ஆன்—ப்

பாடுவான்—பாடு+வ்+ஆன்—வ்

(ப், வ்—இவை எதிர்கால இடைநிலைகள். இவை ஐம்பால் மூவிடங்களிலும் வரும்.)

'பவ்வ மூவிடத் தைம்பால் எதிர்பொழு
திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில.'

(ந. சூ. 144)

(இவை சில இல—இம்முக்கால இடைநிலைகளும் சில முற்று வினை, எச்சவினைகட்கு இல்லை.)

இந்தச் சூத்திரத்தின் இறுதியில் 'இவை சிலவில' என்று வந்திருப்பதால், சில வினை

முற்றுக்களில் காலத்தைப் பகுதியாயினும் விகுதி யாயினும் வேறு இடைநிலையாயினும் காட்டும் என்பது பெறப்படும்.

காலங்காட்டும் விகுதிகள் :

று, றும் ; து, தும் ; டு, டும் ; கு, கும் ; மின், ஈர், உம், ஆய் ; க, இய, இயர் ; இ, மார் ; ப ; உம் ; ஆ—இவை காலங்காட்டும் விகுதி களாகும்.

இவற்றுள் று, றும், து, தும் என்பன இறந்த காலத்தையும், எதிர் காலத்தையும் காட்டும்.

(எ. கா.)

சென்று	— சென்றேன்	— று	இறந்த காலம்
சென்றும்	— சென்றோம்	— றும்	
சேறு	— செல்வேன்	— று	எதிர் காலம்
சேறும்	— செல்வோம்	— றும்	
வந்து	— வந்தேன்	— து	இறந்த காலம்
வந்தும்	— வந்தோம்	— தும்	
வருது	— வருவேன்	— து	எதிர் காலம்
வருதும்	— வருவோம்	— தும்	

டு, டும் என்பன இறந்த காலத்தை மட்டும் காட்டும்.

(எ - கா.)

உண்டு	— உண்டேன்	— டு	இறந்த காலம்
உண்டும்	— உண்டோம்	— டும்	

கு, கும் என்பன எதிர் காலத்தை மட்டும் காட்டும்.

(எ. கா.)

உண்கு — உண்பேன் — கு } எதிர் காலம்
உண்கும் — உண்போம் — கும் }

(இவற்றுள், கு, டு, து, று என்பன தன்மை ஒருமையிலும், கும், டும், தும், றும் என்பன தன்மைப் பன்மையிலும் வரும் என்பதை அறிக.)

மின், ஈர், உம், ஆய் எனும் முன்னிலை ஏவல் விகுதிகளும், வியங்கோள் வினைமுற்று விகுதி களான க, இய, இயர் என்பனவும், இகர விகுதி யும், மார் என்னும் விகுதியும் எதிர் காலத்தை மட்டும் காட்டும்.

(எ. கா.)

ஏவல் :

உண்மின் — மின்
உண்ணீர் — ஈர்
உண்ணும் — உம்
உண்ணுய் — ஆய்
} எதிர் காலம்

வியங்கோள் :

வாழ்க — க
வாழிய — இய
வாழியர் — இயர்
} எதிர் காலம்

இ, மார் :

சேறி — (செல்வாய்) இ
உண்மார் — (உண்பார்) மார்
} எதிர் காலம்

'ப' என்னும் விகுதி இறந்த காலத்தை யும் எதிர்காலத்தையும் காட்டும்.

(எ. கா.)

என்ப —என்றூர் —இறந்த காலம்
என்பர் —எதிர் காலம்

'உம்' எனப்படும் செய்யும் என்னும் வாய்பாட்டு வினைமுற்று விகுதி, நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய இரண்டனையும் காட்டும்.

(எ. கா.)

உண்ணும்—உண்கிருன்—நிகழ்காலம்
உண்பான் —எதிர் காலம்

(இது படர்க்கைப் பலர் பாலில் வாராது)

'ஆ' என்னும் எதிர்மறை விகுதி மூன்று காலங்களையும் காட்டும்.

(எ. கா.)

உண்ணு—ஆ. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்றற்கும் பொது.

'றவ்வொ டுகரவும் மைநிகழ் பல்லவும்,
தவ்வொ டிறப்பும் எதிர்வும், டவ்வொடு
கழிவும், கவ்வோ டெதிர்வும்,மின் ஏவல்
வியங்கோள் இம்மார் எதிர்வும் பாந்தம்
செலவொடு வரவும், செய்யுநிகழ் பெதிர்வும்,
எதிர்மறை மும்மையும் ஏற்கும் ஈங்கே.' (ந. சூ. 145)

(கழிவு - இறந்த காலம். பாந்தம் (ப+அந்தம்)—பகர விகுதி. செலவொடு வரவும்—இறந்த காலமும் எதிர் காலமும். செய்யும்—செய்யுமென்னும் வாய்பாட்டு வினைமுற்று.)

குறிப்பு: 'ஈங்கே' என்ற மிகையால், காண்டும் (காண் போம்) என டும் விகுதி எதிர் காலம் காட்டுதலையும், வருதி (வருகின்ருய்) என இ விகுதி நிகழ்காலம் காட்டுதலையும் உணர்க.

காலங்காட்டும் பகுதிகள் :

கு, டு, று என்னும் மூன்று உயிர்மெய்யீற்றுக் குறிலிணைப் பகுதிகள், விகுதிகளை ஏற்கும் பொழுது, தம் ஒற்று இரட்டித்து இறந்த காலம் காட்டும்.

(எ. கா.)

புக்காள் — புகு (புக்கு) + ஆள்
தொட்டாள் — தொடு (தொட்டு) + ஆள்
பெற்றாள் — பெறு (பெற்று) + ஆள்

இவற்றுள் **புகு, தொடு, பெறு** என்னும் குறிலிணைப் பகுதிகளிலுள்ள கு, டு, று என்னும் உயிர்மெய்யீறுகள் **ஆள்** எனும் விகுதி ஏற்கும்பொழுது, **க**கர, **ட**கர, றகர மெய்கள் இரட்டித்து இறந்த காலம் காட்டின.

காலம் காட்டும் வேறு இடைநிலைகள் :

ய்—என்னும் இடைநிலை **இறந்த காலத்தை**யும், **ஆகிடந்து, ஆவிருந்து** என்னும் இடைநிலைகள் **நிகழ்காலத்தை**யும், **க்**—என்னும் இடைநிலை **எதிர் காலத்தை**யும் காட்டும்.

இசின் என்னும் இடைநிலை இறந்த காலத்தையும், **ம், மன்** என்பன எதிர்காலத்தையும் காட்டும். இவை செய்யுளுக்குரியவை.

(எ. கா.)

ய்	—போயது	— இறந்த காலம்
ஆகிடந்து—உண்ணாகிடந்து		நிகழ்காலம்
ஆவிருந்து—உண்ணாவிருந்தான்		நிகழ்காலம்
க்	—செய்கேன்	— எதிர்காலம்

இசின்—என்றிசினோர்-இறந்த காலம்		செய்யுளுக்கு உரியவை.
ம் —என்மர்	எதிர் காலம்	
மன் —என்மனார்		

பயிற்சி வினாக்கள் :

1. வினைமுற்றில் காலங்காட்டும் உறுப்புக்கள் எவை?
2. எதிர் கால இடைநிலைச் சூத்திரத்தின் ஈற்றில் உள்ள 'இவை சிலவில' என்பதனால் பெறப்படுவது யாது?
3. காலங்காட்டும் விகுதிகள் யாவை?
4. இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய முக்காலங்களையும் காட்டக்கூடிய விகுதிகளைப் பின் வருமாறு கட்டம் அமைத்துக் காட்டுக.

இறந்த காலம்	நிகழ்காலம்	எதிர்காலம்

5. நிற்றி, காண்மின், செய்தும், என்ப, காண்டும், ஆயது, செய்யாகிடந்தான், பாடுகேன்—என்பவை எக்காலத்திற்குரிய வினைமுற்றுக்களாகும்?
6. காலம்காட்டும் பகுதிகளுள் பாடத்தில் வாராத வேறு சிலவற்றை எடுத்தெழுதி, அவை காலம் காட்டுமாற்றை விளக்குக.
7. காலம் காட்டும் வேறு இடைநிலைகளுள் செய்யுளுக்கு மட்டும் உரியவை எவை?

8. சினை வினை—முதல் வினை

பூ, கிளை, கண், கால் — சினைப்பெயர்கள்.
செடி, மரம், மனிதன் — முதற்பெயர்கள்.

சினைப்பெயரும், அச்சினையின் முதற்பெயரும் சேர்ந்து வரும் சொற்றொடர்களில், சினைப்

பெயரின் தொழிலைக் குறிக்கும் வினைச்சொல் **சினை வினை** எனவும், முதற்பெயரின் தொழிலைக் குறிக்கும் வினைச்சொல் **முதல் வினை** எனவும் கூறப்படும். (சினை - உறுப்பு. முதல் - உறுப்பினை யுடையது.)

சினை வினை

பூ உதிர்ந்தது, கிளை முரிந்தது, கண் துடித்தது, கால் உதைத்தது—இவற்றுள் உதிர்ந்தது, முரிந்தது, துடித்தது, உதைத்தது என்பன முறையே பூ, கிளை, கண், கால் என்னும் சினைப் பெயர்களின் தொழில்களைக் குறிப்பதால், இவை **சினை வினைகள்** எனப்படும்.

முதல் வினை

செடி வீழ்ந்தது, மரம் சாய்ந்தது, மனிதன் ஓடினான்—இவற்றுள், வீழ்ந்தது, சாய்ந்தது, ஓடினான் என்பன முறையே செடி, மரம், மனிதன் என்னும் முதற்பெயர்களின் தொழில்களைக் குறிப்பதால், இவை **முதல் வினைகள்** எனப்படும்.

பூ உதிர்ந்தது —சினைப்பெயர் சினை வினை பெற்றது.

மரம் சாய்ந்தது—முதற்பொருள் முதல் வினை பெற்றது.

சினையும் முதலும்

பூ மலர்ந்து உதிர்ந்தது. இத்தொடரில் மலர்ந்து உதிர்ந்தது என்பவை இரண்டும் சினை வினைகள். மலர்ந்து என்னும் சினை வினை, உதிர்ந்தது என்னும் சினை வினையைக் கொண்டு முடிந்தது.

கந்தன் கால் ஒடிந்து விழுந்தான்—இத் தொடரில் ஒடிந்து என்னும் வினை கால் என்னும் சினைப்பெயருக்கு உரியது ஆகலின், அது சினை வினை. வீழ்ந்தான் என்னும் வினை கந்தன் என்னும் முதற்பெயருக்குரிய வினையாதலின், அது முதல் வினை. இங்கு ஒடிந்தது என்னும் சினை வினை வீழ்ந்தான் என்னும் முதல் வினையைக் கொண்டு முடிந்தது.

இவற்ருல், சினை வினை சினை வினையோடு முடிதலேயன்றி, முதல் வினையுடனும் முடியும் என்பது தெரிகிறது.

'சினைவினை சினையொடும் முதலொடுஞ் செறியும்.'

(ந. சூ. 345)

பயிற்சி வினுக்கள்:

1. 'சினை, முதல்' என்பவை யாவை?
2. சினை வினை, முதல் வினை—வேறுபாடு யாது?
3. முதல் வினையும் சினை வினையும் இணைந்து வருதலை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

9. எல்லாவிடத்தும் வரும் அசைச்சொற்கள்

தனித்து நிற்கும் ஆற்றலின்றிப் பெயர் வினைகளோடு சேர்ந்து நின்று பொருள் தரும் இடைச்சொல்லைச் சேர்ந்தது அசைச்சொல். இவ்வாறு தன் பொருளுணர்த்தாது பெயரையோ வினையையோ சார்ந்து நிற்கும் இடைச்சொற்களுள் யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஒரும், போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான்,

கின்று, நின்று என்பவை இருபதும் எல்லாவிடங்களிலும் வரக்கூடிய அசைச்சொற்களாகும்.

(எ. கா.)

யாபன்னிருவர் மாணுக்கர்	— யா
இவளிவட் காண்டிகா	— கா
ஆயனை யல்லே பிற	— பிற
பிறக்கதனுட் செல்லான்	— பிறக்கு
இருங்குயில் ஆலுமரோ	— அரோ
பிரியின் வாழாதென்போ	— போ
விளிந்தன்று மாது	— மாது
கண்டிகு மல்லமோ	— இகும்
ஈங்கா கியவாலென்றுசின்	— சின்
அது பெறலருங் குரைத்தே	— குரை
அஞ்சுவ தோரு மறனே	— ஓரும்
வருந்தினை போலும்	— போலும்
நனவென் றெழுந்திருந்தேன்	— இருந்து
நெஞ்சம் பிளந்திட்டு	— இட்டு
சேவடி சேர்துமன்றே	— அன்று
பணியுமாம் என்றும்	— ஆம்
குழைதருந்தாம்	— தாம்
நீதான்	— தான்
ஆசைப்பட்டிருக்கின்றேன்	— கின்று
ஊரினின்று வந்தான்	— நின்று

குறிப்பு: 'ஆசைப்பட்டிருக்கின்றேன்' என்பது 'ஆசைப் பட்டேன்' என்றும், 'ஊரினின்று' என்பது 'ஊரின்' என்றும் பொருள்படுமிடத்து, கின்று, நின்று என்பவை அசை நிலைகள்.

'யாகா பிறபிறக் கரோபோ மாதிகுஞ்
சின்குரை யோரும் போலு மிருந்திட்
டன்றுந் தாந்தான் கின்றுநின் றசைமொழி'

(ந. சூ. 441)

பயிற்சி வினுக்கள்:

1. அசைச்சொற்கள் சொல் வகையில் எதனைச் சேரும்?
2. யா, போ, பிற, மாது, ஒரும், அன்று, ஆம் என்பவை அசைச்சொற்களாதல் எங்ஙனம்?
3. மூவிடங்களிலும் வரும் பொதுவான அசைச்சொற்கள் எத்தனை? அவற்றில் ஐந்தனைக் கூறுக.

10. பெயர், வினை, இடை, உரிச்சொற்கள்

எல்லாச் சொற்களும் பொருள் குறித்தே வரும். அவை வெளிப்படையாகவும் குறிப்பாகவும் பொருள் உணர்த்தும். இத்தகைய சொற்கள் நான்கு வகைப்படும். அவை, 1. பெயர்ச் சொல், 2. வினைச்சொல், 3. இடைச்சொல், 4. உரிச்சொல் என்பனவாகும்.

1. பெயர்ச்சொல்

ஒரு பொருளின் பெயரை உணர்த்தும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். வினையாலணையும் பெயர் அல்லாத பெயர்கள் காலங்காட்டா. பெயர்ச் சொற்கள் எட்டு வேற்றுமையும் சார்தற்கு இடனாய், இருதிணை, ஐம்பால், மூவிடத்திலும் ஒன்றனை ஏற்பனவும், பலவற்றினை ஏற்பனவும் ஆகி வரும்.

பெயர்ச்சொற்கள், பொருட்பெயர், இடப் பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப் பெயர் (பண்புப்பெயர்), தொழிற்பெயர் என

அறுவகையாகவும், ஆகுபெயர், வினையாலணை யும் பெயர், இடுகுறிப் பொதுப் பெயர், இடுகுறிச் சிறப்புப் பெயர், காரணப் பொதுப் பெயர், காரணச் சிறப்புப் பெயர் எனப் பல்வேறு வகைப் பட்டும் வரும். இவற்றைப் பற்றியெல்லாம் முன் வகுப்புக்களில் படித்துள்ளீர்கள்.

பெயர்ச்சொற்கள் 'இடுகுறி, காரணக்குறி', என்னும் இரண்டும் மரபோடும் ஆக்கத்தோடும் தனித்தனி கூடி, 1. இடுகுறி மரபுப் பெயர், 2. காரணக்குறி மரபுப் பெயர், 3. இடுகுறி ஆக்கப் பெயர், 4. காரணக்குறி ஆக்கப் பெயர் என நான்கு வகைப்படும்.

(மரபாவது, தொன்று தொட்டு வழங்கி வருவது. ஆக்கமாவது, புதிதாகப் புலவர்களால் உண்டாக்கப்பட்டு வருவது).

மரம், பனை, தென்னை—இடுகுறி மரபு.

அவன், அவள், பறவை—காரணக்குறி மரபு.

" மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேல் முட்டைக்குங் காடு "

என்னும் பொய்யா மொழிப் புலவரின் பாட்டில் வேட்டுவக் குமரன் பெயரை 'முட்டை' என்று கூறியது இடுகுறியாக்கம். (கடவுள் பெயரை மனிதர்கட்கும் விலங்குகட்கும் இட்டு வழங்குதலும் இடுகுறியாக்கத்தின்பாற்படும்.)

பொன்னன், பூணன்—இவை காரணக்குறி ஆக்கம். இடையிலே புலவர்கள் ஆக்கிக் கொண்டமையால் இவை காரணக் குறியாக்கம் எனப்பட்டன.

மரம் முதலிய இடுகுறிப் பெயரும், அவன் முதலிய காரணப் பெயரும் தொன்று தொட்டு வருவன. முட்டை முதலிய இடுகுறிப் பெயரும் பொன்னன் முதலிய காரணப் பெயரும் இடையில் ஒருவரால் ஆக்கப்பட்டு வருவன.

(எ. கா.)

முருகன், மரம், மக்கள்	— பொருட்பெயர்கள்
நாடன், வெற்பன்	— இடப்பெயர்கள்
தையான், விசாகன்	— காலப்பெயர்கள்
பல்லன், பெருவயிற்றன்	— சினைப்பெயர்கள்
அறிஞன், பெரியன்	— பண்புப்பெயர்கள் (குணப் பெயர்கள்)
ஓதுவான், ஈவான்	— தொழிற்பெயர்கள்
ஒருவன், ஒருத்தி	— எண்ணுப்பெயர்கள்
யான், நான்	— தன்மை ஒருமைப் பெயர்கள்
யாம், நாம்	— தன்மைப்பன்மைப் பெயர்கள்
நீ	— முன்னிலை ஒருமைப் பெயர்
நீயிர், நீவிர், நீர், எல்லீர்	— முன்னிலைப்பன்மைப் பெயர்கள்
அவன், இவன், உவன்	— சுட்டுப்பெயர்கள்
எவன், யாவன்	— வினாப்பெயர்கள்
நமன், நுமன்	— கிளைப்பெயர்கள்
தாய், தந்தை, மாமன்	— முறைப்பெயர்கள்
மண், கல்	— இடுகுறிப்பெயர்கள்

முக்காலி, பறவை	— காரணப்பெயர்கள்
முள்ளி, பொடி	— காரண இடுகுறிப் பெயர்கள்
விலங்கு, மரம்	— இடுகுறிப் பொதுப் பெயர்கள்
வாழை, சிங்கம்	— இடுகுறிச் சிறப்புப் பெயர்கள்
மீன், அணி	— காரணப் பொதுப் பெயர்கள்
வாளை, வளையல்	— காரணச் சிறப்புப் பெயர்கள்

காலங்காட்டும் பெயர்:

பெயர்ச்சொற்களுள் வினையால் அணையும் பெயர் ஒன்று மட்டும் காலங்காட்டும். பிற பெயர்கள் காலங்காட்டா.

பாடினவன் — இறந்த காலம்
பாடுகிறவன் — நிகழ்காலம்
பாடுபவன் — எதிர்காலம்

வினையாலணையும் பெயர்கள் முக்காலமும் காட்டின.

(குறிப்பு: நடந்தமை, நடக்கின்றமை, செய்வது போன்ற சில தொழிற்பெயர்களும் காலம் காட்டும்.)

'இடுகுறி காரணம் மரபோ டாக்கம்
தொடர்ந்து தொழிலல காலந் தோற்ரு
வேற்றுமைக் கிடனய்த் திணைபா லிடத்தொன்
றேற்பவும் பொதுவு மாவன பெயரே.' (ந. சூ. 275)

காலங்காட்டாப் பிற பெயர்கள்:

முருகன் — முதல் வேற்றுமை
முருகனை — ஐ–2ஆம் வேற்றுமை

முருகனுல் — ஆல்-3ஆம் வேற்றுமை
முருகனுக்கு — கு-4ஆம் வேற்றுமை
முருகனின் — இன்-5ஆம் வேற்றுமை
முருகனது — அது-6ஆம் வேற்றுமை
முருகன்கண்— கண்-7ஆம் வேற்றுமை
முருகா — விளி-8ஆம் வேற்றுமை

இந்த உயர்திணை ஆண்பாற்பெயரைப் போலவே, வள்ளி என்னும் உயர்திணைப் பெண்பாற்பெயரும், மக்கள் என்னும் உயர்திணைப் பலர்பாற்பெயரும், ஆடு என்னும் அஃறிணை ஒன்றன்பாற்பெயரும், ஆடுகள் என்னும் அஃறிணைப் பலவின்பாற்பெயரும், படர்க்கை இடத்துக்குரியனவாய், எட்டு வேற்றுமை உருபுகளையும் ஏற்று நிற்கும்.

இவை தவிர அஃறிணையில் இருபால்களுக்கும் பொதுவாக வரும் 'பறவை வந்தது, பறவை வந்தன' என வரும் பால்பகா அஃறிணைப்பெயர்களும்; இருதிணைப் பொதுப்பெயர்களாக வரும் முதற்பெயர் நான்கும்; சினைப்பெயர் நான்கும்; சினையையும் முதலையும் ஒருங்கு பற்றி வரும் பெயர் நான்கும்; தந்தை, தாய் எனவரும் முறைப் பெயர் இரண்டும்; நான், யான், நாம், யாம் என்னும் தன்மைப் பெயர் நான்கும்; நீ, நீர், நீயிர், நீவிர், எல்லீர் என்னும் முன்னிலைப் பெயர் ஐந்தும்; எல்லாம், தாம், தான் என்பனவும்; சூரியன் சந்திரன், ஊமை போன்றவைகளும் திணை, பால், இடப் பொதுப்பெயர்களாக வரும்.

'முதற்பெயர் நான்கும் சினைப்பெயர் நான்கும்
சினைமுதற் பெயரொரு நான்குமுறை யிரண்டும்

**தன்மை நான்கும் முன்னிலை யைந்தும்
எல்லாம் தாம்தான் இன்னன பொதுப்பெயர்.'**
(ந. சூ. 282)

2. வினைச்சொல்

ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படுவது போல, ஒரு பொருளின் தொழிலைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும்.

படித்தான், எழுதுகிருள், பறந்தன, ஓடியது போன்றவை, பொருள்களின் வினையை (தொழிலை) உணர்த்துவதால், வினைச் சொற்களாகும். (வினை, தொழில், செயல் என்பன ஒரே பொருள் தரும் பல சொற்களாம்.)

வினைச்சொல் வேற்றுமை உருபுகளை ஏற்காமல் இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்னும் மூன்று காலங்களையும் காட்டும். இது **தெரிநிலை வினை**, **குறிப்பு வினை** என இரண்டு வகைப்படும். காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது தெரிநிலை வினையாம். காலத்தைக் குறிப்பாகக் காட்டுவது குறிப்பு வினையாம்.

தெரிநிலை வினை :

கருத்தா, கருவி, நிலம், தொழில், காலம், செயப்படு பொருள் என்னும் ஆறு வகைப் பொருளையும் காட்டுவது தெரிநிலை வினைச்சொல்லாம். (கருவி - காரணம். நிலம் - இடம்.)

வனைந்தான்.

கருத்தா	— குயவன்
கருவி	— மண், கோல், சக்கரம்

நிலம் — வனையும் இடம்
தொழில் — வனைதல்
காலம் — இறந்த காலம்
செயப்படுபொருள் — குடம் முதலியவை.

இவ்வாறு இந்த ஆறு பொருளையும் தருவது '**செயப்படுபொருள் குன்றாத வினை**' எனப்படும்.

'**வந்தது**' என்பதைப் போன்ற வினைகள் '**செயப்படுபொருள் குன்றிய வினை**' எனப்படும். இவ்வினை செயப்படுபொருள் ஒழிந்த மற்ற வற்றைக் காட்டும்.

தெரிநிலை வினைச்சொல் '**முற்று, எச்சம்**' என இரு வகைப்படும். தெரிநிலை வினை முற்றில் பகுதி யால் செயலும், இடைநிலையால் காலமும், விகுதி யால் செய்பவனும் வெளிப்படையாய்த் தெரியும். கருவி, நிலம், செய்பொருள் ஆகிய மூன்றும் குறிப் பாய் விளங்கும்.

'கண்டு, கண்ட' என்பன எச்சங்கள். பொருள் முடியாமல் நிற்கும் இவற்றின் பகுதியால் செயலை யும், இடைநிலையால் காலத்தையும் அறியலாம்.

தெரிநிலை வினைமுற்று ஆறு பொருள்களையும் காட்டுமாயினும், சிலவிடங்களில் ஆறில் சில குறைந்து வரவும் பெறும்.

> **' செய்பவன் கருவி நிலஞ்செயல் காலம்**
> **செய்பொரு ளாறும் தருவது வினையே.'** (ந. சூ. 320)

குறிப்பு வினை :

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்ற அறுவகைப்பெயருள் ஒன்றை அடியாகக் கொண்டு பிறந்து, செய்பவன், கருவி,

நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனுள் செய்பவன் ஒன்றையே காட்டி நிற்கும் வினை குறிப்பு வினையாம்.

(எ. கா.)

பொன் — பொருட்பெயர்
பொன்னன் — பொருளடியாகப் பிறந்த பெயர்
ஊர் — இடப்பெயர்
ஊரன் — இடமடியாகப் பிறந்த பெயர்
தை — காலப்பெயர்
தையான் — காலமடியாகப் பிறந்த பெயர்
கண் — சினைப்பெயர்
கண்ணன் — சினையடியாகப் பிறந்த பெயர்
கருமை — குணப்பெயர்—(குணம் - பண்பு)
கரியன் — குணமடியாகப் பிறந்த பெயர்
சொல் — தொழிற்பெயர்
சொல்லன் — தொழிலடியாகப் பிறந்த பெயர்

இங்ஙனம் பொருள் முதல் ஆறனடியாகப் பிறந்த பெயர்கள் ஓர் எழுவாய்க்குப் பயனிலையாக வந்தால்—'அவன் பொன்னன்' என்பது போல வந்தால்—குறிப்பு வினைமுற்று எனப் படும். இங்ஙனம் வரும் குறிப்பு வினைமுற்று, கருத்தா ஒன்றையே விளக்கும். மேலும் 'அவன் பொன்னன்' என்று கூறுமிடத்து, பொன்னன் என்னும் பயனிலை, பொன்னையுடையவனுயிருந் தான், இருக்கிறுன், இருப்பான் என்று முக் காலத்தையும் குறிப்பாக உணர்த்துகின்றது.

'பொருள்முத லாறினுந் தோற்றிமுன் றுறனுள்
வினைமுதன் மாத்திரை விளக்கல்வினைக் குறிப்பே.'
(ந. சூ. 321)

(வினை முதல்-எழுவாய், கருத்தா)

மேலும், **தன்வினை, பிறவினை, செயப்படு பொருள் குன்றிய வினை, செயப்படு பொருள் குன்றா வினை, செய்வினை, செயப்பாட்டு வினை** எனத் தெரிநிலை வினை ஆறு வகைப்படும்.

தன்வினை—பிறவினை :

நான் எழுதினேன்; நீ கற்றாய்; அவள் பாடினாள்.

இவற்றில் எழுதினேன், கற்றாய், பாடினாள் என்பன முறையே நான், நீ, அவள் என்னும் கருத்தாக்கள் தாமே செய்த வினைகளாகும். எனவே, தன்மை, முன்னிலை, படர்க்கையிடத்துக் கருத்தா தானே செய்த வினை **தன்வினையாகும்.**

நான் எழுதுவித்தேன், நீ கற்பித்தாய், அவள் பாடுவித்தாள்.

இவை 'நான் பிறரை எழுதச் செய்தேன்' எனவும், 'நீ பிறரைக் கற்கச் செய்தாய்' எனவும், 'அவள் பிறரைப் பாடச் செய்தாள்' எனவும் பொருள்படுகின்றன. எனவே, 'எழுதுவித்தேன், கற்பித்தாய், பாடுவித்தாள்' என்பவை கருத்தா பிறரைக்கொண்டு செய்யும் வினையாதலின், **பிற வினையாகும்.**

(எ. கா.)

தன்வினை		பிறவினை		விகுதி
செய்	—	செய்வி	—	வி
நட	—	நடப்பி	—	பி
போ	—	போக்கு	—	கு
பாய்	—	பாய்ச்சு	—	சு
திரள்	—	திரட்டு	—	டு

தன்வினை		பிறவினை		விகுதி
படு	—	படுத்து	—	து
எழு	—	எழுப்பு	—	பு
துயில்	—	துயிற்று	—	று

தன்வினை பிறவினையாகும்போது '**வி, பி, கு, சு, டு, து, பு, று**' என்னும் இவ்வெட்டு விகுதிகளுள் ஒன்றைப் பெற்று வரும் என்பதை அறிக.

இறங்கு–இறக்கு, திருந்து–திருத்து, திரும்பு–திருப்பு, தோன்று–தோற்று—இவை போன்று சில தன்வினைகள், பிறவினைகளாகும்போது, மெல்லொற்று வல்லொற்ருய்த் திரிந்து வருதலும் உண்டு.

பழகு–பழக்கு, கூடு–கூட்டு, தேறு–தேற்று—இவை போன்று சில தன்வினைகள், பிறவினைகள் ஆகும்போது வல்லொற்று இரட்டித்து வருதலும் உண்டு.

செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்ரு வினை :

மலர்விழி சிரிக்கிருள்—சிரிக்கிருள் என்னும் வினை கருத்தாவின் தொழிலைத் தெரிவிக்கின்றது. எனவே, இது செயப்படுபொருளை ஏற்று வரவில்லை. கருத்தாவின் தொழிலைத் தெரிவித்துச் செயப்படுபொருளை ஏற்று வாராத வினை **செயப்படுபொருள் குன்றிய வினை** எனப்படும்.

ஆதிரை கரும்பைத் தின்ருள்—தின்ருள் என்னும் வினை இச்சொற்ருெடரின் பயனிலையாய் வந்துளது. அப்பயனிலையை வைத்து, '**எதைத் தின்ருள் ?**' என்று வினவிஞல், '**கரும்பை**' என

விடை வரும். எனவே, '**கரும்பை**' என்பது செயப்படுபொருள். இவ்வாறு செயப்படு பொருளை ஏற்று வரும் வினை **செயப்படுபொருள் குன்றா வினையாகும்.**

செய்வினை, செயப்பாட்டுவினை :

செங்குட்டுவன் பாட்டைப் பாடினன்—இதில் பாடினன் என்பது கருத்தா (எழுவாய்) தானே செய்த வினையாகும். எனவே, கருத்தாவின் (எழுவாய்) செயலை உணர்த்தித் திணை, பால், இட மாகியவற்றில் ஒத்து வருவன **செய்வினையாகும்.**

பாட்டுச் செங்குட்டுவனால் பாடப்பட்டது— இச்சொற்றொடரில் பாட்டு என்பது எழுவாய். எழுவாயாகிய கருத்தா தானே தன் செயலைச் செய்யவில்லை. செங்குட்டுவனால் செய்யப்பட்டது. எனவே, இவ்வாறு 'படு' என்னும் துணைவினை பெற்று, செயப்படுபொருளே எழுவாயாய் நின்று, திணை, பால், இடம் ஆகியவற்றில் ஒத்து வருவது **செயப்பாட்டு வினை** எனப்படும்.

ஐம்பால் வினைமுற்று :

வினைமுற்று	விகுதி	
நடந்தனன்	—அன்	ஆண்பால்—உயர்திணை
நடந்தான்	—ஆன்	

'அன் ஆன் இறுமொழி ஆண்பாற் படர்க்கை.'

(ந. சூ. 325)

நடந்தனள்	—அள்	பெண்பால்—உயர்திணை
நடந்தாள்	—ஆள்	

'அள் ஆள் இறுமொழி பெண்பாற் படர்க்கை.'

(ந. சூ. 326)

நடந்தனர்	– அர்	பலர்பால்—உயர்திணை
நடந்தார்	– ஆர்	
நடப்ப	– ப	
நடமார்	– மார்	

'அர்ஆர் பவ்வூர் அகரமார் ஈற்ற
பல்லோர் படர்க்கை ;மார் வினையொடு முடிமே.'
(ந. சூ. 327)

நடந்தது	– து	அஃறிணை ஒன்றன்பால் வினைமுற்று
கூவிற்று	– று	
பொருட்டு	– டு	

(பொருட்டு - பொருளை உடையது)

(து, று, டு—இம்மூன்றும் குற்றியலுகர ஈற்று விகுதிகளாகும். டு—விகுதி குறிப்பு வினைமுற்றில் மட்டும் வரும்.)

'துறுடுக் குற்றிய லுகர ஈற்ற
ஒன்றன் படர்க்கை ;டுக் குறிப்பி னாகும்.' (ந. சூ. 328)

நடப்பன	– அ	அஃறிணைப் பலவின்பால் வினைமுற்று
நடவா	– ஆ	

(ஆ—விகுதி எதிர்மறைப் பொருளுக்குரியது.)

'அஆ ஈற்ற பலவின் படர்க்கை :
ஆவே எதிர்மறைக் கண்ண தாகும்.' (ந. சூ. 329)

உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று :

நானும் நீயும் சென்றனம் — அம்

நானும் நீயும் உண்டாம் — ஆம்

'அம், ஆம்' என்னும் விகுதிகள் தன்மை இடத்துடன் முன்னிலை இடத்தையும் உளப்படுத்திக்கொண்டுள்ளன.

நானும் அவனும் உண்பெம் — எம்
நானும் அவனும் உண்பேம் — ஏம்
நானும் அவனும் உண்போம்— ஓம்

எம், ஏம், ஓம் என்னும் விகுதிகள் தன்மை இடத்துடன் படர்க்கை இடத்தையும் உளப்படுத்திக்கொண்டுள்ளன.

நானும் நீயும் அவனும் உண்கும் — கும்
நானும் நீயும் அவனும் உண்டும் — டும்
நானும் நீயும் அவனும் வருதும் — தும்
நானும் நீயும் அவனும் சேறும் —றும்

கும், டும், தும், றும் என்னும் விகுதிகள் தன்மை இடத்தோடு, முன்னிலை, படர்க்கை என்னும் இரண்டு இடங்களையும் உளப்படுத்திக் கொண்டுள்ளன.

எனவே, 'அம், ஆம்; எம், ஏம், ஓம்; கும், டும், தும், றும் என்பவை உளப்பாட்டுத் தன்மை வினை முற்று விகுதிகள் ஆகும்.

உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினைமுற்று:

முன்னிலையிடத்துச் சொல்லோடு கூடி வரும் படர்க்கை இடத்துச் சொல்லும் முன்னிலையாகும்.

நீயும் அவனும் உண்டனிர் — இர்
நீயும் அவனும் உண்டீர் — ஈர்
நீயும் அவனும் உண்மின் — மின்

இவை முன்னிலை இடத்தோடு படர்க்கை இடத்தையும் உளப்படுத்தி முன்னிலைப் பன்மை வினைமுற்றாய் முடிந்துள்ளன. இவ்வாறு அமைபவை உளப்பாட்டு முன்னிலைப் பன்மை வினை முற்று எனப்படும்.

'அம்ஆம் என்பன முன்னிலை யாரையும்,
எம்ஏம் ஓமிவை படர்க்கை யாரையும்,
உம்மூர் கடதற இருபா லாரையும்
தன்னொடு படுக்குந் தன்மைப் பன்மை.' (ந. சூ. 332)
'முன்னிலை கூடிய படர்க்கையும் முன்னிலை' (ந. சூ. 334)

எச்சத்திரிபுகள்

பெயரெச்சத்திரிபு:

ஆகும் காலம் — ஆங்காலம்
போகும் காலம் — போங்காலம்

இவற்றுள் 'ஆகும், போகும்' என்னும் செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சங்கள், 'ஆம், போம்' என ஈற்றயல் உயிர்மெய் கெட்டு வந்தன.

'தென்க டற்றிரை மிசைப்பா யுந்து'

இதில் செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சமாகிய **பாயும்** என்பதில் உள்ள '**உம்**' என்பது '**உந்து**' எனத் திரிந்து வந்தது.

இங்ஙனம் ஈற்றயல் உயிர்மெய் கெட்டும், '**உம்**' **உந்தாகத் திரிந்தும் வருவன** 'பெயரெச்**சத்திரிபுகள்**' எனப்படும்.

செய்யும் என்னும் வாய்பாட்டுப் பெயரெச்சம் ஈற்றயல் உயிர்மெய் கெட்டும், செய்யுளில் '**உம்**' '**உந்து**' ஆய்த் திரிந்தும் பெயரெச்சத்திரிபுகளாய் வரும்.

'செய்யுமெ னெச்சஈற் றுயிர்மெய் சேறலும்,
செய்யுளுள் உம்உந் தாகலும், முற்றேல்
உயிரும் உயிர்மெய்யும் ஏகலும் உளவே.' (ந. சூ. 341)

வினையெச்சத்திரிபு :

ஞாயிறு பட்டு வந்தாள்.

பட்டு என்பதில், 'பட' என்னும் 'செய'வென் வாய்பாட்டு நிகழ்கால வினையெச்சம், 'பட்டு' என்ற 'செய்து' என்னும் வாய்பாட்டு வினையெச்சமாய்த் திரிந்து வந்தது. இவ்வாறு வினையெச்ச வாய்பாடுகள் சொல்லால் திரிந்து வேறுபட்டாலும் அவற்றின் பொருள்கள் வேறுபடா.

'சொல்திரி யினும்பொருள் திரியா வினைக்குறை'
(ந. சூ. 346)

(வினைக்குறை - பெயரெச்ச வினையெச்சங்கள்)

பயிற்சி வினாக்கள் :

1. 'வினைச்சொல்' என்பது யாது? அதன் வகைகள் யாவை?
2. தெரிநிலை வினை, குறிப்பு வினைகளை எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
3. தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை —இவற்றை வேறுபாடு தோன்ற எடுத்துக்காட்டுக் களுடன் விளக்குக.
4. ஐம்பால் வினைமுற்று எத்தனை வகைப்படும்?
5. படர்க்கை வினைமுற்று விகுதிகள் யாவை?
6. எச்சத்திரிபுகள் யாவை? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

3. இடைச்சொல்

பெயர்ச்சொல்லும் ஆகாது, வினைச்சொல்லும் ஆகாது, தனித்து இயங்குதலின்றிப் பெயரை யாவது வினையையாவது சார்ந்து, அவற்றின் அகத்தும் புறத்தும், முன்னும் பின்னும், ஒன்று யினும் பலவாயினும் வந்து, அப்பெயர் வினை

களுக்கு அகத்துறுப்பாயும் புறத்துறுப்பாயும் ஒன்றுபட்டு நடக்கும் தன்மையுடையது ‘இடைச் சொல்’ ஆகும்.

1. ஐ, ஆல், கு உள்ளிட்ட ஆறு வேற்றுமை யுருபுகள்
2. விகுதி முதலிய வினையுருபுகள்
3. அன், அம், அத்து உள்ளிட்ட சாரியை உருபுகள்
4. போல, புரைய, ஒப்ப உள்ளிட்ட உவம உருபுகள்
5. தத்தம் பொருளை உணர்த்தும் ‘ஏ, ஓ’ முதலியன
6. இசை நிறையாக வருவன
7. அசை நிலையாக வருவன
8. ஒலி, அச்சம், விரைவு முதலியவற்றைக் குறிப்பால் உணர்த்துவன

ஆகிய இவ்வெட்டு வகையினவும் இடைச்சொற் களாகும்.

(எ. கா.)

1. முருகனை, முருகனால், முருகனுக்கு,

‘ஐ, ஆல், கு’ என்னும் வேற்றுமை உருபுகள் பெயரின் புறத்துறுப்பாய் வந்த இடைச்சொற் களாம்.

2. செய்தனள்—செய்+த்+அன்+அள்—த், அன், அள் என்னும் இடைநிலை, சாரியை, விகுதி ஆகியவை வினையின் அகத்துறுப்பாய் வந்த இடைச்சொற்கள்.

3. மரத்தில் ஏறினன். மரம்+அத்து+இல்—அத்து, இல் என்னும் சாரியையும் வேற்றுமையுருபும் பெயரின் புறத்துறுப்பாய் வந்த இடைச் சொற்கள்.

4. முத்துப்போல விளங்கும் பல்—'போல' எனும் உவமஉருபு பெயரின் புறத்துறுப்பாய் வந்த இடைச் சொல்.

5. அவருள் முருகனே சிறந்தவன்—ஒரு கூட்டத்தாரினின்று முருகனைப் பிரித்து நிற்கும் ஏகாரம் பிரிநிலைப் பொருளதாய்ப் பெயரின் புறத் துறுப்பாய் வந்த இடைச்சொல்.

6. படிக்கவோ வந்தாய்—'படித்தற்கன்று; விளையாடுவதற்கு' என ஒழிந்த சொற்களைத் தரும் ஒகாரம் ஒழியிசையாக வினையின் புறத்துறுப்பாய் வந்த இடைச்சொல். இவை தத்தம் பொருள் உணர்த்துவனவாகும்.

7. ஏஎ இவளொருத்தி பேடி—வேறு பொருளின்றிச் செய்யுளில் இசை நிறைத்து நிற்கும் இசை நிறையாகிய 'ஏஎ' என்பன பெயரின் முன் நின்ற இடைச்சொற்கள்.

8. காணிய வம்மினோ—வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்கும் 'ஓ' என்னும் அசைநிலை வினையின் புறத்துறுப்பாய் நின்ற இடைச்சொல்.

9. அம்மென, சோவென. கடகடவென—இவ்வாறு ஒலிக்குறிப்பைத் தருவனவும்; திடுக்கென, துண்ணென—இவ்வாறு அச்சக் குறிப்புப் பொருளைத் தருவனவும்; சரேலென, மளாரென, பொருக்கென—இவ்வாறு விரைவுக்குறிப்புப் பொருளைத் தருவனவுமாகியவை இடைச்சொற்களாம்.

'வேற்றுமை வினைசா ரியையொப் புருபுகள்
தத்தம் பொருள விசைநிறை யசைநிலை
குறிப்பெனெண் பகுதியிற் றனித்திய லின்றிப்
பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்
தொன்றும் பலவும்வந் தொன்றுவ திடைச்சொல்.'

(ந. சூ. 420)

இவையன்றிப் பின் வருவனவும் இடைச் சொற்களுடைய பொருள்களாகும்.

அ, இ, உ—என்னும் சுட்டுப்பொருளைத் தருவன.

எ, ஏ, யா, ஆ, ஓ—என்னும் வினுப் பொருளைத் தருவன.

முன், பின்—என்னும் காலப்பொருளை யும் இடப்பொருளையும் தருவன

இனி — என்னும் காலவிடங்களின் எல்லைப்பொருளைத் தருவது

தொறும், தோறும்—என்னும் இடப் பன்மைப் பொருளையும் தொழிற் பன்மைப் பொருளையும் தருவன.

வாளா, சும்மா—என்னும் பயனின் மைப் பொருளைத் தருவன

ஆவது, ஆதல், ஆயினும்—என்னும் விகற்பப்பொருளைத் தருவன

ஐயோ, அந்தோ—என்னும் இரக்கப் பொருளைத் தருவன

ஆ, அம்ம, ஓ, ஓகோ—என்னும் வியப்புப் பொருளைத் தருவன

கூகூ—என்னும் அச்சப் பொருளைத் தருவன

சீ, சிச்சீ, சை—என்னும் இகழ்ச்சிப் பொருளைத் தருவன

'தெரிநிலை தேற்ற மையமுற் றெண்சிறப்
பெதிர்மறை யெச்சம் வினாவிழை வொழியிசை
பிரிப்புக்கழி வாக்க மின்னன விடைப்பொருள்.'

(ந. சூ. 421)

(இன்னன-இவை போல்வன)

தில், அந்தில், ஆங்கு, அம்ம, மா, ஒடு, தெய்ய—இடைச் சொற்கள் :

'தில்' என்னும் இடைச்சொல் :

'அரிவையைப் பெறுகதில் அம்ம யானே.'

இதில் 'தில்' என்னும் இடைச்சொல் அரிவையைப் பெறவேண்டும் என்ற விருப்பத்தை உணர்த்துவதால் 'விழைவு'ப் பொருளது ஆகும்.

(அரிவை - பெண்.)

'பெற்ருங்கு அறிகதில் அம்மஇவ் வூரே.'

இதில், 'தில்' என்பது, 'பெற்ற காலத்தில் அறிக' என்று காலத்தை உணர்த்துவதால் காலப் பொருளது ஆகும்.

'வருகதில் அம்மஎஞ் சேரி சேர.'

இதில், 'தில்' என்பது, 'வந்தால் இன்னது செய்வேன்' எனும் ஒழிந்த சொற்களை இசைத்து நிற்பதால் ஒழியிசைப்பொருளது ஆகும்.

'தில்' என்னும் இடைச்சொல் விழைவு, காலம், ஒழியிசை ஆகிய மூன்று பொருள்களில் வரும்.

'விழைவே காலம் ஒழியிசை தில்லே.' (ந. சூ. 431)

அந்தில், ஆங்கு :

'அந்தில், கழலினன் கச்சினன்'

இதில், அந்தில் என்னும் இடைச்சொல் எந்த ஒரு பொருளையும் உணர்த்தாமல் அசைநிலையாய் உள்ளதால் அசைநிலை.

'வருமே சேயிழை அந்தில் கொழுநற்காணிய.'

இதில், 'அவ்விடத்து' என்னும் பொருளை உணர்த்துகிறது. எனவே, அந்தில் எனும் இடைச் சொல் அசைப்பொருட்டாகவும் இடப்பொருட் டாகவும் வரும்.

'ஆங்குஅத் திறனல்ல யாம்கழற'

இதில், ஆங்கு என்னும் இடைச்சொல் எப் பொருளையும் உணர்த்தாமல் அசைநிலையாய் உள்ளது.

'ஆங்காங்கு ஆயினு மாக.'

இதில் 'ஆங்கு' என்பது அவ்விடத்து என்னும் இடப்பொருளை உணர்த்துகிறது.

'ஆங்கு' என்னும் இடைச்சொல் அசை நிலையாகவும் இடப்பொருளதாகவும் வரும்.

'அந்திலாங் கசைநிலை இடப்பொரு ளவ்வே.'

(ந. சூ. 437)

'அம்ம' என்னும் இடைச்சொல்:

'அதுமற் றம்ம'

இதில், 'அம்ம' என்னும் இடைச்சொல் வேறு பொருளின்றிக் கட்டுரையில் (பேச்சு) வருவதால் 'உரையசை'ப் பொருளது ஆகும்.

'அம்ம வாழி தோழி'

இதில், 'அம்ம' என்பது, 'ஒன்று சொல்வேன்

கேள்,' என்னும் ஏவற்பொருளில் வந்ததால் கேட்பிக்கும் பொருளது.

'அம்ம' என்னும் இடைச்சொல் உரை யசையாகவும், ஏவற்பொருளதாகவும் வரும்.

'அம்ம உரையசை கேண்மினென் றருகும்.' (ந. சூ. 438)

'மா' என்னும் இடைச்சொல் :

'உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே'

இதில், 'உண்க' என்னும் வியங்கோள் வினை முற்றை அடுத்து மா என்னும் இடைச்சொல் வந்துள்ளபடியால், இஃது அசைநிலையாகும். இந்த அசைச்சொல் வியங்கோள் வினை முற்றை அடுத்து வரும்போது மட்டும் அசைநிலையாக வரும்.

'மாவென் கிளவி வியங்கோள் அசைச்சொல்.'

(ந. சூ. 439)

ஒடு, தெய்ய :

'விதைக்குறு வட்டிற் போதொடு பொதுள'

'சொல்லேன் தெய்ய நின்னொடும் பெயர்த்தே.'

இவ்விரண்டிடங்களிலும், 'ஒடு, தெய்ய' என்னும் இடைச்சொற்கள் இசைநிறைப் பொருளைத் தருகின்றன.

'ஒடுவும் தெய்யவும் இசைநிறை மொழியே.'

(ந. சூ. 436)

'ஏ, ஓ, உம், கொல், மன், மற்று, என, என்று' என்னும் இடைச்சொற்களைப் பற்றி முன் வகுப்பில் படித்தீர்கள்.

முன்னிலை அசைச்சொற்கள் :

மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ என்னும் பத்து இடைச் சொற்களும் முன்னிலையிடத்து வரும் அசைச் சொற்களாகும்.

'சிலையன் செழுந்தழையன் சென்மியாவென்று
மலையகலான் வாடி வரும்.' (மியா)
'தண்டுறை யூர காணிக வெனவே' (இக)
'கண்டது மொழிமோ' (மோ)
'சென்மதி பெரும!' (மதி)
'சொல்லிய ரத்தைநின் வெகுளி' (அத்தை)
'நீயொன்று பாடித்தை' (இத்தை)
'காணியவா வாழிய மலைச்சாரல்' (வாழிய)
'சிறிது—தவிர்ந்தீக மாளநின் பரிசில
ருய்ம்மார்.' (மாள)
'சென்றீ பெருமநிற் றகைக்குநர் யாரே.' (ஈ)
'நீயே—செய்வினை மருங்கிற் செலவயர்ந்
தியாழ' (யாழ)

இவை தவிர, எல்லாவிடத்தும் வரும் அசைச் சொற்களைப் பற்றி முன்னரே படித்தீர்கள்.

**'மியாயிக மோமதி யத்தை இத்தை
வாழிய மாளவீ யாழ முன் னிலையசை.'** (ந. சூ. 440)

பயிற்சி வினாக்கள் :

1. 'இடைச்சொல்' என்பது யாது?
2. 'தில்' என்னும் இடைச்சொல் எவ்வெப்பொருள் களில் வரும்?

3. இடைச்சொல் பொருள் தருவனவற்றுள் ஐந்தை எழுதுக.
4. 'அந்தில், ஆங்கு' என்பவை எப்பொருள்களில் வரும்?
5. வியங்கோளை அடுத்து வரும் அசைச்சொல் எது?
6. முன்னிலை அசைச்சொற்கள் யாவை?

4. உரிச்சொல்

பலவகைப்பட்ட பண்புகளையெல்லாம் தெரிவிக்கும் பெயராகி, ஒரு குணத்தையேனும், பல குணங்களையேனும் தழுவி நின்று, பெயர்ச்சொல், வினைச்சொற்களைவிட்டு நீங்காமல், செய்யுளுக்கே உரியனவாய் வருபவை 'உரிச்சொற்கள்' ஆகும்.

ஒரு குணம் தழுவிய பல உரிச்சொற்கள்:

சாலப்பேசினான், உறுமீன், தவப்பெரிது, நனி தின்றான், இடும்பைகூர் வயிறு, கழி கண்ணோட்டம்—என்பவற்றில் சால, உறு, தவ, நனி, கூர், கழி என்னும் இந்த ஆறும் மிகுதி என்னும் ஒரே குணத்தை உணர்த்தும் பல சொற்களாகும். எனவே, இவை ஒரு குணம் உணர்த்தும் பல உரிச்சொற்கள் எனப்படும்.

பல குணம் தழுவிய ஓர் உரிச்சொல்:

கடி நகர், கடி வேல், கடி மலர், கடி மார்பு, கடிப்பேய், கடியரண், கடி செலவு, கடியுண் கடவுள், கடி மணம், கடி முரசு, கடி கள், கடி வினை, கடி மிளகு எனக் 'கடி' என்னும் உரிச்சொல் காவல், கூர்மை, விரை, விளக்கம், அச்சம், சிறப்பு, விரைவு, மிகுதி, புதுமை,

ஆர்த்தல், வரைவு, மன்றல், கரிப்பு என்னும் பல குணங்களை உணர்த்தும் ஓர் உரிச்சொல் ஆகும்.

'கடி' என்பது 'கடும்பகல், கடுங்கால், கடு மான்' எனத் திரிந்தும் வரும்.

இவ்வுரிச்சொற்களைப் பற்றி முன் வகுப்புக்களில் விளக்கமாகப் படித்துள்ளீர்கள். இவை தவிர, மாற்றம், நுவற்சி, செப்பு, உரை, கரை (இடையருது உச்சரித்தல்), நொடி (பேச்சு), இசை (சொல்), கூற்று, புகறல், மொழி, கிளவி, விளம்பு, அறை, பாட்டு, பகர்ச்சி, இயம்பல் (சொல்லுதல்) என்னும் பதினறு உரிச்சொற்களும் **சொல்** என்னும் ஒரே குணத்தை உணர்த்துவனவாகும். இவை 'சால, உறு, தவ' என்பன போலன்றிப் பெயர்களை விட்டு நீங்கியும் நடக்கும்.

> 'மாற்றம் நுவற்சிசெப் புரைகரை நொடியிசை
> கூற்றுப் புகறன் மொழிகிளவி விளம்பறை
> பாட்டுப் பகர்ச்சி யியம்பல் சொல்லே.' (ந. சூ. 458)

இவற்றுடன், 'முழக்கு, இரட்டு, ஒலி, கலி, துவை, இசை, பிளிறு, இரை, இரங்கு, அழுங்கு (தேம்பி அழுதல்), இயம்பல், இமிழ், குளிறு (கிடு கிடுக்கும்), அதிர், குரை, கனை, சிலை, சும்மை, கௌவை, கம்பலை, அரவம், ஆர்ப்பு' என்னும் இருபத்திரண்டு உரிச்சொற்களும், 'அமலை, துழனி, ஓதை, கரை' முதலியனவும் ஓசை என்னும் ஒரே குணத்தை உணர்த்துவனவாகும்.

> 'முழக்கிரட் டொலிகலி யிசைதுவை பிளிறிரை
> இரக்கழுங் கியம்ப லிமிழ்குளி றதிர்குரை
> கனைசிலை சும்மை கௌவை கம்பலை
> அரவ மார்ப்போ டின்னன வோசை.' (ந. சூ. 459)

இவை தவிர,

குரு, கெழு என்னும் உரிச்சொற்கள் :

குருமணித்தாலி—(நிறமுடைய அழகிய தாலி)

கேழ்கிளர் அகலம்—(நிறம் பொருந்திய மார்பு)

இவற்றுள், 'குரு, கெழு' என்னும் உரிச்சொற்கள் நிறம் என்னும் பண்பை உணர்த்துகின்றன. 'கெழு' என்பது 'கேழ்' என விகாரப்பட்டு வந்துளது.

'குருவுங் கெழுஉம் நிறனா கும்மே.' (தொல். சொல். 303)

மல்லல் என்னும் உரிச்சொல் :

மல்லல் மால்வரை—(வளம் பொருந்திய பெருமலை)

மல்லல் என்னும் உரிச்சொல் வளம் (செழுமை) என்னும் பண்பை உணர்த்துகிறது.

'மல்லல் வளனே.' (தொல். சொல். 305)

'மழ, குழ' என்னும் உரிச்சொற்கள் :

மழ களிறு—(இளமையுடைய ஆண் யானை)

குழக்கன்று—(இளமையுடைய கன்று)

இவற்றுள், 'மழ, குழ' என்னும் உரிச்சொற்கள் இளமை என்னும் பண்பை உணர்த்துகின்றன.

'மழவும் குழவும் இளமைப் பொருள.'
(தொல். சொல். 312)

'தட, கய, நளி என்னும் உரிச்சொற்கள் :

தடக்கை — (பெருமை உடைய கை)

தடமருப்பு — (வளைந்த கொம்பு)

இவற்றுள் முன் தொடரில் தட என்னும் உரிச்சொல் பெருமை என்னும் பண்பையும், பின்

தொடரில் வளைவு (கோட்டம்) என்னும் பண்பை யும் உணர்த்துகிறது. ஆக, தட என்னும் உரிச் சொல் பெருமை, கோட்டம் என்னும் பொருள்களை உணர்த்தும்.

கயவாய் —(பெருமை பொருந்திய வாய்)
கயந்தலை—(மென்மை பொருந்திய தலை)

இவற்றுள், முன் தொடரில் 'கய' என்னும் உரிச்சொல் 'பெருமை' என்னும் பண்பையும், பின் தொடரில் 'மென்மை' என்னும் பண்பையும் உணர்த்துகிறது. ஆக, 'கய' என்னும் உரிச் சொல் பெருமை, மென்மை என்னும் பொருள்களை உணர்த்தும்.

நளி மலை —(பெருமை பொருந்திய மலை)
நளி இருள்—(செறிவு உடைய இருள்)

இவற்றுள், முன் தொடரில் 'நளி' என்னும் உரிச்சொல் 'பெருமை' என்னும் பண்பையும், பின் தொடரில் 'செறிவு' என்னும் பண்பையும் உணர்த்துகிறது. ஆக, 'நளி' என்னும் உரிச் சொல் பெருமை, செறிவு என்னும் பொருள்களை உணர்த்தும்.

'தடவும் கயவும் நளியும் பெருமை.' (தொல். சொல். 320)
'அவற்றுள்,
தடவென் கிளவி கோட்டமும் செய்யும்.'
(தொல். சொல். 321)
'கயவென்கிளவி மென்மையும் செய்யும்.'
(தொல். சொல். 322)
'நளியென் கிளவி செறிவும் ஆகும்.' (தொல். சொல். 323)

'வை' என்னும் உரிச்சொல்:

வைந்நுனி வேல்—(கூர்மையான நுனியுடைய வேல்)

'வை' என்னும் உரிச்சொல் கூர்மை என்னும் பண்பை உணர்த்துகிறது.

'வையே கூர்மை.' (தொல். சொல். 387)

'அலமரல்' என்னும் உரிச்சொல் :

'அலமரல் ஆயம்'—(சுழன்றுவரும்தோழிகள்)

'அலமரல்' என்னும் உரிச்சொல் இங்குச் 'சுழற்சி' என்னும் பொருளை உணர்த்துகிறது.

'அலமரல் தெருமரல் ஆயிரண்டும் சுழற்சி.'

(தொல். சொல். 311)

'புரை' என்னும் உரிச்சொல் :

'**புரைய மன்ற புரை**யோர் கேண்மை' (உயர்ந்தோர் நட்பு)

புரை என்னும் உரிச்சொல் 'உயர்வு' என்னும் பண்பை உணர்த்துகிறது.

'உருவுட் காகும்; புரையுயர் வாகும்.' (தொல். சொல். 302)

'கூர்ப்பு, கழிவு' என்னும் உரிச்சொற்கள் :

உப்புக் **கூர்ந்தது**, உப்புக் **கழிந்தது**.

'கூர்ப்பு, கழிவு' என்னும் உரிச்சொற்கள் உள்ளது சிறத்தல் என்னும் பொருள் தரும்.

'கூர்ப்பும் கழிவும் உள்ளது சிறக்கும்.'

(தொல். சொல். 314)

வறிது என்னும் உரிச்சொல் :

'**வறிது**நெறி ஒரீஇ' (சிறிது வழி விலகி)

'வறிது' என்னும் உரிச்சொல் இங்குச் 'சிறிது' என்னும் பொருளை உணர்த்துகிறது.

'வறிதுசிறி தாகும்.' (தொல். சொல். 336)

'தெவ்' என்னும் உரிச்சொல்:

'தெவ்வர் தேயம்' (பகைவர் நாடு)

'தெவ்' என்னும் உரிச்சொல் இங்குப் பகை என்னும் பொருளை உணர்த்துகிறது.

'தெவ்வுப்பகை ஆகும்.' (தொல். சொல். 346)

பயிற்சி வினாக்கள்:

1. உரிச்சொல்லாவது யாது?
2. ஒரு குணம் தழுவிய உரிச்சொற்கள் மொத்தம் எத்தனை?
3. ஒரு குணம் தழுவிய சால முதலிய ஆறு சொற்களுக்கும், பின் வரும் மாற்றம், நுவற்சி முதலிய பதினாறு சொற்களுக்கும் இடையேயுள்ள வேறுபாடு யாது?
4. குருத்துளி, கயவெள்ளருவி, வைவாள்—இவற்றிலுள்ள உரிச்சொற்கள் எப்பொருளில் வந்துள்ளன?
5. 'தட, கய, நளி, வை' என்னும் உரிச்சொற்கள் எவ்வெப்பண்புகளை உணர்த்தும்? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

III. பொதுவியல்

பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு வகைச்சொற்களுக்கும் பொதுவான இலக்கணம் கூறும் பகுதியாதலின், இது **பொதுவியல்** எனப் பட்டது.

1. வினா வகை

வினா ஆறு வகைப்படும். அவை **அறிவினா, அறியா வினா, ஐயவினா, கொளல் வினா, கொடை வினா, ஏவல் வினா** என்பவை.

1. ஒன்றனைப்பற்றி அறிந்திருந்தும், அது பிறர்க்குத் தெரியுமா என்பதை அறிதற்காக அதனைக் குறித்துக் கேட்பது '**அறிவினா**' ஆகும்.

(எ.கா.) ஆசிரியர், மாணவரை நோக்கி, 'இச் சொற்களுக்குப் பொருள் யாது?' என்று கேட்பது.

2. அறியாத ஒன்றனைப்பற்றி அறிந்து கொள்ளுதற்காகப் பிறரைக் கேட்பது '**அறியா வினா**' ஆகும்.

(எ.கா.) மாணாக்கன், ஆசிரியரை நோக்கி, 'இச் சொற்களுக்குப் பொருள் யாது?' என்று கேட்பது.

3. ஐயமாயிருக்கும் ஒன்றனைப்பற்றி அவ் வையத்தைத் தீர்த்துக்கொள்ளுதற்காகப் பிறரைக் கேட்பது '**ஐயவினா**' ஆகும்.

(எ.கா.) 'அங்கு நிற்பவன் வேலனா, முருகனா?' என்று கேட்பது.

4. ஒரு பொருளை வாங்குவதற்கென அப் பொருள் இருத்தலைப்பற்றிக் கேட்பது '**கொளல் வினா**' ஆகும்.

எ.கா. 'வணிகரே, பயறு உளதோ?' என்று கேட்பது.

5. ஒரு பொருளைக் கொடுத்தற்கென அப் பொருள் இருத்தலைப்பற்றிப் பிறரைக் கேட்பது '**கொடை வினா**' ஆகும்.

(எ.கா.) 'அறிவுடைநம்பிக்குப் பலகை இல்லையோ?' என்று கேட்பது.

6. ஒரு தொழிலைச் செய்யும்படி ஏவுதற்கென அத்தொழில் நிகழ்ச்சியைப்பற்றிப் பிறரைக் கேட்பது 'ஏவல் வினா' ஆகும்.

(எ.கா.) 'மலர்விழி, உண்டாயா?' என்று கேட்பது. ('உண்ணவில்லையெனின் உண்ணப்போ' என்பது.)

'அறிவறி யாமை ஐயுறல் கொளல்கொடை
ஏவல் தரும்வினா ஆறும் இழுக்கார்.' (ந. சூ. 385)
(இழுக்கார் - விலக்காமற்கொள்வர்)

2. விடை வகை

சுட்டு விடை, எதிர்மறை, நேர்விடை, ஏவல் விடை, எதிர் வினாதல், உற்றது உரைத்தல், உறுவது கூறல், இனமொழி என, விடை எட்டு வகைப்படும்.

1. 'காஞ்சிக்கு வழி யாது?' என்று வினாவிய பொழுது 'இஃது' என்பது 'சுட்டுவிடை' ஆகும்.

2. 'நீ இதனைச் செய்வாயா?' என்று வினாவிய பொழுது 'செய்யேன்' என்பது '(எதிர்) மறை விடை' ஆகும்.

3. 'நீ இதனைச் செய்வாயா?' என்று வினாவிய பொழுது, 'செய்வேன்' என்பது 'நேர் விடை' ஆகும்.

4. 'நீ இதனைச் செய்வாயா?' என்று வினாவிய பொழுது, 'நீ செய்' என்பது 'ஏவல் விடை' ஆகும்.

5. 'நீ இதனைச் செய்வாயா?' என்று வினாவிய பொழுது, 'செய்வேனோ?' என்பது 'எதிர் வினாதல் விடை' ஆகும்.

6. 'நீ இதனைச் செய்தாயா?' என்று வினவிய பொழுது, 'உடம்பு நொந்தது' என்பது '**உற்றது உரைத்தல் விடை**' ஆகும்.

7. 'நீ இதனைச் செய்வாயா?' என்று வினவிய பொழுது 'உடம்பு நோகும்' என்பது '**உறுவது கூறல் விடை**' ஆகும்.

8. 'நீ இதனைச் செய்வாயா?' என்று வினவிய பொழுது, 'மற்றையது செய்வேன்' என்பது '**இன மொழி விடை**' ஆகும்.

('மற்றையது செய்வேன்' என்பது, 'இதனைச் செய்ய மாட்டேன்' என்று மறுத்து, அதற்கு இனமாகிய 'மற்றொன்றைச் செய்வேன்' என்னும் பொருள் தருவதால், இஃது இன மொழி என்னும் விடையாயிற்று. இனமொழி-இனத்தைக் கூறுதல்.)

இந்த எட்டு வகை விடைகளுள், முதல் மூன்றும் வினவப்பட்ட வினவுக்குத் தெளிவான விடைகளாயிருத்தலின், '**செவ்வன் இறை**' எனப்படும். பின் ஐந்தும், அவ்வாறு இல்லாமல் ஏதோ ஒரு வகையில் விடைப்பொருள் தருவனவாயிருத்தலின், '**இறை பயப்பன**' எனப்படும் (இறை - விடை.)

> **'சுட்டு மறைநேர் ஏவல் வினாதல்**
> **உற்ற துரைத்தல் உறுவது கூறல்**
> **இனமொழி யெனுமெண் இறையுள் இறுதி**
> **நிலவிய வைந்துமப் பொருண்மையி னேர்ப.'**

(ந. சூ. 386)

பயிற்சி வினாக்கள் :

1. **'பொதுவியல்' என்பது யாது?**
2. **வினா எத்தனை வகைப்படும்? அவை யாவை?**

3. 'ஏவல் வினா' என்பது யாது? எடுத்துக்காட்டுடன் எழுதுக.
4. விடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. செவ்வன் இறை, இறை பயப்பன—இவற்றை விளக்குக.
6. உற்றது உரைத்தல், உறுவது கூறல் விடைகளை விளக்குக.

3. அடைமொழி

ஒரு சொல்லைச் சிறப்பிக்க அதனை அடுத்து வரும் மொழி அடைமொழி எனப்படும். பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறு பெயர்களும் அடைமொழிகளாய் வரும். அவ்வடை மொழி, 'இனமுள்ளது, இனமில்லது' என இரு வகைப்படும். உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இரு வழக்கிலும் அடைமொழி வரும். இனமுள்ளனவாயின், அடை கொடுத்தே கூற வேண்டும். இனமில்லன வாயின், அடை கொடுத்தும் கொடாதும் கூறலாம்.

உலக வழக்கு

இனமுள்ளவை	இனமில்லவை	அறுவகைப் பெயர்
பாற்குடம்	உப்பளம்	பொருள்
கொல்லை வரகு	ஊர் மன்றம்	இடம்
கார்த்திகை விளக்கு	நாளரும்பு	காலம்
பூ மரம்	இலை மரம்	சினை
செந்தாமரை	செங்காவி	குணம்
ஊதுகோல்	தோய்தயிர்	தொழில்

இவற்றுள் குடம், அளம் உள்ளிட்ட பெயர்களைப் பால், உப்பு உள்ளிட்ட பொருட்பெயர்களும்; வரகு,

மன்றம் உள்ளிட்ட பெயர்களைக் சொல்லை, ஊர் உள்ளிட்ட இடப் பெயர்களும்; விளக்கு, அரும்பு உள்ளிட்ட பெயர்களைக் கார்த்திகை, நாள் உள் ளிட்ட காலப் பெயர்களும்; மரம் என்னும் பெய ரைப் பூ, இலை உள்ளிட்ட சினைப் பெயர்களும்; தாமரை, காவி உள்ளிட்ட பெயர்களைச் செம்மை என்னும் குணப் (பண்புப்) பெயரும்; கோல், தயிர் உள்ளிட்ட பெயர்களை ஊது, தோய் என்னும் முதல் நிலைத் தொழிற்பெயர்களும் அடுத்து வந்திருக்கின்றன. இவ்வாறு அடுத்து வரும் மொழி '**அடைமொழி**' எனப்படுகிறது. இவ் வடைமொழியால் அடுக்கப்படும் மொழி '**அடை கொளி**' எனப்படும்.

இவற்றுள், அளம் எனவே, உப்பு என்பதும்; மன்றம் எனவே, ஊர் என்பதும்; அரும்பு எனவே, நாள் என்பதும்; மரம் எனவே, இலை என்பதும்; காவி எனவே, செம்மையென்பதும்; தயிர் எனவே, தோய்தல் என்பதும் தாமே வந்து பொருந்துவதால், அளம் முதலியன அடைமொழி இல்லாமலும் உப்பு, ஊர் உள்ளிட்ட பொருளாதி ஆறனையும் உணர்த்தும். உப்பில்லாத அளமும், ஊர் இல்லாத மன்றமும், நாளில்லாத அரும்பும், இலையில்லாத மரமும், செம்மையில்லாத காவியும், தோய்தல் இல்லாத தயிரும் இல்லை. எனவே, இவை இனமில்லனவாயின. இவை **இயற்கை யடைமொழி** என்றும் கூறப்படும்.

இனமுள்ளவைகளை அடை கொடாமல் கூறி ளுல், பொருள் விளங்காமல் பொதுவாக நிற்கும். குடம் என்று பொதுவாகக் கூறினுல், அது நீர்க்

குடம், எண்ணெய்க் குடம் எனப் பல வகையான குடங்களைக் குறிக்கும். பால் என்னும் அடை அடுப்பின், 'பாற்குடம்' எனப் பொருள் கொள்ளத் துணை செய்யும். இது போன்றே, வரகு, விளக்கு, மரம், கோல் எனக் கூறின், குறித்த பொருள் தாராமல் பொதுமையாக நிற்குமாதலின், அவற்றிற்கு அடைகொடுத்துக் கூறலே மரபாகும். எனவே, இவை இனமுள்ளனவாயின.

செய்யுள் வழக்கு

இனமுள்ளன	இனமில்லன	அறுவகைப் பெயர்
பொருட்பெண்டிர்	பொற்கோட்டிமயம்	பொருள்
கான்யாறு	வடவேங்கடம்	இடம்
முந்நாட்பிறை	வேனிற்கோங்கிற்பூ	காலம்
கலவமாமயில்	சிறகர் வண்டு	சினை
சிறுகோட்டுப் பெரும் பழம்	செஞ்ஞாயிறு	குணம்
ஆடரவு	முழங்குகடல்	தொழில்

'இமயம்' எனவே கோடு என்பதும்; 'வேங் கடம்' எனவே 'வடக்கு' என்பதும்; 'கோங்கு' எனவே 'வேனில்' என்பதும்; 'வண்டு' எனவே, 'சிறகு' என்பதும்; 'ஞாயிறு' எனவே, 'செம்மை' என்பதும்; 'கடல்' எனவே, 'முழங்கு' என்பதும் தாமே வந்து பொருந்துவதால், இவை இனமில்லனவாயின.

இனிப் பொருட்பெண்டிர் முதலியவற்றை அடை கொடாமல் கூறினுல், பெண்டிர், யாறு,

பிறை, மயில், கோடு, அரவு என்பன குறித்த பொருள் தாராமல் பொதுமையாக நிற்குமாதலின், இவற்றிற்கு அடை கொடுத்துக் கூறல் வேண்டும். எனவே, இவை இனமுள்ளனவாயின.

'பாவம் செய்தான் நரகம் புகுவான்,' என்றால், 'புண்ணியம் செய்தான் சுவர்க்கம் புகுவான்,' என இனத்தைத் தருதல் மட்டும் அல்லாமல், 'அவன் இது செய்தால், இது வரும் என்னும் அறிவு இல்லாதவன்,' என்னும் இன மில்லாததையும் தந்தது.

'மேலைச் சேரிச் சேவல் அலைத்தது,' என்றால், 'கீழைச்சேரிச் சேவல் அலைக்கப்பட்டது,' என இனத்தைத் தருதல் மட்டுமே அல்லாமல், 'அச் சேவலை உடையார்க்கு வெற்றியாயிற்று,' என் னும் இனமல்லாததையும் தந்தது.

ஓர் அடைமொழியும் ஒரு சினையும் ஒரு முதலுமாய் முறையே ஒன்றையொன்று சிறப்பித்து வருதலும், இரண்டு அடைமொழிகள் ஒரு முதலைச் சிறப்பித்து வருதலும் உலக வழக்காம். இரண்டு அடைமொழி ஒரு சினையைச் சிறப்பித்து வருத லும், இவ்வரம்பு கடந்து வருதலும் செய்யுளுக்கு உரிய வழக்காகும்.

1. **வேற்கை முருகன்**—ஓர் அடைமொழியும் ஒரு சினையும் ஒரு முதலுமாகி ஒன்றையொன்று சிறப்பித்து வந்தன. வேல் - கையையும், கை - முருகனையும் சிறப்பித்து நின்றன. வேல் - அடை மொழி, கை - சினை, முருகன் - முதல்.

2. **சிறு கருங்காக்கை**—இரண்டு அடை

மொழிகள் முதலைச் சிறப்பித்து வந்தன. சிறுமை, கருமை - அடைமொழிகள், காக்கை - முதல்.

இவை இரண்டும் உலக வழக்கு.

3. கருநெடுங்கண்—இரண்டு அடைமொழி கள் சினையைச் சிறப்பித்து நின்றன. கருமை, நெடுமை - அடைமொழிகள். கண் - சினை.

4. 'பெருந்தோட் சிறுமருங்குல் பேரமர்க் கண் பேதை' என வரம்பு கடந்து வந்தன. இவை இரண்டும் செய்யுள் வழக்கு.

'பொருள் முதல் ஆறும் அடைசேர் மொழியினம்
உள்ளவும் இல்லவும் ஆமிரு வழக்கினும்.' (ந. சூ. 401)

பயிற்சி வினாக்கள் :

1. 'அடைமொழி' என்பது யாது?
2. இனமுள்ளன, இனமில்லன—இவற்றை விளக்குக.
3. 'அடை கொளி' என்பது யாது?
4. இனமுள்ளனவற்றிற்கு அடை கொடுத்துக் கூறல் மரபென்பது ஏன்?
5. 'இயற்கை அடைமொழி' என்பது யாது?
6. செங்கால் நாரை—இஃது அடை கொண்டிருக்கு மாற்றை விளக்குக.

4. பொருள்கோள்

உரைநடையில் வரும் சொற்றொடர்களில் எழுவாய் முதலிலும், பயனிலை இறுதியிலும், செயப்படுபொருள் முதலியன இடையிலும் நின்று பொருள் தருமாறு, செய்யுளில் தருவதில்லை. செய் யுளில் இம்முறை மாறியும் நிற்கும். நாம் பொருள் காணும்போது எழுவாய் முதலியவைகளை உரிய இடங்களில் நிறுத்திப் பொருள் காண வேண்டும்.

இவ்வாறு செய்யுளில் சொற்களை ஏற்ற வகையில் அமைத்துப் பொருள் கொள்ளும் முறையே பொருள்கோள் எனப்படும்.

யாற்றுநீர்ப் பொருள்கோள், மொழிமாற்றுப் பொருள்கோள், நிரல்நிறைப் பொருள்கோள், விற்பூட்டுப் பொருள்கோள், தாப்பிசைப் பொருள்கோள், அளை மறி பாப்புப் பொருள் கோள், கொண்டு கூட்டுப் பொருள்கோள், அடி மறி மாற்றுப் பொருள்கோள் எனப் பொருள்கோள் எட்டு வகைப்படும்.

'யாற்றுநீர் மொழிமாற்று நிரல்நிறை விற்பூண்
தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே'

(ந. சூ. 411)

இந்த எட்டனுள் யாற்று நீர், மொழி மாற்று, தாப்பிசை, கொண்டு கூட்டு ஆகிய நான்கு பொருள்கோள்களைப்பற்றி நாம் இங்குப் படித் தறிவோம்.

யாற்றுநீர்ப் பொருள்கோள் :

'சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போற்றலை நிறுவித் தேர்ந்தநூற்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே.'

['நெற்பயிரானது அரிய கருக்கொண்ட பச்சைப் பாம்பின் வடிவம் போல நாளடைவிலே கருக்கொண்டு தங்கிப் பின்பு கதிர் விட்டு, மேன்மைக்குணமற்ற கீழ் மக்கட்குச் செல்வம் சேர்ந்தால் அவர்கள் செருக்கினால் வணக்கமின்றித் தலை நிமிர்ந்து நிற்பது போலத் தலை வணங்காமல் நேரே நின்று, (பின்பு கதிர் முற்றியதனால்) மெய்ப்பொருள் நூல்களைக் கற்றுத்

தேர்ந்தவர்கள் (மிக்க வணக்கமுடையவராயிருத்தல்) போல மிகவும் வளைந்து விளைந்தது ' என்பது இதன் பொருளாகும்.]

இச்செய்யுளில் சொல் (நெல்) என்னும் எழுவாயை முதலில் எடுத்து, அதன் தொழிலாகிய இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினை எச்சங்கள் ஒன்றையொன்று தழுவுமாறு இடையில் முறையே அமைத்து, காய்த்த என்னும் பயனிலையை இறுதியிலே கூட்டி முடித்துள்ளமையால், இது யாற்றுநீர்ப் பொருள்கோளாயிற்று.

திரும்பாமல், ஒரேமுகமாக ஓடுகின்ற ஆற்று நீரின் ஓட்டம் போலச் சொற்கள் முன் பின்னாக மாறுமல், நேராகவே பொருள் கொள்ள இருப்பது ' யாற்றுநீர்ப் பொருள்கோள் ' எனப்படும்.

' மற்றைய நோக்கா தடிதொறும் வான்பொருள்
அற்றற் றொழுகுமஃ தியாற்றுப் புனலே.' (ந. சூ. 412)

மொழி மாற்றுப் பொருள்கோள் :

' சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.'

(' காடுகள் சூழ்ந்த நாட்டையுடைய அரசனது மலைச்சுனையானது, சுரைக்காய் மிதக்க, அம்மி அமிழ, மலை போன்ற யானைக்குக் கால் நிலைக்கத்தக்க ஆழமும் முயலுக்கு நீந்தத்தக்க தன்மையதுமாகும் என்று (அறிந்தோர்) கூறுவர் ' என்பது இதன் பொருள்.)

இச்செய்யுளில் முதலடியில், ஆழ என்னும் பயனிலைக்கு ஏற்ற அம்மி என்னும் சொல் மிதப்ப என்னும் பயனிலைக்கும், 'மிதப்ப என்னும் பயனிலைக்கு ஏற்ற சுரை என்னும் சொல் ஆழ என்னும் பயனிலைக்குமாக மாற்றிக் கூறப்பட்டுள்

ளன. இரண்டாமடியில் நீத்து என்னும் பய னிலைக்கு ஏற்ற முயல் என்னும் சொல் நிலை என்ற பயனிலைக்கும், நிலை என்னும் பயனிலைக்கு ஏற்ற யானை என்னும் சொல் நீத்து என்னும் பய னிலைக்குமாக மாற்றிக் கூறப்பட்டுள்ளமை காண்க.

"**கானக நாடன் சுனை, அம்மியாழ, சுரை மிதப்ப, வரையனைய யானைக்கு நிலை, முயற்கு நீத்து என்ப,**" என மொழிகளை மாற்றிப் பொருள் கொள்ளவேண்டும். ஆதலின், இது மொழிமாற்றுப் பொருள்கோள் ஆயிற்று. எனவே, ஓரடியுள் வரும் இரண்டு எழுவாய் பயனிலைகளுள் ஒன்றற் குரிய மொழி மற்றொன்றற்கு உரித்தாமாறு மாற்றி வழங்குதலே மொழி மாற்றுப் பொருள்கோள் எனப்படும்.

> 'ஏற்ற பொருளுக் கியைபு மொழிகளை
> மாற்றியோ ரடியுள் வழங்கல்மொழி மாற்றே.'
>
> (ந. சூ. 413)

தாப்பிசைப் பொருள்கோள்:

> 'உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊனுண்ண
> அண்ணாத்தல் செய்யா தளறு.'

('சில உயிர்கள் உடம்பிலே நிற்றல் (உயிர் நற்கதியடையும் நிலை) ஊன் உண்ணாமை என்ற அறத்திலே உள்ளது. ஆதலால், ஒருவன் ஊனை உண்பானாயின், அவனையுட்கொண்ட நரகம் பின்பு ஒருகாலும் அவனை வெளி விடுவதற்கு வாய் திறவாது' என்பது இதன் பொருள்.)

இதன் நடுவில் நின்ற '**ஊன்**' என்ற சொல் 'ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை,' என முன்னும், 'ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யா தளறு,' எனப் பின்னும் கூடுதல் காண்க.

இங்ஙனம் செய்யுளின் நடுவில் நிற்கிற மொழி, ஒழிந்த முதலிலும் இறுதியிலும் சென்று பொருளைக் கூடுவது தாப்பிசைப் பொருள் கோளாகும்.

தாப்பிசை என்பதற்கு, ஊஞ்சற்கயிறுபோல நடுவில் நின்று இரு பக்கங்களிலும் செல்லும் சொல் என்பது பொருள். (தாம்பு - ஊஞ்சற் கயிறு; இசை—சொல்.)

'இடைநிலை மொழியே ஏனையி ரிடத்தும்
நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை; (ந. சூ. 416)

கொண்டு கூட்டுப் பொருள்கோள் :

'தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்
வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி
அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே
வங்கத்துச் சென்றார் வரின்.'

('மரக்கலத்திலேறிச் சென்ற தலைவர் வந்தால், மையைப் போன்ற கரிய கூந்தலையுடைய இத்தலைவியினது அழகிய மேனியிற்காணப்படுகின்ற தேங்காய் போலத் திரண்டுருண்ட வெண்மையான கோழி முட்டையை உடைத்தாற்போன்ற பசலை நிறம் நீங்கப் பெறும்,' என்பது இதன் பொருளாகும்.)

'வங்கத்துச் சென்றார் வரின், அஞ்சனத் தன்ன பைங்கூந்தலை உடையாளது மாமேனிமேல் தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட கோழி வெண்முட்டை உடைத்தன்ன பசலை தணிவாம்,' என்று கொண்டு கூட்டுக.

இவ்வாறு ஒரு செய்யுளின் அடிகள் பலவற்றிலும் சிதர்ந்து கிடக்கும் மொழிகளை எடுத்து வரிசைப்பட அமைத்துப் பொருள் கொள்வது கொண்டுகூட்டுப் பொருள்கோள் ஆகும்.

மொழி மாற்றுக்கும், கொண்டு கூட்டுக்கும் உள்ள வேறுபாடு :

இவ்விரண்டும் சொற்கள் முன் பின்னாக மாற்றப்படுதலால் ஒப்புமை உடையன. ஆயினும், ஓரடியில் உள்ள சொற்களை முன் பின்னாக மாற்றுவது மொழிமாற்றுப் பொருள்கோள் ; பல அடிகளிலும் நின்ற சொற்களை ஏற்றபடி கொண்டு கூட்டுவது கொண்டு கூட்டுப் பொருள்கோள்.

'யாப்படி பலவினும் கோப்புடை மொழிகளை
ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே' (ந. சூ. 418)

பயிற்சி வினாக்கள் :

1. 'பொருள்கோள்' என்பது என்ன?
2. பொருள்கோள்கள் மொத்தம் எத்தனை?
3. யாற்றுநீர்ப் பொருள்கோள் அமைப்பை விளக்குக.
4. 'தாப்பிசைப் பொருள்கோள்' என்பது என்ன?
5. மொழி மாற்றுப் பொருள்கோளுக்கும், கொண்டு கூட்டுப் பொருள்கோளுக்கும் உள்ள வேறுபாடு யாது?

5. உவம உருபுகள்

மதி போன்ற முகம்—இந்தச் சொற்றொடரில் 'மதி' என்பது உவமானம்; முகம் என்பது (பொருள்) உவமேயம். இரண்டிற்கும் இடையிலுள்ள போன்ற என்னும் சொல் உவம உருபு. ஒரு பொருளுடன் மற்றொரு பொருளை ஒப்பிட்டுக் கூறுவது 'உவமை' எனப்படும். உவமானச் சொல்லுக்கும் உவமேயச் சொல்லுக்கும் (பொருட் சொல்லுக்கும்) இடையில் உவம உருபு வரும்.

உவம உருபுகள் பல வகைப்படும். அவை, போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப,

இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, அன்ன, இன்ன முதலியவை ஆகும்.

(எ. கா.)

பாம்பு **போலச்** சீறினன் —போல
'தாமரை **புரையும்** காமர் சேவடி'—புரைய
'நோன்பகடு **ஒப்பக்** குழீஇ' —ஒப்ப
'செறுநர்த் தேய்த்த செல்**லுறழ்** தடக்கை'
— உறழ
'புலவுநுனிப் பகழியும் சிலையும் **மானச்** செவ்வரிக் கயல்' — மான
'விண்ணதிர் இமிழிசை **கடுப்ப**' — கடுப்ப
'செஞ்சரம் **இயையச்** செல்லுந் துரகம்'
— இயைய
'அகலிரு விசும்பிற் குறைவில் **ஏய்ப்ப**' — ஏய்ப்ப
'பொன்**நேர்** புதுமலர்' — நேர
'கண்ணொடு **நிகர்க்கும்** கழிப்பூங்குவளை'
— நிகர்ப்ப
'மாரி **அன்ன** வண்கை' — அன்ன
'யாழின் **இன்ன** வின்சொல்' — இன்ன

இவற்றுள் முதற்பத்தும் 'செய' வென்னும் வாய்பாட்டு வினையெச்சங்களாகும். '**அன்ன, இன்ன**' என்பவை குறிப்புப் பெயரெச்சங்களாகும்.

> **'போலப் புரைய ஒப்ப வுறழ**
> **மானக் கடுப்ப இயைய ஏய்ப்ப**
> **நேர நிகர அன்ன இன்ன**
> **என்பவும் பிறவும் உவமத் துருபே.'** (ந. சூ. 367)

சூத்திரத்தில் பிறவும் என்று கூறப்பட்டிருப்பதிலிருந்து போல், புரை என்னும் தொடக்கத்து

வினையடியாற்பிறத்தற்குரிய மற்றை வினையெச்ச விகற்பங்களும், பெயரெச்ச விகற்பங்களும், பொருவ, ஏற்ப, அனைய, இகல, எதிர, சிவண, மலைய முதலியவையும் உவம உருபுகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

'மதி போன்ற முகம்' என உவம உருபு பெற்று வருவது 'விரியுவமை' எனவும், 'மதி முகம்' என உவம உருபு தொக்கு வருவது 'தொகை யுவமை' அல்லது 'உவமைத் தொகை' எனவும் பெயர் பெறும்.

'உவம வுருபில துவமத் தொகையே.' (ந. சூ. 366)

பயிற்சி வினாக்கள் :

1. 'உவமை' என்பது யாது?
2. செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சங்களாய் வரும் உவம உருபுகள் ஐந்தினை எழுதுக.
3. உவமை உருபுகளைப்பற்றிய நன்னூற்சூத்திரத்தில் 'பிறவும்' என வருவதால் கொள்ளப்படும் பொருள் யாது?
4. 'விரியுவமை, தொகையுவமை' என்பன யாவை?
5. உவம உருபு நிற்கும் இடம் எது?
6. புரைய, நேர, கடுப்ப, இயைய—இவ்வுவம உருபுகட்கு எடுத்துக்காட்டுத் தருக.

IV. புணர்ச்சி

சொற்கள் ஒன்றோடொன்று சேர்வது புணர்ச்சி எனப்படும். அஃதாவது, முதலில் நிற்கும் மொழி 'நிலைமொழி' எனப்படும். அதனையடுத்து வந்து சேரும் மொழி 'வருமொழி' எனப்படும். நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடச் சேர்வது

'புணர்ச்சி' எனப்படும். இப்புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி என இரு வகைப்படும்.

1. பல, சில, பூ, தெங்கு, மரம், தேன்

பல சில என்னும் சொற்கள் புணர்தல்:

'பல, சில' என்னும் இவ்விரு சொற்களும் தமக்கு முன்னே தாம் வருமாயின், வலி இயல்பாதலும், மிகுதலும், அகரம் கெட லகர மெய் றகர மெய்யாகத் திரிதலும், இவற்றின் முன் பிற மொழிகளுள் யாதாயினும் ஒன்று வரின், அகரம் நிற்றலும் நீங்கலும் பெற்றுப் புணரும்.

பல + பல = பலபல சில + சில = சிலசில	இவை புணர்கையில் இயல்பாயின.
பல + பல = பலப்பல சில + சில = சிலச்சில	வருமொழி முதலில் உள்ள வல்லெழுத்து மிகுந்தது.
பல + பல = பல்பல சில + சில = சில்சில	நிலை மொழி ஈற்று அகரம் கெட்டது.
பல + பல = பற்பல சில + சில = சிற்சில	நிலை மொழி ஈற்று அகரம் கெட லகரம் றகரமாயிற்று.

பல + கலை = பலகலை, பல்கலை
சில + கலை = சிலகலை, சில்கலை
பல + நாள் = பலநாள், பன்னாள்
சில + நாள் = சிலநாள், சின்னாள்
பல + அணி = பலவணி, பல்லணி
சில + அணி = சிலவணி, சில்லணி

பல + ஆயம் = பலவாயம், பல்லாயம்

பல + தாழிசை = பலதாழிசை, பஃறாழிசை

பல + ஞானம் = பலஞானம், பன்ஞானம்

பல + மணி = பலமணி, பன்மணி

பல + வளை = பலவளை, பல்வளை

பல + யாழ் = பலயாழ், பல்யாழ்

இவ்வாறு 'பல, சில' என்னும் பெயர்கள் முன்னர்ப் பிற பெயர்கள் புணர்ந்தால், நிலைமொழி ஈற்றின் அகரம் இயல்பாய் நிற்பதும், அகரம் கெட்டு நிற்பதும் உண்டு.

'பலசில எனுமிவை தம்முன் தாம்வரின்
இயல்பும் மிகலும் அகரம் ஏக
லகரம் றகர மாகலும் பிறவரின்
அகரம் விகற்ப மாகலும் உளபிற.' (ந. சூ. 170)

(விகற்பம் - ஒரே புணர்ச்சியில் அகரம் கெடாது நின்றும், கெட்டும் புணர்தல்)

பூ என்னும் சொல் :

'பூ' என்னும் பெயர் முன் வல்லினம் வரின், பொது விதியால் அவ்வல்லினம் மிகுதலேயன்றி, அதற்கினமான மெல்லினம் மிகுதலும் உண்டு.

பூ + கொடி = பூக்கொடி		
பூ + சோலை = பூச்சோலை		வல்லினம் மிக்கது.
பூ + பொழில் = பூப்பொழில்		
பூ + கொடி = பூங்கொடி		
பூ + சோலை = பூஞ்சோலை		வல்லினத்திற்கினமான மெல்லினம் மிக்கது.
பூ + பொழில் = பூம்பொழில்		

'பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்.'
(ந. சூ. 200)

'தெங்கு' என்னும் சொல் :

'தெங்கு' என்னும் சொல்லின் முன், '**காய்**' என்னும் சொல் வரின், நிலைமொழி ஈற்றிலுள்ள உயிர்மெய் (கு) கெட்டு, முதல் நீளும்.

தெங்கு + காய் = தேங்காய்.

(தெங்கங்காய் (தெங்கு + அம் + காய்) என 'அம்'முச்சாரியை பெற்று வருவதும் உண்டு.)

'தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின்.'

(ந. சூ. 187)

'மரம்' என்னும் சொல் :

வேற்றுமைப் புணர்ச்சி

மரம் + அடி = மரவடி மரம் + உரல் = மரவுரல்	மகர ஈற்றின் முன் உயிர்.
மரம் + கால் = மரக்கால் மரம் + கிளை = மரக்கிளை	மகர ஈற்றின் முன் வல்லினம்.
மரம் + நார் = மரநார் மரம் + மண்டி = மரமண்டி	மகர ஈற்றின் முன் மெல்லினம்.
மரம் + யானை = மரயானை மரம் + வேர் = மரவேர்	மகர ஈற்றின் முன் இடையினம்.

'மரம்' என்னும் சொல்லின் முன் உயிர், வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய நாற் கணமும் வந்து சேரும் போது, வேற்றுமையில் ஈற்றிலுள்ள மகர மெய் கெட்டுப் பொது விதியால் உயிரீற்றுச் சொற்களைப் போலப் புணரும்.

அல்வழிப் புணர்ச்சி

மரம் + செறிந்தன = மரஞ்செறிந்தன.

மரம் + தழைக்கும் = மரந்தழைக்கும்.

அல்வழியில் '**மரம்**' என்னும் சொல்லின் முன் வல்லினம் வர, ஈற்றிலுள்ள மகரமெய் பொது விதியால் வன்மைக்கினமாகத் திரிந்து புணரும்.

'மவ்வீறு ஒற்றழிந்து உயிரீறு ஒப்பவும்,
வன்மைக்கு இனமாத் திரிபவும் ஆகும்.' (ந. சூ. 219)

மரப்பெயர் முன் :

விள + காய் = விளங்காய்
கள + கனி = களங்கனி
மா + தளிர் = மாந்தளிர்
காயா + பூ = காயாம்பூ
தேமா + காய் = தேமாங்காய்

சில உயிரீற்று மரப்பெயர்களுக்கு முன் வல்லினம் வரின், பொது விதியால் (' இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன்...') வரும் வல்லினம் மிகாது. வருமொழி வல்லினத்திற்கு இனமான மெல்லினம் (வேற்றுமையில்) மிகும்.

'மரப்பெயர் முன்னர் இனமெல் லெழுத்து
வரப்பெறு னவுமுள வேற்றுமை வழியே.' (ந. சூ. 166)

தேன் என்னும் சொல் :

தேன் + கடிது = தேன்கடிது		அல்வழி இயல்பு
தேன் + மாண்டது = தேன்மாண்டது		
தேன் + யாது = தேன்யாது		
தேன் + சுவை = தேன்சுவை		வேற்றுமை இயல்பு
தேன் + மணம் = தேன்மணம்		
தேன் + யாப்பு = தேன்யாப்பு		

இவ்வாறு, '**தேன்**' என்னும் சொல்லின் முன் வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய

மூவின மெய்களும் வருமொழி முதலில் வந்தால், வேற்றுமை, அல்வழி என்னும் இருவழியிலும் இயல்பாகும்.

தேன் + மொழி = தேன்மொழி தேமொழி		அல்வழி
தேன் + மலர் = தேன்மலர் தேமலர்		வேற்றுமை

'தேன்' என்னும் சொல்லுக்கு முன் மெல்லினம் வந்தால், வேற்றுமை அல்வழி ஆகிய இரு வழியிலும் 'இயல்பாதலேயன்றி, நிலைமொழியீற்று னகரம் கெடுதலும் உண்டு.

தேன் + குழம்பு = தேன்குழம்பு தேக்குழம்பு தேங்குழம்பு		அல்வழி
தேன் + குடம் = தேன்குடம் தேக்குடம் தேங்குடம்		வேற்றுமை

தேன் என்னும் சொல்லுக்கு முன் வல்லினம் வந்தால், வேற்றுமை அல்வழி என்னும் இரு வழியிலும் னகர மெய் இயல்பாவதேயன்றி, னகர மெய் கெட்டு வல்லினம் மிகுதலும், அதற்கு இனமான மெல்லினம் மிகுதலும் உண்டு.

'தேன்மொழி மெய்வரின் இயல்பும், மென்மை
மேவின் இறுதி அழிவும், வலிவரின்
ஈறுபோய் வலிமெலி மிகலுமாம் இருவழி.' (ந. சூ. 214)

(இரு வழி—வேற்றுமை, அல்வழி)

பயிற்சி விஞக்கள் :

1. 'புணர்ச்சி' என்பது யாது?
2. வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி—விளக்குக.
3. 'பல, சில' என்னும் பெயர்களின் முன் பிற பெயர் வரின் புணரும் வகையினை மூன்று எடுத்துக் காட்டுக்களுடன் எழுதுக.
4. 'விகற்பம்' என்பது யாது?
5. பூந்தோட்டம், பூத்தொட்டி—இவை புணர்ந்துள்ள வகையினைச் சூத்திரம் காட்டி விளக்குக.
6. தேங்காய்—பிரித்து எழுதிப் புணர்ந்த வகையினை விளக்குக.
7. மரப்பெயர் சிறப்பு விதிப்படி வேற்றுமையில் புணர்ந்திருக்கும் இரண்டு சொற்களை எடுத்தெழுதி விளக்கம் தருக.
8. தேங்குழல், தேமொழி—விதி கூறுக.

2. ணகர-னகர ஈறு, யகர-ரகர-ழகர ஈறு, லகர-ளகர ஈறு

ணகர-னகர ஈறு :

வேற்றுமைப் புணர்ச்சி

கண் + களிறு	= கட்களிறு	வல்லினம் வருதல்
மண் + பாண்டம்	= மட்பாண்டம்	
பொன் + குடம்	= பொற்குடம்	
பொன் + சங்கிலி	= பொற்சங்கிலி	

வேற்றுமையில் வல்லினம் வரின், நிலை மொழி ணகர னகர ஈறுகள் முறையே டகர றகரமாய்த் திரியும்.

மண் + மேடு	= மண் மேடு	மெல்லினம்
பொன் + மாலை	= பொன் மாலை	

மண் + வீடு = மண் வீடு		இடையினம்
பொன் + வளையல் = பொன் வளையல்		

வேற்றுமையில் மெல்லினமும் இடையினமும் வரின், நிலை மொழி ணகர னகர ஈறுகள் இயல் பாய் நிற்கும்.

அல்வழிப் புணர்ச்சி

மண் + சரிந்தது	= மண் சரிந்தது.	வல்லினம் வருதல்
பொன் + பெரிது	= பொன் பெரிது.	
மண் + ஞான்றது	= மண் ஞான்றது.	மெல்லினம் வருதல்
பொன் + மாண்டது	= பொன் மாண்டது.	
மண் + யாது	= மண் யாது?	இடையினம் வருதல்
பொன் + வலிது	= பொன் வலிது.	

அல்வழியில் நிலை மொழி ணகர னகர ஈறுகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூவினமும் வந்து புணரும்போது, இயல்பாகும்.

எனவே, வேற்றுமைப் புணர்ச்சியில் (1) ணகர னகரங்களின் முன் வல்லினம் வரின், ணகரம் டகரமாகவும், னகரம் றகாமாகவும் திரியும். (2) மெல்லினமும் இடையினமும் வந்தால் இயல்பாகும். அல்வழிப் புணர்ச்சியில் ணகர னகரங்களின் முன் மூவின மெய்கள் வரினும் இயல்பாகும்.

'ணனவல் லினம்வரட் டறவும் பிறவரின்
இயல்பு மாகும் வேற்றுமைக்கு; அல்வழிக்
கனைத்துமெய் வரினும் இயல்பா கும்மே.' (ந. சூ. 209)

ணகர-னகர ஈற்றின் கேடு:

தூண் + நன்மை = தூணன்மை		வேற்றுமை
வான் + நாடு = வானாடு		

தூண் + நன்று = தூணன்று		அல்வழி
கோன் + நல்லன் = கோனல்லன்		

இவ்வாறு, வேற்றுமையிலும் அல்வழியிலும் நிலைமொழியீற்று ணகர னகரங்களின் முன்வந்த நகரம் முறையே ணகர னகரமாகத் திரியும். அவ்வமயம் தனிக்குறிலைச் சாராமல் வரும் ணகர னகர வீறுகள் கெடும்.

'குறிலணை வில்லா ணனக்கள் வந்த
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.' (ந. சூ. 210)

யகர–ரகர–ழகர ஈறு :

அல்வழிப் புணர்ச்சி

வேய் + கடிது = வேய் கடிது. வேர் + சிறிது = வேர் சிறிது. யாழ் + பெரிது = யாழ் பெரிது.	அல்வழியில் வல்லினம் இயல்பாதல்
மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி கார் + பருவம் = கார்ப்பருவம் யாழ் + கருவி = யாழ்க்கருவி	அல்வழியில் வல்லினம் மிகுதல்

இவ்வாறு, ய ர ழ மெய்யீற்றுச் சொற்களுக்கு முன்னர், அல்வழியில் வல்லினம் வந்து புணரும் போது இயல்பாதலும், சிறுபான்மை மிகுந்து வருதலும் உண்டு.

வேற்றுமைப் புணர்ச்சி

நாய் + கால் = நாய்க்கால் தேர் + தட்டு = தேர்த்தட்டு ஊழ் + பயன் = ஊழ்ப்பயன்	வேற்றுமை

ய,ர,ழ மெய்யீற்றுச் சொற்களின் முன்னர், வேற்றுமையில் வல்லினம் வந்து புணரின் வலி மிகும்.

வேய் + குழல் = வேய்க்குழல், வேய்ங்குழல்		
ஆர் + கோடு = ஆர்க்கோடு ஆர்ங்கோடு		வேற்றுமை
குழிழ் + கோடு = குமிழ்க்கோடு குமிழ்ங்கோடு		

ய, ர, ழ மெய்யீற்றுச் சொற்களுக்கு முன்னர் வேற்றுமையில் வல்லினம் வந்து புணரின், வல்லினம் மிகுந்தும், வருமொழி வன்மைக்கின மான மெல்லினம் பெற்று உறழ்ந்தும் வருதல் விதி.

ய, ர, ழ மெய்யீறுகளின் முன் வல்லினம் வந்து புணரின், அல்வழியில் இயல்பாயும் மிக்கும், வேற்றுமையில் ஒருகால் மிக்கும், ஒருகால் வல்லின மாவது மெல்லினமாவது மிகுந்து உறழ்தலும் விதி.

'யாழ முன்னர்க் கசதப அல்வழி
இயல்பும் மிகலும் ஆகும்; வேற்றுமை
மிகலும் இனத்தோ டுறழ்தலும் விதிமேல்.' (ந. சூ. 224)

லகர—ளகர ஈறு (பொது விதி)

ல—ள முன் வல்லினம் :

கல் + கோட்டை = கற்கோட்டை	வேற்றுமை
முள் + செடி = முட்செடி	வேற்றுமை
பல் + பெரிது = பல் பெரிது. பற்பெரிது.	அல்வழி
முள் + கொடிது = முள் கொடிது. முட்கொடிது.	அல்வழி

லகர ளகர மெய்கள் வேற்றுமையில் வல்லினம் வர முறையே லகரம் றகரமாகவும், ளகரம் டகர மாகவும் திரிந்து வரும். அல்வழியில் இயல்பாயும், றகர டகரமாய்த் திரிந்தும் நிற்கும்.

ல—ள முன் மெல்லினம் :

புல் + நுனி = புன்னுனி முள் + நுனி = முண்ணுனி	வேற்றுமை
கல் + மாண்டது = கன்மாண்டது. முள் + மாண்டது = முண்மாண்டது.	அல்வழி

லகர ளகர மெய்கள் வேற்றுமை அல்வழி ஆகிய இரு வழிகளிலும் மெல்லினம் வர, லகரம் னகர மாகவும், ளகரம் ணகரமாகவும் திரியும்.

ல—ள முன் இடையினம் :

கல் + யானை = கல் யானை தோள் + வலிமை = தோள் வலிமை	வேற்றுமை
புல் + வளர்ந்தது = புல் வளர்ந்தது. முள் + வலிது = முள் வலிது.	அல்வழி

லகர ளகர மெய்கள் வேற்றுமை அல்வழி ஆகிய இரு வழிகளிலும் இடையினம் வந்து புணரின் இயல்பாகும்.

எனவே, லகர ளகர ஈறுகள் வருமொழி முதலில் வல்லினம் வர, வேற்றுமையில், றகர டகரமாய்த் திரியும்; அல்வழிப் புணர்ச்சியில் இயல்பாயும் திரிந்தும் நிற்கும்; மெல்லினம் வர, இரு வழி களிலும் னகர ணகரமாய்த் திரியும். இடையினம் வர, இரு வழிகளிலும் இயல்பாகும்.

‘ லளவேற் றுமையிற் றடவும் அல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாம் ;மெலி

மேவின் னணவும் இடைவரின் இயல்பும்
ஆகும் இருவழி யானும் என்ப.' (ந. சூ. 227)

லகர ளகர ஈறு (சிறப்பு விதி) :

கல் + தீது = கஃறீது முள் + தீது = முஃடீது	அல்வழி

தனிக்குறிலைச் சார்ந்து வரும் லகர ளகர மெய்கள் அல்வழியில் வருமொழி முதலில் தகரம் வரின், றகர டகரங்களாகத் திரிதலேயன்றி ஆய்தமாய்த் திரிந்தும் நிற்கும்.

'குறில்வழி லளத்தவ் வணையி னாய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யானே.' (ந. சூ. 228)

லகர–ளகர ஈற்றின் கேடு :

தோன்றல் + தீயன் = தோன்றறீயன் வேள் + தீயன் = வேடீயன்	அல்வழி

தனிக்குறிலைச் சாராத லகர, ளகர மெய்கள் வருமொழி முதலில் தகரம் வர, அல்வழியில் வந்த தகரம் முறையே றகரமாகவும் டகரமாகவும் திரிய, நிலைமொழி ஈற்று லகரமும் ளகரமும் கெடும்.

தோன்றல் + நல்லன் = தோன்றனல்லன் அருள் + நல்லன் = அருணல்லன்	அல்வழி
தோன்றல் + நன்மை = தோன்றனன்மை அருள் + நன்மை = அருணன்மை	வேற்றுமை

தனிக்குறிலைச் சாராத லகர ளகர மெய்கள், வருமொழி முதலில் நகரம் வர, இரு வழிகளிலும் முறையே னகர ணகரங்களாய்த் திரிய, நிலைமொழி ஈற்று லகரமும் ளகரமும் கெடும்.

கால் + குதித்து = கால்குதித்து வாள் + போழ்ந்து = வாள்போழ்ந்து	வேற்றுமை

தனிக்குறிலைச் சாராத லகர ளகர மெய்கள் வருமொழி முதலில் வல்லினம் வரின், வேற்றுமை யில் பொது விதிப்படி இயல்பாகும்.

(1) கால் + கடிது = கால் கடிது
மரங்கள் + கடிய = மரங்கள் கடிய } அல்வழி

(2) வேல் + படை = வேற்படை
வாள் + படை = வாட்படை } அல்வழி

தனிக்குறிலைச் சாராத லகர ளகர மெய்கள் வருமொழி முதலில் வல்லினம் வரின், அல்வழியில் பொது விதிப்படி இயல்பாயும் நிலை மொழி ஈறு திரிந்தும் நிற்கும்.

'குறில்செறி யாலள அல்வழி வந்த
தகரம் திரிந்தபின் கேடும்ஈ ரிடத்தும்
வருநந் திரிந்தபின் மாய்வும், வலிவரின்
இயல்பும் திரிபும் ஆவன உளபிற.' (ந. சூ. 229)

பயிற்சி வினாக்கள் :

1. மட்குடம், பொற்றட்டு, ஆணலம், கண்ணேய், பூழ்ப் பறவை, தேர்த்தட்டு, முஃடீது, கன்மழை—இவற் றைப் பிரித்து, புணர்ந்த வகையை விதி கூறி விளக்குக.

2. சேர்த்து எழுதுக :—வாள்+மாண்பு, முள்+குறை, கல்+நெரிந்தது, மண்+தலம், கல்+தீது, பால்+ சோறு—இவற்றைச் சேர்த்து எழுதி அவ்வாறு சேர்ந்தமைக்கு விதி எழுதுக.

3. ய, ர, ழ மெய்களின் முன் வல்லினம் வரின், வேற் றுமையில் எவ்வாறு புணரும்? எடுத்துக்காட்டுக்கள் தருக.

4. ல, ள மெய்களின் முன் வருமொழி முதலில் வல்லினம் வரின் வேற்றுமைப் புணர்ச்சியில் எவ்வாறு புணரும்? எடுத்துக்காட்டுக்கள் தருக.
5. ல, ள மெய்களின் முன் வருமொழி முதலில் மெல்லினம் வரின் இரு வழியிலும் எவ்வாறு புணரும்? எடுத்துக்காட்டுக்களுடன் எழுதுக.

3. செய்யுள் விகாரம்

புணர்ச்சியானது, 'இயல்பு புணர்ச்சி, விகாரப் புணர்ச்சி' என இரு வகைப்படும் என்பதையும், மெய், உயிர், உயிர்மெய், சாரியை ஆகிய இவற்றுள் ஒன்றோ பலவோ தோன்றுதலும், கெடுதலும், திரிதலும் விகாரமாம் என்பதையும் நீங்கள் படித்திருக்கிறீர்கள். இங்கே செய்யுள் விகாரங்களைப் பற்றிப் படிப்போம். செய்யுள் விகாரங்கள் வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என ஒன்பது வகைப்படும். இவ்வொன்பதும் செய்யுட்கே உரிய வாகலின், **செய்யுள் விகாரங்கள்** எனப்படும்.

வலித்தல் விகாரம் :

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்?"

இக்குறட்பாவில் 'ஈந்து' என்னும் சொல்லில் உள்ள மெல்லினமெய் எதுகை நோக்கி 'ஈத்து' என்று வல்லின மெய்யாய்த் திரிந்தது. இங்ஙனம் மெல்லொற்று வல்லொற்றாய்த் திரிந்து வருவது '**வலித்தல் விகாரம்**' எனப்படும்.

மெலித்தல் விகாரம் :

“ தண்டையின் இனக்கிளி கடிவோள்
பண்டையள் அல்லள் மானேக் கினளே.”

இப்பாவில், ‘தட்டை’ என்பதிலுள்ள வல்லின டகர ஒற்று, எதுகை நோக்கி மெல்லினமாகிய ணகர ஒன்றாய்த் திரிந்து வந்துள்ளது. இங்ஙனம் வல்லொற்று மெல்லொற்றாய்த் திரிவது **மெலித்தல் விகாரம்** எனப்படும். '(தட்டை = குறப்பெண்டிர் தினைப்புனத்தில் கிளியோட்டும் கருவி).

நீட்டல் விகாரம் :

“ பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்
அலகுடை நீழ லவர்.”

இக்குறட்பாவில் ‘நிழல்’ என்னும் சொல்லில் உள்ள ‘நி’ என்னும் குற்றெழுத்து, ‘நீ’ என்னும் நெட்டெழுத்தாய்த் திரிந்தது. இங்ஙனம் குறில் நெடிலாய் நீள்வது **நீட்டல் விகாரம்** எனப்படும்.

குறுக்கல் விகாரம் :

“——யானை
யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் தியேன்.”

இப்பாவில், ‘தீயேன்’ என்னும் சொல்லிலுள்ள ‘தீ’ என்னும் நெட்டெழுத்து, செய்யுளில் தளை கெடாமைப்பொருட்டுத் ‘தி’ என்னும் குற்றெழுத்தாய்க் குறுகியது. இங்ஙனம் நெடில் குறிலாய்க் குறுகி வருவது **குறுக்கல் விகாரம்** எனப்படும்.

விரித்தல் விகாரம் :

"சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே."

இதில், 'விளையுமே' என்பதில் **மகர** ஒற்று 'விளையும்மே' என விரிந்துள்ளது. இங்ஙனம் சொல்லில் இல்லாத எழுத்து விரிந்து நிற்பது **விரித்தல் விகாரம்** எனப்படும்.

தொகுத்தல் விகாரம் :

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு."

இக்குறட்பாவில், தொட்டது, கற்றது என வரவேண்டியவை தொட்டு, கற்று எனத் தொக்கு வந்துள்ளன. இங்ஙனம் தொக்கு வருவது **தொகுத்தல் விகாரம்** எனப்படும். (தொக்கு-மறைந்து).

முதற்குறை விகாரம் :

"மரையிதழ் புரையும் அஞ்செஞ் சீறடி."

இத்தொடரில் '**தாமரை**' என்றிருக்க வேண்டிய சொல், '**தா**' என்ற முதலெழுத்துக் குறைந்து '**மரை**' என நின்றது. இங்ஙனம் சொல்லின் முதல் எழுத்துக் குறைவது **முதற்குறை விகாரம்** எனப்படும்.

இடைக்குறை விகாரம் :

"வேதின வெரிநின் ஓதிமுது போத்து."

இந்த அடியில் '**ஓந்தி**' என அமைய வேண்டிய சொல், இடையிலுள்ள '**ந்**' என்னும் எழுத்துக் குறைந்து 'ஓதி' என வந்துள்ளது. இங்ஙனம் சொல்லின் இடை எழுத்துக் குறைந்து வருவது

இடைக்குறை விகாரம் எனப்படும். (ஓந்தி-ஓஞ்ஞன்)

கடைக்குறை விகாரம்:

"**நீல்உண் துகிலிகை கடுப்ப**"

இங்கு, '**நீலம்**' என்னும் சொல்லிலுள்ள கடையெழுத்தாகிய மகரமெய்யும், ஈற்றயலிலுள்ள அகரமும் குறைந்து '**நீல்**' என வந்துள்ளது. இங்ஙனம் சொல்லின் கடை குறைந்து நிற்பது **கடைக் குறை விகாரம்** எனப்படும்.

இவற்றுள், வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல் ஆகிய நான்கு வகை விகாரங்களும் திரிதல் விகாரத்துள் அடங்கும். விரித்தல் விகாரம் தோன்றல் விகாரத்தில் அடங்கும். முதல், இடை, கடை என்னும் மூவழிக் குறைதல் விகாரங்களும், தொகுத்தல் விகாரமும் கெடுதல் விகாரத்துள் அடங்கும், இம்மூவழிக் குறைதல் விகாரங்கள் பகாப்பதத்தில் மட்டுமே அமையும்.

'**வலித்தல் மெலித்தல் நீட்டல் குறுக்கல்**
விரித்தல் தொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி'

(ந. சூ. 155)

'**ஒருமொழி மூவழிக் குறைதலும் அனைத்தே**'

(ந. சூ. 156)

('ஒருமொழி' என்றது பகாப்பதத்தை என அறிக.)

பயிற்சி வினாக்கள்:

1. 'செய்யுள் விகாரம்' என்பது யாது?
2. செய்யுள் விகாரங்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. வலித்தல், மெலித்தல் விகாரங்களின் வேறுபாடு யாது?

4. முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை விகாரங்களுக்கு எடுத்துக்காட்டுக்கள் தருக.
5. குறுத்தாட்பூதம், சிலப்பதிகாரம், சிறியிலை, மனித்தப் பிறவி, நாடுகென—இவற்றிலுள்ள விகாரங்களைக் குறிப்பிடுக.

V. பொருள்

1. அகத்திணை (முதல், கரு)

மக்கட்கு உறுதி பயப்பன '**அறம், பொருள், இன்பம், வீடு**' என்னும் நான்காம். அவற்றுள் வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவதல்லது, இலக்கண வகையாற் கூறப்படாமையின், நூல்களால் கூறப்படுவன **அறம், பொருள், இன்பம்** என்ற மூன்றுமேயாம். இவற்றுள் இன்பம் '**அகப்பொருள்**' என்றும், அறமும் பொருளும் '**புறப்பொருள்**' என்றும் தமிழ் நூல்களிற் கூறப்படும். எனவே, பொருள் இலக்கணம் **அகப்பொருள், புறப்பொருள்** என இரு வகைப்படும்.

ஒருவனும் ஒருத்தியும் நடத்தும் வாழக்கையில் தாம் உள்ளத்தால் நுகரும் இன்பத்தைப் பிறர்க்குணர்த்த இயலாத நிகழ்ச்சிகளைப் பலபடியாக விளக்கிக் கூறுவதே அகப்பொருள் என்பது. (அகம் - மனவொழுக்கம்) அகப்பொருள் பற்றிய நூல்கள் தமிழில் பல உண்டு.

அகப்பொருள் '**களவியல்**' என்றும் '**கற்பியல்**' என்றும் ஈரியல்களாகப் பிரிக்கப்பட்

டுள்ளது. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் பல நிகழ்ச்சிகள் நிகழ்வதுண்டு. ஒவ்வொரு நிகழ்ச்சியும் ஒவ்வொரு **துறை** ஆகும். இத்தகைய துறைகள் சுமார் நானூறு, அகப்பொருள் நூல்களில் கூறப்பட்டுள்ளன. இவ்விவரங்களைத் தொல்காப்பியத்துக் களவியல், கற்பியல், பொருளியல் என்னும் இயல்களிலும், இறையனார் களவியல் நூலிலும், நம்பியகப்பொருள் இலக்கணத்திலும், கோவை நூல்களிலும், அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு என்னும் சங்க இலக்கியங்களிலும் விரிவாகக் காணலாம்.

அகப்பொருள் இலக்கணத்தில் ஏழு திணைகள் உண்டு. திணை என்பது ஒழுக்கம். அகத்திணை (1) கைக்கிளை, (2) பெருந்திணை, (3) ஐந்திணை (குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன) என வகுத்துக் கூறப்படும்.

ஐந்திணைக்கும் உரிய பொருள்கள் (1) முதற்பொருள், (2) கருப்பொருள், (3) உரிப்பொருள் என மூன்று வகைப்படும்.

முதற்பொருள் :

நிலமும் பொழுதும் முதற்பொருள் என்று வழங்கப்படும்.

நிலம், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைப்படும்.

குறிஞ்சி—மலையும் மலை சார்ந்த இடமும்.

முல்லை—காடும் காடு சார்ந்த இடமும்.

மருதம்—வயலும் வயல் சார்ந்த இடமும்.

நெய்தல்—கடலும் கடல் சார்ந்த இடமும்.

பாலை—இதற்குத் தனி நிலம் இல்லை. இது முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து உண்டாகிய மணல் வெளியாகும்.

பொழுது : பெரும்பொழுது, சிறு பொழுது எனப் பொழுது இரண்டு வகைப்படும்.

பெரும்பொழுது ஆறு வகைப்படும். சிறு பொழுது ஆறு வகைப்படும்.

பெரும்பொழுது :

1. இளவேனிற்காலம் —சித்திரை, வைகாசி
2. முதுவேனிற்காலம் —ஆனி, ஆடி
3. கார் காலம் —ஆவணி, புரட்டாசி
4. கூதிர் காலம் —ஐப்பசி, கார்த்திகை
5. முன்பனிக்காலம் —மார்கழி, தை
6. பின்பனிக்காலம் —மாசி, பங்குனி

சிறு பொழுது :

1. வைகறை—இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை.
2. காலை—காலை 6 மணி முதல் முற்பகல் 10 மணி வரை.
3. நண்பகல்—முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை.
4. எற்பாடு—பிற்பகல் 2 மணி முதல் மாலை 6 மணி வரை.
5. மாலை—மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை.
6. யாமம்—இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை.

ஐந்திணைகட்கும் உரிய முதற்பொருள்கள் :

குறிஞ்சி :

நிலம்—மலையும் மலை சார்ந்த இடமும்.

பெரும்பொழுது—கூதிர் காலம், முன்பனிக் காலம்.

சிறுபொழுது—யாமம்.

முல்லை :

நிலம்—காடும் காடு சார்ந்த இடமும்.

பெரும்பொழுது—கார்காலம்.

சிறு பொழுது—மாலை.

மருதம் :

நிலம்—வயலும் வயல் சார்ந்த இடமும்.

பெரும்பொழுது—இளவேனில், முதுவேனில், கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின் பனிக்காலம்.

சிறு பொழுது—வைகறை.

நெய்தல் :

நிலம்—கடலும் கடல் சார்ந்த இடமும்.

பெரும்பொழுது—இளவேனில், முதுவேனில், கார்காலம், கூதிர்காலம், முன்பனிக்காலம், பின் பனிக்காலம்.

சிறு பொழுது—எற்பாடு.

பாலை :

நிலம்—மணலும் மணல் சார்ந்த இடமும்.

பெரும்பொழுது—இளவேனில், முதுவேனில், பின்பனிக்காலம்.

சிறு பொழுது—நண்பகல்.

கருப்பொருள்கள் :

ஒவ்வொரு திணைக்கும் உரிய (1) தெய்வம், (2) உயர்ந்தோர், (3) தாழ்ந்தோர், (4) பறவை, (5) விலங்கு, (6) ஊர், (7) நீர், (8) பூ, (9) மரம், (10) உணவு, (11) பறை, (12) யாழ், (13) பண், (14) தொழில் என்பவை **கருப்பொருள்கள்** எனப் படும்.

குறிஞ்சித்திணைக் கருப்பொருள்கள் :

தெய்வம்	— முருகன்.
உயர்ந்தோர்	— பொருப்பன், வெற்பன், சிலம்பன், குறத்தி, கொடிச்சி.
தாழ்ந்தோர்	— குறவர், கானவர், குறத்தியர்.
பறவை	— கிளி, மயில்.
விலங்கு	— புலி, கரடி, யானை, சிங்கம்.
ஊர்	— சிறு குடி.
நீர்	— அருவி நீர், சுனை நீர்.
பூ	— வேங்கைப்பூ, குறிஞ்சிப்பூ, காந்தட்பூ.
மரம்	— சந்தனம், தேக்கு, அகில், அசோகு, நாகம் (புன்னை), மூங்கில்.
உணவு	— மலை நெல், மூங்கிலரிசி, தினை.
பறை	— தொண்டகப் பறை.
யாழ்	— குறிஞ்சி யாழ்.
பண்	— குறிஞ்சிப்பண்.
தொழில்	— வெறியாடல், மலை நெல் விதைத்தல், தினை காத்தல், தேனழித்தெடுத்தல், அருவி நீராடல், சுனை நீராடல்.

முல்லைத்திணைக் கருப்பொருள்கள் :

தெய்வம்	— திருமால்.
உயர்ந்தோர்	— குறும்பொறை நாடன், தோன்றல், மனைவி, கிழத்தி.
தாழ்ந்தோர்	— இடையர், இடைச்சியர், ஆயர், ஆய்ச்சியர்.
பறவை	— காட்டுக்கோழி.
விலங்கு	— மான், முயல்.
ஊர்	— பாடி.
நீர்	— குறுஞ்சுனை நீர், கான்யாற்று நீர்.
பூ	— குல்லைப்பூ, முல்லைப்பூ, தோன்றிப்பூ, பிடவம்பூ.
மரம்	— கொன்றை, காயா, குருந்தம்.
உணவு	— வரகு, சாமை, முதிரை.
பறை	— ஏறுகோட்பறை.
யாழ்	— முல்லை யாழ்.
பண்	— சாதாரி.
தொழில்	— சாமை விதைத்தல், அதற்குக் களைகட்டல், அதை அரிதல், கடா விடுதல், கொன்றைக் குழல் ஊதல், மூவினம் (பசு, ஆடு, எருமை) மேய்த்தல், கொல்லேறு தழுவுதல், குரவைக் கூத்தாடுதல், கான்யாறு ஆடல்.

மருதத்திணைக் கருப்பொருள்கள் :

தெய்வம்	— இந்திரன்.
உயர்ந்தோர்	— ஊரன், மகிழ்நன், கிழத்தி, மனைவி.
தாழ்ந்தோர்	— உழவர், உழத்தியர், கடையர், கடைசியர்.
பறவை	— வண்டானம், மகன்றில், நாரை, அன்னம், பெருநாரை, கம்புள்.
விலங்கு	— எருமை, நீர் நாய்.
ஊர்	— பேரூர், மூதூர்.
நீர்	— யாற்று நீர், கிணற்று நீர், குளத்து நீர்.
பூ	— தாமரைப்பூ, கழுநீர்ப்பூ, குவளைப்பூ.
மரம்	— காஞ்சி, வஞ்சி, மருதம்.
உணவு	— செந்நெல் அரிசி, வெண்ணெல் அரிசி.
பறை	— நெல்லரி கிணை, மணமுழவு.
யாழ்	— மருத யாழ்.
பண்	— மருதப்பண்.
தொழில்	— விழாச்செய்தல், வயலிற்களை கட்டல், நெல்லரிதல், கடாவிடுதல், குளங்குடைதல், புதுநீராடல்.

நெய்தல் திணைக் கருப்பொருள்கள் :

தெய்வம்	— வருணன்.
உயர்ந்தோர்	— சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளைச்சி.

தாழ்ந்தோர் — நுளையர், நுளைச்சியர், பரதர், பரத்தியர், அளவர், அளத்தியர்.

பறவை — கடற்காகம்.

விலங்கு — சுரு மீன்.

ஊர் — பாக்கம், பட்டினம்.

நீர் — உவர்நீர்க்கேணி, கவர்நீர்.

பூ — நெய்தற்பூ, தாழம்பூ, முண்டகப்பூ, அடப்பம்பூ.

மரம் — கண்டல், புன்னை, ஞாழல்.

உணவு — மீனும் உப்பும் விற்றுப்பெற்ற பொருள்.

பறை — மீன் கோட்பறை, நாவாய்ப் பம்பை.

யாழ் — விளரி யாழ்.

பண் — செவ்வழிப்பண்.

தொழில் — மீன்பிடித்தல், உப்புண்டாக்குதல், அவற்றை விற்றல், மீன் உணக்கல், அவற்றை உண்ண வரும் பறவைகளை ஓட்டுதல், கடலாடல்.

பாலைத்திணைக் கருப்பொருள்கள் :

தெய்வம் — துர்க்கை.

உயர்ந்தோர் — விடலை, காளை, மீளி, எயிற்றி.

தாழ்ந்தோர் — எயினர், எயிற்றியர், மறவர், மறத்தியர்.

பறவை — புறு, பருந்து, எருவை, கழுகு.

விலங்கு — செந்நாய்.

ஊர் — குறும்பு.
நீர் — நீரில்லாக்குழி, நீரில்லாக் கிணறு.
பூ — குரா, மரா.
மரம் — உழிஞை, பாலை, ஓமை, இருப்பை.
உணவு — வழியிற்பறித்த பொருள், பதியிற்கவர்ந்த பொருள்.
பறை — துடி.
யாழ் — பாலை யாழ்.
பண் — பஞ்சுரம்.
தொழில் — போர் செய்தல், பகற்சூறை யாடுதல்.

2. புறத்திணை (பன்னிரண்டு)

ஒத்த அன்புடைய தலைவன் தலைவியரால் அல்லாமல் எல்லாராலும் அனுபவித்து அறியப் பட்டு, இஃது இவ்வாறு இருந்தது எனப் பிறர்க்கு எடுத்து விளக்கிக் கூறத்தக்க புறவொழுக்கமே புறத்திணை அல்லது **புறப்பொருள்** எனப்படும். எனவே, அறம், பொருள் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கம் **புறத்திணை** ஆகும்.

புறத்திணை (1) வெட்சித்திணை, (2) கரந்தைத் திணை, (3) வஞ்சித்திணை, (4) காஞ்சித்திணை, (5) உழிஞைத்திணை, (6) நொச்சித்திணை, (7) தும் பைத்திணை, (8) வாகைத்திணை, (9) பாடாண்டிணை, (10) பொதுவியல், (11) கைக்கிளை, (12) பெருந் திணை எனப் பன்னிரண்டு வகைப்படும்.

வெட்சித்திணை :

பகைவர்களின் பசுக்களைக் கவரச் செல்வது வெட்சித்திணை ஆகும். பசுக்களைக் கவரச் செல்லும் வீரர் வெட்சிப் பூவைச் சூடிச் செல்வர்.

கரந்தைத்திணை :

வெட்சியார் கவர்ந்து சென்ற பசுக்களை மீட்கக் கருதிச் செல்வது கரந்தைத்திணை ஆகும். பசுக்களை மீட்கச் செல்லும் வீரர் கரந்தைப் பூவைச் சூடிச் செல்வர்.

வஞ்சித்திணை :

பகைவர் நாட்டைக் கைப்பற்ற எண்ணி, அவர்மேல் போருக்குச் செல்வது வஞ்சித்திணை ஆகும். நாடு கருதிப் போர் செய்யச் செல்லும் வீரர் வஞ்சிப்பூவைச் சூடிச் செல்வர்.

காஞ்சித்திணை :

நாடு கருதிப் போருக்கு வந்தவரைத் தன் நாட்டு எல்லையிலே எதிர்த்து நின்று போர் செய்வது காஞ்சித்திணை ஆகும். இவ்வீரர் காஞ்சிப் பூவைச் சூடுவர்.

உழிஞைத்திணை :

பகைவன் கோட்டை மதிலை நாற்புறமும் சூழ்ந்து வளைந்துகொள்வது உழிஞைத்திணை ஆகும். இவ்வாறு மதிலை வளைந்து நிற்கும் வீரர் உழிஞைப் பூவைச் சூடுவர்.

நொச்சித்திணை :

பகையரசனால் வளைந்துகொள்ளப்பட்ட மதிலை அம்மதிலுக்குரிய அரசனும் அவன் வீரரும்

காத்தல் நொச்சித்திணை ஆகும். மதில் காக்கும் வீரர்கள் நொச்சிப்பூவைச் சூடுவர்.

தும்பைத்திணை :

பகை மன்னர் இருவரும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, ஓர் இடத்தைப் போர்க் களமாகக் குறித்து, அதன்கண் தம் படை வீரருடன் நேர் நின்று போரிடுவது தும்பைத்திணை ஆகும். அவ்வாறு நேர் நின்று போர் புரிபவர் தும்பைப்பூவைச் சூடுவர்.

வாகைத்திணை :

போர்க்களத்தில் பகைவர்கள் வெல்லுதல் வாகைத்திணை ஆகும். வெற்றி பெற்ற வேந்தன், தன் வீரர்களின் வீரத்தையும் வெற்றிச் சிறப்பினையும் பாராட்டிக் கூறுதலும் இத்திணை ஆகும். வெற்றி விழாக் கொண்டாடுபவர் வாகைப் பூச் சூடுவர்.

பாடாண் திணை :

ஒருவனுடைய புகழ், ஆற்றல், ஈகை, கருணை முதலியவற்றை ஆராய்ந்து புகழ்தல் பாடாண் திணை ஆகும். பாடாண் திணை (பாடு + ஆண் + திணை) - பாடப்படும் ஆண் மகனது ஒழுகலாறு.

பொதுவியல் :

மேற்கூறப்பட்ட புறத்திணைகளுக்கெல்லாம் பொதுவாயுள்ளனவும், அவற்றுள் கூருது ஒழிந்தனவுமாகிய செய்திகளைக் கூறுவது பொதுவியல் ஆகும்.

கைக்கிளை :

ஒருதலைக் காமம் பற்றிக் கூறுவது கைக்கிளைத் திணை ஆகும்.

பெருந்திணை :

பொருந்தாக் காமம் பற்றிக் கூறுவது பெருந் திணை ஆகும்.

பயிற்சி :

1. பொருளிலக்கணம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. 'அகத்திணை' என்பது யாது?
3. அகத்திணை எத்தனை வகைப்படும்? எவ்வாறு?
4. முதற்பொருள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. அறுவகைப் பெரும்பொழுது யாவை?
6. சிறு பொழுது ஆறு யாவை?
7. குறிஞ்சி, நெய்தல் திணைகளுக்குரிய முதற்பொருளைக் கூறுக.
8. கருப்பொருளாகக் கூறப்படுவன யாவை?
9. முல்லைத்திணை, மருதத்திணைகளுக்குரிய கருப் பொருள்கள் நான்கு நான்கு கூறுக.
10. 'புறத்திணை' என்பது யாது?
11. புறத்திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
12. வெட்சி, வஞ்சி, உழிஞைத் திணைகளை விளக்குக.
13. கரந்தைத்திணை, காஞ்சித்திணை, நொச்சித்திணை— இவற்றை விளக்குக.
14. வாகை, பாடாண் திணைகளை விளக்குக.

VI. யாப்பு

பல வகைச் சொற்களைக் கொண்டு, புலவர் பெருமக்களால் பொருளுக்கு இடமாக, அழகுபெற யாக்கப்படுவது யாப்பு ஆகும். (யாத்தல் - கட்டு தல்; யாப்பு - தொழிலாகு பெயராய்ப் பாட்டை யுணர்த்தும்.)

குருதி முதலிய பொருள்களால் கட்டப்பட்டு, உயிர்க்கு இருப்பிடமாய் இருப்பது நமது உடல். அது போல, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் உறுப்புக்களால் அமைக்கப் பட்டுச் சிறந்த பொருளுக்கு இடமாய்த் திகழ்வது செய்யுள் ஆகும். செய்யப்படுதலின் இது செய்யுள் எனப்படுவதாயிற்று; யாக்கப்படுதலின் '**யாப்பு**' என்னும் பெயர் பெற்றது.

யாப்பு, பா, பாட்டு, செய்யுள், தூக்கு, கவி, தொடர்பு என்பன ஒரு பொருட்சொற்கள் ஆகும்.

செய்யுளானது வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப்படும். இங்கே வெண்பாவைப் பற்றியும், ஆசிரியப் பாவைப் பற்றியும் படிப்போம் :

1. வெண்பா

செப்பலோசை உடையதாய், ஈற்றடி முச் சீராய், ஏனைய அடிகளுள் ஒவ்வொன்றும் நாற் சீராய், இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் கொண்டு, வேற்றுத்தளை விர வாமல், ஈற்றடி ஈற்றுச்சீர் **நாள், மலர், காசு, பிறப்பு** என்னும் வாய்பாடுகளுள் ஒன்றால் முடிவது வெண்பாவின் பொது இலக்கணமாகும். வெண்பா இரண்டடிகளுக்குக் குறையாமலும் பன்னிரண்டு அடிகளுக்கு மேற்படாமலும் பெற்று வரும்.

குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா, நேரிசை வெண்பா இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா என வெண்பா ஐந்து வகைப்படும்.

இங்கே, குறள், நேரிசை, இன்னிசை என்னும் வெண்பாக்களைப் பற்றிப் படிப்போம்.

குறள் வெண்பா :

'அருவினை என்ப உளவோ கருவியால்
காலம் அறிந்து செயின் ?'

இஃது இயற்சீர் வெண்டளை விரவப்பெற்று, இரு விகற்பத்தால் அமைந்த குறள் வெண்பா :

'யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு !'

இரு வெண்சீர் வெண்டளை பொருந்தி இரு விகற்பத்தால் அமைந்த குறள் வெண்பா.

'எல்லார்க்கும் நன்றாம் பணிதல் ; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.'

இஃது இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் விரவப்பெற்று ஒரு விகற்பத்தால் அமைந்த குறள் வெண்பா.

'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.'

இஃது ஒரு விகற்பத்தால் அமைந்த குறள் வெண்பா.

இக்குறட்பாக்கள் வெண்பாவின் இலக்கணம் முழுவதும் பொருந்த ஒரு விகற்பத்தாலோ, இரு விகற்பத்தாலோ அமைந்து இரண்டடிகளாய் வந்தன. (குறள் - குட்டை).

செய்யுள் அடிகள் ஒரே எதுகையால் அமைவது, ஒரு விகற்பம். முகலடி ஓர் எதுகையும், பின்னடி வேறு எதுகையும் பெறுவது இரு **விகற்பம்** எனப்படும்.

ஒரு பாட்டில் இரண்டுக்கு மேற்பட்ட எதுகை கள் அமைந்தால் பல விகற்பம் எனப்படும். ஒவ் வோர் அடியிலும் ஒவ்வோர் எதுகை அமைந்து அடிதோறும் எதுகை வேறுபடுவது பல விகற்ப மாகும்.

நேரிசை வெண்பா :

வெண்பாவின் பொதுவிலக்கணம் முழுவதும் பொருந்த நான்கு அடிகளை உடையதாய், இரண் டாம் அடியின் நான்காம் சீர், முதலிரண்டு அடி களின் எதுகைக்கேற்ற எதுகையாய் அமைந்த தனிச்சொல்லாய் வருமாறு அமைத்துப் பாடப் படுவது நேரிசை வெண்பாவாகும். "நாற்சீர், முச்சீர், நடுவே தனிச்சீர், நாற்சீர், முச்சீர்" என அமைத்துப் பாடுவதே நேரிசை வெண்பாவாகும்.

ஒரு விகற்ப நேரிசை வெண்பா :

'நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம்—தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை.'

இஃது ஒரு விகற்பத்தால்—ஒரெதுகையால்—மேலே சொன்ன இலக்கணப்படி அமைந்த நேரிசை வெண்பாவாகும். இது **மலர்** என்னும் வாய்பாட்டால் முடிந்தது.

இரு விகற்ப நேரிசை வெண்பா :

'ஏற்றான்புள் ளூர்ந்தா னெயிலெரித்தான் மார்பிடந்தான்
நீற்றா னிழன்மணி வண்ணத்தான்—கூற்றொருபான்
மங்கையான் பூமகளான் வார்சடையா னீள்முடியான்
கங்கையா னீள்கழலான் காப்பு.'

இஃது இரு விகற்பத்தால் காசு என்னும் வாய்பாட்டால் முடிந்த நேரிசை வெண்பாவாகும். இப்பாவில் முன்னிரண்டடி ஒரெதுகையுடனும், பின்னிரண்டடி வேறோர் எதுகையுடனும் அமைந்திருத்தல் காண்க. எனவே, இஃது இரு விகற்பத்தால்—இருவகை எதுகையால்—அமைந்த நேரிசை வெண்பா எனப்படுகிறது.

இன்னிசை வெண்பா :

1. இப்பா, வெண்பாவிற்குரிய பொது இலக்கணங்களுடன் நான்கு அடிகளை உடையதாய் நேரிசை வெண்பாவிற்சிறிது வேறுபட்டதாய் அமைந்திருக்கும்.

2. இரண்டாம் அடியின் இறுதிச்சீர் தனிச்சீராய் இல்லாமல் அமையும்.

3. சில பாக்கள் அடிதோறும் தனிச்சொல் பெற்றும் வரும்.

4. சில பாக்கள் மூன்றுமடி ஈற்றில் தனிச்சொல் பெற்று வரும்.

5. சில பாக்கள் நேரிசை வெண்பாவைப் போல, இரண்டாம் அடி ஈற்றில் தனிச்சொல் பெற்றுப் பல விகற்பமாய் அமையும்.

ஒரு விகற்ப இன்னிசை வெண்பா :

‘ துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்காற் போல வரும்.’

இப்பா, தனிச்சொல்லின்றி ஒரெதுகையால்—ஒரு விகற்பத்தால்—வந்த இன்னிசை வெண்பா ஆகும்.

இரு விகற்ப இன்னிசை வெண்பா :

‘பலகற்ரேம் யாமென்று தற்புகழ்தல் வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்ருர் கண்ணும் உளவாம் பலகற்ருர்க்
கச்சாணி யன்னதோர் சொல்.’

இப்பா, தனிச்சொல்லின்றி இருவிகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பாவாகும். இப்பாவில் முதல் மூன்றடிகளிலும் ஒரெதுகையும் ஈற்றடியில் வேருேர் எதுகையும் அமைந்திருத்தல் காண்க.

பல விகற்ப இன்னிசை வெண்பா :

‘கடற்குட்டம் போழ்வர் கலவர்—படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குத் தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்து—மவைக்குட்டம்
கற்ருன் கடந்து விடும்.’

இப்பா, முதலடியிலும் மூன்ருமடியிலும் தனிச் சொல் அமைந்து பல விகற்பத்தால்—அதாவது, அடிக்கோர் எதுகையாய்—அமைந்துள்ள இன்னிசை வெண்பா ஆகும்.

அடிதோறும் தனிச்சொல் பெற்ற பலவிகற்ப இன்னிசை வெண்பா :

‘மழையின்றி மாநிலத்தார்க் கில்லை—மழையும்
தவமிலா ரில்வழி யில்லை—தவமும்
அரசியலா னில்வழி யில்லை—அரசனும்
இல்வாழ்வா ரில்வழி இல்.’

இப்பா, அடிதோறும் தனிச்சொல் பெற்றுப் பல விகற்பத்தால் அமைந்துள்ள இன்னிசை வெண்பா ஆகும்

அடிதோறும் தனிச்சொல் பெற்ற மூன்று விகற்ப இன்னிசை வெண்பா :

'இன்னுமை வேண்டி னிரவெழுக—இந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னெடு
செல்வது வேண்டி னறஞ்செய்க—வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.'

இப்பா, அடிதோறும் தனிச்சொல் பெற்று,, மூன்று விகற்பத்தால் அமைந்துள்ள இன்னிசை வெண்பாவாகும்.

மூன்ருமடியில் தனிச்சொல் பெற்ற இன்னிசை வெண்பா :

'வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை ;
அளந்தன போக மவரவ ராற்ருன் ,
விளங்காய் திரட்டினுர் இல்லைக்—களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.'

இப்பா, மூன்ருமடியில் தனிச்சொல் பெற்று இரு விகற்பத்தால் அமைந்த இன்னிசை வெண்பாவாகும்.

இரண்டாமடியில் தனிச்சொல் பெற்ற இன்னிசை வெண்பா :

'அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களுஞ் சான்ருேரும் ஒப்பர்மன்—திங்கள்
மறுவாற்றுஞ் சான்ருேரஃ தாற்ருர் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.'

இப்பா, இரண்டாம் அடியின் இறுதியில் தனிச் சொல் பெற்று, மூன்று விகற்பத்தால் அமைந் துள்ள இன்னிசை வெண்பாவாகும்.

2. ஆசிரியப்பா

ஆசிரியர் தம் மாணாக்கர்க்கு உறுதிப் பொருளை உரைத்தலைப் போலக் கேட்பவர்க்கு நன்மை பயக்கும் செய்திகளை நம் முன்னோர் பெரும்பாலும் கூறி வந்த செய்யுள் **ஆசிரியப்பா** எனப்பட்டது. இஃது அகவலோசை பெற்ற பாவாதலின், **அகவற்பா** எனவும் வழங்கப்படுகிறது.

ஆசிரியப்பா அடிதோறும் நான்கு சீர்களைப் பெற்று வரும். ஒவ்வோர் அடி ஐந்து சீர்கள் பெற்று வருதலுமுண்டு. ஐந்து சீர்களின் மிகுந்து வருதலில்லை.

பெரும்பான்மை இயற்சீர் பயின்று வரும். (இயற்சீர் மாச்சீர், விளச்சீர் ஆகிய ஈரசைச் சீர்களாகிய அகவற்சீர்) மற்றச் சீர்களும் விரவி வரும்.

முதற்சீரிலும் மூன்றும் சீரிலும் மோனை வருதல் சிறப்பாகும்.

கருவிளங்கனி, கூவிளங்கனி ஆகிய (நிரை நடுச் சீர்களாகிய) வஞ்சியுரிச்சீர்கள் வரக்கூடா.

அகவல் ஓசை அமைந்து வரும்.

மூன்றடிகளுக்குக் குறைந்து வருவதில்லை.

மிகுதியாக நேரொன்றாசிரியத்தளை (மாமுன் நேர்) நிரையொன்றாசிரியத்தளை (விளமுன் நிரை) ஆகிய ஆசிரியத்தளைகள் வரும். பிற தளைகளும் மயங்கி வரும்.

ஈற்றடியின் இறுதிச்சீர் ஏ, ஓ, ஈ, ஆய், என், ஐ ஆகியவற்றுள் ஒன்றைக் கொண்டு முடியும். எனினும், 'ஏகாரத்தால்' முடிவதே சிறப்புடையதாகும்.

இவ்வாறு வரும் ஆசிரியப்பா, (1) நேரிசை யாசிரியப்பா, (2) இணைக்குறளாசிரியப்பா, (3) நிலைமண்டில ஆசிரியப்பா, (4) அடிமறி மண்டில ஆசிரியப்பா என நான்கு வகைப்படும்.

நேரிசை ஆசிரியப்பா :

இஃது, ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் முழுவதும் பொருந்த, ஈற்றயலடி மூச்சீரடியாகிய சிந்தடியாகவும், மற்றைய அடிகள் நாற்சீரடி களாகிய அளவடிகளாகவும் அமைந்து வரும்.

'உண்டா லம்மவிவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.'

"கடையயல் பாதம் முச்சீர் வரின் நேரிசை," என்பது யாப்பருங்கலக்காரிகை கூறும் விதி.

இப்பா ஈற்றயலடி சிந்தடியாய் (முச்சீரடி) வந்துளது. ஈற்றடியின் ஈற்றுச்சீர் ஏகாரத்தில் முடிந்திருக்கிறது. ஆசிரியப்பாக்களுள் இவ் வகையே சிறந்ததெனப் புலவர்களால் போற்றப் படுகிறது.

இணைக்குறளாசிரியப்பா :

இப்பா, இடையில் பல அடிகள் சீர் குறைந்து குறளடியும் (இருசீரடி) சிந்தடியுமாய் (மூச்சீரடி)

வரும். முதலடியும் ஈற்றடியும் மட்டும் நாற் சீரடிகளாகவே இருக்கும்.

‘ நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்ப்பொல் லாதே ’

இந்த இணைக்குறளாசிரியப்பா,

‘ அளவடி அந்தமும் ஆதியும் ஆகிக்
குறளடி சிந்தடி என்று யிரண்டும்
இடைவர நிற்பது இணைக்குற ளாகும்.’

என்ற விதிப்படி அமைந்துள்ளது. (இணை—இரண்டு. குறளடி—இருசீர் உடைய அடி)

நிலைமண்டில ஆசிரியப்பா :

எல்லா அடிகளும் அளவடிகளாய் (நாற் சீரடிகள் ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் பொருந்த அமைவது நிலைமண்டில ஆசிரியப்பா ஆகும்.

(நிலை—நின்றவாறு நிற்றல். மண்டிலம்—நாற்சீர் பெற்று வருதல்)

‘ இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்யாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாடே.’

அகவற்பா இலக்கணம் பொருந்தி எல்லா அடியும் ஒத்து நடை பெறுவதால் இப்பா நிலை மண்டில ஆசிரியப்பாவாயிற்று.

அடிமறிமண்டில ஆசிரியப்பா :

இப்பா, மூன்றடி முதலாகப் பல அடிகளாய் வரும். எந்த அடியை முன் பின்னுக மாற்றிப் படித்தாலும் பொருளும் ஓசையும் வேறுபடாத வாறு, ஆசிரியப்பாவின் இலக்கணம் அமையப் பெற்று வருவது **அடிமறிமண்டில ஆசிரியப்பா** வாகும். (மறிதல் - இடம் மாறி வருதல்.)

‘ தீர்த்தம் என்பது சிவகங் கையே
ஏத்த ருந்தலம் எழிற்புலி யூரே
மூர்த்தி அம்பலக் கூத்தன துருவே.’

இப்பாவில் எந்த அடியை முதல் நடு இறுதி யாக அமைத்துக்கொண்டாலும் ஓசையும் பொரு ளும் வழுவாது நிற்பதை உணரலாம்.

உள்ளத்தில் எழும் எண்ணங்களை எடுத்துரைப் பதற்கு ஆசிரியப்பாவே பெரிதும் துணை செய்யும்.

அகநானூறு, புறநானூறு போன்ற சங்கநூல் களிற்பலவும், ஆசிரியப்பாக்களாலான நூல்களே யாம்.

பயிற்சி வினுக்கள் :

1. ‘ யாப்பு ’ எனப்படுவது யாது ?
2. யாப்பின் உறுப்புக்கள் எவை ?
3. பா எத்தனை வகைப்படும் ? அவை எவை ?
4. வெண்பாவின் பொது இலக்கணம் யாது ?
5. பின் வருவனவற்றைத் தகுந்த எடுத்துக்காட்டுக்க ளுடன் விளக்குக.
   1. குறள் வெண்பா. 2. நேரிசை வெண்பா.
   3. இன்னிசை வெண்பா.
6. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம் யாது ?

7. ஆசிரியப்பாவின் வகைகளை எழுதுக.
8. ஆசிரியப்பா வகைகளுள் சிறந்தது எது?
9. வெண்பாவிற்குரிய ஓசை யாது?
10. ஆசிரியப்பாவிற்குரிய ஓசை யாது?

3. அலகிடுதல்

சீர் பிரித்து வாய்பாடு கூறுதல் :

அசைகள் சிறுபான்மை தனித்தும், பெரும்பான்மை இரண்டு முதல் நான்கு வரை தொடர்ந்தும் வந்து செய்யுட்கு உறுப்பாய் நிற்பது 'சீர்' எனப்படும்.

அச்சீர்கள் ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நான்கு வகைப் படும்.

ஓரசைச்சீர்கள் :

சீர்	வாய்பாடு
நேர்	நாள்
நிரை	மலர்
நேர்பு	காசு
நிரைபு	பிறப்பு

ஓரசையுடனும், ஓரசையுடன் உகர ஈறு பெற்றும் வரும் இந்த நான்கும் ஓரசைச் சீர்கள் எனப்படும். இவை பெரும்பாலும் வெண்பாவின் ஈற்றுச் சீராகவே வரும்.

ஈரசைச்சீர்கள் :

சீர்	வாய்பாடு	
நேர்நேர்	தேமா	மாச்சீர்
நிரைநேர்	புளிமா	

சீர்	வாய்பாடு	
நேர் நிரை	கூவிளம்	விளச்சீர்
நிரை நிரை	கருவிளம்	

மாச்சீர் இரண்டும், விளச்சீர் இரண்டும் ஆகிய நான்கு ஈரசைச் சீர்களும் இயற்சீர் எனவும், அகவற்சீர் எனவும், **ஆசிரிய உரிச்சீர்** எனவும் வழங்கும்.

(எ. கா.) 'உண்டா லம்மவிவ் வுலகம் இந்திரர்'

சீர்	அசை	வாய்பாடு
உண்டா	நேர்நேர்	தேமா
லம்மவிவ்	நேர் நிரை	கூவிளம்
வுலகம்	நிரைநேர்	புளிமா
இந்திரர்	நேர் நிரை	கூவிளம்

இவ்வாறு சீர்களை அசை பிரித்துக்காட்டி வாய்பாடு கூறவேண்டும். தேமா, புளிமா, கூவிளம், கருவிளம் என்பன ஈரசைச் சீர்களுக்குரிய வாய்பாடுகளாம்.

மூவசைச்சீர்கள்–1

சீர்	வாய்பாடு
நேர் நேர் நேர்	தேமாங்காய்
நிரை நேர் நேர்	புளிமாங்காய்
நேர் நிரை நேர்	கூவிளங்காய்
நிரை நிரை நேர்	கருவிளங்காய்

இவை **'காய்ச்சீர்கள்'** எனப்படும். இவை **வெண்சீர்** எனவும், **வெண்பாவுரிச்சீர்** எனவும் வழங்கப்படும். இவை வெண்பாவுக்கு உரியனவாம்.

(எ. கா.)

'கல்லானே யானுலும் கைப்பொருளொன்
றுண்டாயின்.'

சீர்	அசை	வாய்பாடு
கல்லானே	நேர் நேர் நேர்	தேமாங்காய்
யானுலும்	நேர் நேர் நேர்	தேமாங்காய்
கைப்பொருளொன்	நேர் நிரை நேர்	கூவிளங்காய்
றுண்டாயின்	நேர் நேர் நேர்	தேமாங்காய்

தேமாங்காய், புளிமாங்காய், கூவிளங்காய், கருவிளங்காய் ஆகிய நான்கு காய்ச் சீர்களும் நேரீற்று மூவசைச் சீர்களுக்குரிய வாய்பாடுகளாம்.

மூவசைச்சீர்கள்–2

சீர்	வாய்பாடு
நேர் நேர் நிரை	தேமாங்கனி
நிரை நேர் நிரை	புளிமாங்கனி
நேர் நிரை நிரை	கூவிளங்கனி
நிரை நிரை நிரை	கருவிளங்கனி

இந்த நான்கு கனிச்சீர்களும் **வஞ்சியுரிச் சீர்கள்**. இவை வஞ்சிப்பாவிற்கே உரியவை.

(எ. கா.)

'மண்ணீரனல் வளிவானெடு
வெண்ணீர்மதி வெங்கதிருயிர்'

சீர்	அசை	வாய்பாடு
மண்ணீரனல்	நேர் நேர் நிரை	தேமாங்கனி
வளிவானெடு	நிரை நேர் நிரை	புளிமாங்கனி
வெண்ணீர்மதி	நேர் நேர் நிரை	தேமாங்கனி
வெங்கதிருயிர்	நேர் நிரை நிரை	கூவிளங்கனி

தேமாங்கனி, புளிமாங்கனி, கூவிளங்கனி, கருவிளங்கனி ஆகிய கனிச்சீர்கள் நான்கும் நிரையீற்று மூவசைச் சீர்களுக்குரிய வாய்பாடு களாம்.

தளை :

நிலைமொழியின் ஈற்றெழுத்தும் வருமொழியின் முதல் எழுத்தும் ஒன்று சேருவது புணர்ச்சி என்பது போல, நின்ற சீரின் ஈற்றசையும், வருஞ் சீரின் முதலசையும் ஒன்றியாவது ஒன்றுமலாவது வருவது 'தளை' எனப்படும்.

தளையின் வகைகள் :

1. மாமுன் நேர்—நேரொன்றாசிரியத் தளை.
2. விளமுன் நிரை—நிரையொன்றாசிரியத்தளை.
3. மாமுன் நிரை / விளமுன் நேர் }—இயற்சீர் வெண்டளை
4. காய்முன் நேர்—வெண்சீர் வெண்டளை
5. காய்முன் நிரை—கலித்தளை
6. கனிமுன் நிரை—ஒன்றிய வஞ்சித்தளை
7. கனிமுன் நேர்—ஒன்றா வஞ்சித்தளை

இவ்வகையால் தளைகள் ஏழு வகைப்படும்.

அலகிட்டு வாய்பாடு கூறித் தளை கூறுதல் :

'மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.'

சீர்	அசை	வாய்பாடு
மிகுதியான்	நிரை நிரை	கருவிளம்
மிக்கவை	நேர் நிரை	கூவிளம்
செய்தாரைத்	நேர் நேர் நேர்	தேமாங்காய்
தாம்தம்	நேர் நேர்	தேமா

சீர்	அசை	வாய்பாடு
தகுதியான்	நிரை நிரை	கருவிளம்
வென்று	நேர் நேர்	தேமா
விடல்	நிரை	மலர்

மிகுதியான் + மிக்கவை
↓ விளம் ↓ நேர்
—விளமுன் நேர்— இயற்சீர் வெண்டளை

மிக்கவை + செய்தாரைத்
↓ விளம் ↓ நேர்
—விளமுன் நேர்— இயற்சீர் வெண்டளை

செய்தாரைத் + தாம்தம்
↓ காய் ↓ நேர்
—காய்முன் நேர்— வெண்சீர் வெண்டளை

தாம்தம் + தகுதியான்
↓ மா ↓ நிரை
—மாமுன் நிரை— இயற்சீர் வெண்டளை

தகுதியான் + வென்று
↓ விளம் ↓ நேர்
—விளமுன் நேர்— இயற்சீர் வெண்டளை

வென்று + விடல்
↓ மா ↓ நிரை
—மாமுன் நிரை— இயற்சீர் வெண்டளை

விடல்—நிரை—**மலர்** என்னும் வாய்பாடு.

இக்குறட்பா இயற்சீர் வெண்டளைகளையும் வெண்சீர் வெண்டளையும் பெற்று, '**மலர்**' என்னும் வாய்பாட்டால் முடிந்திருக்கிறது.

எதுகை :

அடிதோறும் முதல் எழுத்துத் தம்முள் அளவில் ஒத்து நிற்க, இரண்டாமெழுத்து ஒன்றி வருவது

'அடியெதுகை' எனப்படும். (அளவு ஒத்தல்- மாத்திரையால் ஒத்திருத்தல்.) சிறுபான்மை மூன்று மெழுத்து முதலியனவும் ஒன்றி வருதல் உண்டென அறிக.

எதுகையானது, 1. வருக்கவெதுகை, 2. உயிர் எதுகை, 3. நெடிலெதுகை, 4. வல்லினவெதுகை, 5. அடி எதுகை, 6. இணை எதுகை, 7. பொழிப்பு எதுகை, 8. ஒரூஉ எதுகை, 9. கூழை எதுகை, 10. மேற்கதுவாய் எதுகை, 11. கீழ்க்கதுவாய் எதுகை, 12. முற்றெதுகை எனப் பல வகைப் படும். இவற்றுள் 6 முதல் 12 வரை உள்ளவை சீரெதுகைகளாம்.

வருக்கவெதுகை :

'கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.'

இதில் முதலடியின் முதற்சீரின் இரண்டாம் எழுத்து ளி. இரண்டாமடியின் முதற்சீரின் இரண்டாம் எழுத்து ளை. இரண்டும் ஒன்றி வர வில்லை என்றாலும், ஒரே வருக்கத்தைச் சேர்ந்த எழுத்துக்கள். எனவே, இவ்வாறு அடிகளிலோ, சீர்களிலோ வருவன வருக்க எதுகைகளாம்.

உயிர் எதுகை :

'சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு.'

முதலடியின் முதற்சீரின் இரண்டாமெழுத்து வை. இரண்டாமடியின் முதற்சீரின் இரண்டா மெழுத்து கை. இவை ஒன்றி வரவில்லை எனினும், இம்மெய்களின்மேல் ஏறியுள்ள உயிர் ஒன்றே. ஆதலின், இஃது உயிர் எதுகை எனப்படும்.

நெடிலெதுகை :

‘ ஆவா வென்றே அஞ்சின ராழ்ந்தார்—ஒருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டார்—ஒருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தார்—ஒருசாரார்
ஏகீர் நாய்கீர் என்செய்து மென்றார்—ஒருசாரார்

இவற்றுள் எதுகையாயமைந்த எழுத்துக்கள் ஒன்றாவாயினும், அவை நெடிலாய் ஒற்றுமையுடைமையால் நெடிலெதுகை என வழங்கப்படும்.

வல்லினவெதுகை :

‘ பெற்றான் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.’

முதலடியின் முதற்சீரின் இரண்டாமெழுத்து ற். இரண்டாமடியின் முதற்சீரின் இரண்டாமெழுத்து த். இவை ஒன்றி வரவில்லை எனினும், இரண்டும் வல்லின மெய் எழுத்துக்கள். இவ்வாறு அடிகளிலோ, சீர்களிலோ வருவன வல்லின வெதுகைகளாம். மெல்லின, இடையின மெய் எழுத்துக்களுக்கும் இவ்வாறே கொள்க.

அடியெதுகை :

‘ கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின் ?’

முதலடியிலும், இரண்டாமடியிலும் உள்ள முதற்சீர்களின் இரண்டாமெழுத்து ஒன்றி வந்து உள்ளது. இவ்வாறு அடிதோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது அடியெதுகை ஆகும். அடியின் பல சீர்களில் எதுகை அமைந்து வருவது சீரெதுகை எனப்படும். இணை எதுகை முதலியவை சீர் எதுகைகளாகும்.

இணை எதுகை :

ஓரடியில் முதலிரண்டு சீர்களில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது **இணையெதுகையாம்.**

(எ. கா.) 'பொன்னின் அன்ன பொறிசுணங் கேந்தி'

பொழிப்பு எதுகை :

ஓரடியில் முதற்சீரிலும் மூன்றும் சீரிலும் எதுகை (இரண்டாம் எழுத்து) ஒன்றி வருவது **பொழிப்பெதுகையாம்.**

(எ. கா.) 'பன்னருங் கோங்கின் நன்னலங் கவற்றி'

ஒரூஉ எதுகை :

ஓரடியில் முதற்சீரிலும் நான்காம் சீரிலும் எதுகை ஒன்றி வருவது **ஒரூஉ எதுகை** எனப் படும்.

(எ. கா.) 'மின்னவி ரொளிவடந் தாங்கி மன்னிய'

கூழை எதுகை :

ஓரடியில் முதற்சீரிலும், இரண்டாம் சீரிலும், மூன்றும் சீரிலும் எதுகை ஒன்றி வருவது **கூழை எதுகையாம்.**

(எ. கா.) 'நன்னிற மென்(கலை) மின்னிடை வருத்தி'

மேற்கதுவாய் எதுகை :

ஓரடியில் முதற்சீரிலும், மூன்றும் சீரிலும், நான்காம் சீரிலும் எதுகை ஒன்றி வருவது **மேற்கதுவாய்** எதுகையாம்.

(எ. கா.) 'என்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை'

கீழ்க்கதுவாய் எதுகை :

ஓரடியில் முதற்சீரிலும், இரண்டாம் சீரிலும்,

நான்காம் சீரிலும் எதுகை ஒன்றி வருவது **கீழ்க் கதுவாய் எதுகையாம்.**

(எ. கா.) ' அன்ன மென்பெடை போலப் பன்மலர் '

முற்றெதுகை :

நான்கு சீர்களிலும் எதுகை ஒன்றி வருவது, **முற்றெதுகையாம்.**

(எ. கா.) ' கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய '

மோனை

சீரின் முதலெழுத்து ஒன்றி வருவது **'மோனை'** எனப்படும். மோனையானது அடி மோனை, இணை மோனை, பொழிப்பு மோனை, ஒரூஉ மோனை, கூழை மோனை, மேற்கதுவாய் மோனை, கீழ்க்கது வாய் மோனை, முற்றுமோனை எனப் பல வகைப் படும். இவற்றுள் அடி மோனை தவிர, மற்றவை சீர் மோனைகளாகும்.

அடி மோனை :

' தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்.'

இக்குறளில் முதலடியில் முதற்சீரின் முதல் எழுத்தும் இரண்டாம் அடியில் முதற்சீரின் முதல் எழுத்தும் ஒரே எழுத்தாகும். இவ்வாறு அடி தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது **அடி மோனை எனப்படும்.**

இணை மோனை :

ஓர் அடியில் முதற்சீரின் முதலெழுத்தும் இரண்டாம் சீரின் முதல் எழுத்தும் ஒன்றிவருவது **இணை மோனையாம்.**

(எ. கா.) ' அணிமலர் அசோகின் தளிர்நலங் கவற்றி '

பொழிப்பு மோனை :

ஓரடியில் முதற்சீரின் முதலெழுத்தும், மூன்ரும் சீரின் முதல் எழுத்தும் ஒன்றி வருவது **பொழிப்பு மோனையாம்.**

(எ. கா.) 'அரிக்குரல் கிண்கிணி அரற்றும் சீறடி'

ஒரூஉ மோனை :

ஓரடியில் முதற்சீரின் முதலெழுத்தும், நான்காம் சீரின் முதல் எழுத்தும் ஒன்றிவருவது **ஒரூஉ மோனையாம்.**

(எ. கா.) 'அம்பொன் கொடிஞ்சி நெடுந்தேர் அகற்றி'

கூழை மோனை :

ஓரடியில் முதல் மூன்று சீர்களின் முதலெழுத்தும் ஒன்றி வருவது **கூழை மோனையாம்.**

(எ. கா.) 'அகன்ற (அங்கம்) அந்நுண் மருங்குல்'

மேற்கதுவாய் மோனை :

ஓரடியில் முதற்சீரின் முதலெழுத்தும், மூன்ரும் நான்காம் சீர்களின் முதலெழுத்துக்களும் ஒன்றி வருவது **மேற்கதுவாய் மோனையாம்.**

(எ. க.ா) 'அகன்ற (செங்கை) அவ்வளை அமைத்தோள்'

கீழ்க்கதுவாய் மோனை :

ஓரடியில் முதற்சீரிலும் இரண்டாம் நான்காம் சீர்களிலும் முதல் எழுத்து ஒன்றி வருவது **கீழ்க்கதுவாய் மோனையாம்.**

(எ. கா.) 'அவிர்மதி அனைய திருநுதல் அரிவை'

முற்றுமோனை :

ஓரடியில் நான்கு சீர்களிலும் முதலெழுத்து ஒன்றி வருவது முற்று மோனையாம்.

(எ. கா.) ‘ அயில்வேல் அனுக்கி அம்பலத்(து) அமர்ந்த ’

பயிற்சி :

1. ‘ சீர் ’ என்பது யாது?
2. சீர்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. ‘ தளை ’ என்பது யாது? அஃது எத்தனை வகைப் படும்? அவை யாவை?
4. வெண்பாவிற்குரிய தளைகள் எவை?
5. ஆசிரியப்பாவிற்குரிய தளைகள் எவை?
6. பின் வரும் செய்யுள்களை அலகிட்டு வாய்பாடு கூறித் தளையும் கூறுக :—

‘ மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.’

‘ ஆனந்தக் கூத்த னடிக்கன்பு செய்மனனே
ஈனந் தனையொழிவா யின்று.’

7. எதுகை மோனை என்பன யாவை?
8. வருக்க எதுகை—எடுத்துக்காட்டுடன் விளக்குக.
9. ஒரூஉ மோனை—எடுத்துக்காட்டுடன் விளக்குக.
10. மோனை வகைகள் யாவை?
11. எதுகை வகைகள் யாவை?
12. பின் வரும் பாடல்களில் அமைந்துள்ள எதுகை மோனைகளை எடுத்துக்காட்டுக :—

‘ துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.’

‘ தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று.’

VII. அணி

சொல்லாலும் பொருளாலும் செய்யுளை அழகு பெறச் செய்வது அணியாகும். (அணி - அழகு). அவ்வணி சொல்லணி, பொருளணி என இரு வகைப்படும்.

சொல்லழகு பற்றியது '**சொல் அணி**' எனப் படும். பொருளழகு பற்றியது '**பொருள் அணி**' எனப்படும்.

அணிகள் பல வகைப்படும். அவற்றுள் **எடுத்துக்காட்டு உவமையணி, இல்பொருள் உவமையணி, ஒருகூற்றுருவக அணி, தற்குறிப்பேற்ற அணி, பிறிது மொழிதல் அணி, நிரல் நிறையணி** என்னும் அணிகளை முன் வகுப்பில் நீங்கள் படித்திருக்கிறீர்கள். இங்கே மேலும் சில அணிகளைப் பற்றிப் படிக்கலாம் :

1. வேற்றுப்பொருள் வைப்பணி :

பொதுப் பொருளால் சிறப்புப் பொருளையும், சிறப்புப் பொருளால் பொதுப் பொருளையும் உறுதிப்படுத்திக்கூறுவது—அஃதாவது, சொல்லக் கருதிய பொருளை முதலிற்கூறி, அதனை உறுதிப் படுத்த உலகறிந்த வேறு ஒரு பொருளைப் பின்னர் வைத்துச் செய்யுள் இயற்றுவது—**வேற்றுப் பொருள் வைப்பணியாகும்.**

'புறந்தந் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்த வொளிவளர்க்குந் தேரோன்—மறைந்தான் ;
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார் ?'

இச்செய்யுளில் 'கடல் சூழ்ந்த இந்த உலகில் பிறந்து இறவாது இருந்தவர் ஒருவரும் இல்லை,' என்பது பொதுப் பொருள் ஆகும். இஃது உலகறிந்த செய்தியாகும். இப்பொதுப் பொருள், 'இருளைப் புறங்காட்டி ஓடுமாறு அழகிய ஆணைச் சக்கரத்தைச் செலுத்திச் சிறந்த ஒளியினைத் தரும் கதிரவனே மறைந்து போனான்,' என்னும் சிறப்புப் பொருளால் உறுதிப்படுத்தப்படுகின்ற படியால், இது **வேற்றுப்பொருள் வைப்பணி** ஆகும்.

இந்தச் செய்யுளில் முன்னிரண்டு அடிகள் சிறப்புப் பொருள்; பின்னிரண்டு அடிகள் பொதுப் பொருள் ஆகும்.

2. வேற்றுமையணி:

முதலில் உவமான உவமேயங்களை ஒன்றுபடக் கூறிப் பின் அவற்றுக்கு வேற்றுமை தோன்றக் கூறுவது **வேற்றுமையணியாம்.**

'அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மன் ;—திங்கள்
மறுவாற்றும் சான்றோர்அஃ தாற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.'

இச்செய்யுளில் உவமையாகிய திங்களையும் பொருளாகிய (உவமேயம்) சான்றோரையும் 'ஒப்பர்' என ஒன்றுபடக் கூறிப் பிறகு, 'திங்கள் மறுவாற்றும்; சான்றோர் அஃதாற்றார்,' என உயர்வு படுத்திக் கூறி, இருவருக்கும் வேறுபாடு தோன்றக் கூறப்பட்டுள்ளபடியால் இது **வேற்றுமை அணி** யாகும்.

3. இரட்டுற மொழிதல் :

பல பொருள் உண்டாகுமாறு சொற்களை அமைத்துச் செய்யுள் செய்வது இரட்டுற மொழிதல் என்னும் 'சிலேடை' அணியாகும். இது **செம்மொழிச்சிலேடை** எனவும், **பிரிமொழிச் சிலேடை** எனவும் இரு வகைப்படும்.

செம்மொழிச்சிலேடை :

ஒரே சொல் அல்லது சொற்றொடர் இரு வேறு பொருள் தருவது செம்மொழிச் சிலேடையாகும்.

'நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்துப் பற்பட்டால் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையிற்
பாம்பாகும் வாழைப் பழம்.'

இதில், சொல் நின்ற நிலை குலையாமல், ஒரு சொல் பல பொருள் தரும் முறையில் பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் சிலேடையாக அமைகிறது. (நஞ்சு - விடம், நைந்து ; தோல் - பாம்பின் சட்டை, வாழைப்பழத்தோல் ; வெஞ்சினம் - கடுங் கோபம், கறி உணவு.)

இங்ஙனம் சொல்லைப் பிளக்காமல் பொருள் கொள்வது **செம்மொழிச்சிலேடையாகும்.**

பிரிமொழிச்சிலேடை :

'தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய
எள்ளா வரிமா னிடர்மிகுப்ப—உள்வாழ்தேஞ்
சிந்துந் தகைமைத்தே யெங்கோன் திருவுள்ளம்
நந்துந் தொழில்புரிந்தார் நாடு.'

இதில், ‘ தள்ளாவிடத்தேர் ’ என்பது, ‘ தள்ளா இடத்துஏர்’ எனவும், ‘தள்ளா விடத்தேர்’ எனவும், ‘ தாமரை ’ என்பது ‘ தாம் மரை ’ எனவும், ‘ அரியினிடர் ’ என்பது ‘ அரிமானிடர் ’ எனவும், ‘ அரிமான் இடர் ’ எனவும் பிரிந்து சோழனுடைய மனங்களிக்க நடந்தோர் நாட்டுக்கும், அவனது மனம் வெறுக்க நடந்தோர் நாட்டுக்கும் சிலேடை யாக அமைந்திருப்பதால் இது **பிரிமொழிச் சிலேடையாகும்.**

4. மடக்கணி :

ஒரு செய்யுளில் ஒரு தொடர் இடைவிட்டா யினும், இடைவிடாது தொடர்ந்தாயினும் வேறு வேறு பொருள் உண்டாகுமாறு ஓர் அடியிலோ, பல அடிகளிலோ திரும்பத் திரும்ப வருதல் **மடக்கணி** யாகும். இதற்கு **யமகம்** என்னும் பெயரும் உண்டு.

‘ வடமலையா னந்தமிறை வன்சிலையான் சேக்கை
வடமலையா னந்தமிறை வன்.’

இந்தச் செய்யுளின் முதலடியில், ‘ வடமலையா னந்த மிறைவன் ’ என்னும் தொடர் வந்துள்ளது. அதே தொடர் அடுத்த அடியிலும் திரும்ப வந்துள்ளது. எனினும், வெவ்வேறு பொருள்படு கிறது. இவ்வாறு அமைவது **மடக்கணியாகும்.**

1. வடமலையான் + அந்தம் + இறை + வல் + சிலையான்—வடவேங்கடமலையில் உள்ளவனும் அழகு பொழிகின்ற வலிய வில்லுடையவனும் என்று இத்தொடர் பொருள்படுகின்றது.

2. (சேக்கை) வடம்+அலையான்+நம்தம்+ இறைவன்—'ஆலிலையையும் கடலையும் படுக்கை யாக உடையவனாகிய திருமால் நமக்குத் தலைவனா வான்' என்று பொருள்படுகிறது.

5. வஞ்சப்புகழ்ச்சியணி :

புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் **வஞ்சப்புகழ்ச்சி அணி** எனப்படும். **புகழாப் புகழ்ச்சியணி**, **இலேச வணி** என்பவை இதன் வேறு பெயர்களாகும்.

'தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.'

இக்குறட்பாவில், 'கயவர் தேவர் போன்றவர்' எனப் புகழ்ந்து கூறுவது போலக் கூறிப் பிறகு, 'கயவர் தம் மனம்போன போக்கில் வாழும் மக்கள்' என இகழ்ச்சி தோன்றக் கூறப்பட்டிருக்கின்றது. இவ்வாறு புகழ்வது போலப் பழித்தல் **வஞ்சப் புகழ்ச்சி** அணியாகும்.

'பாரி பாரி என்றுபல ஏத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர் ;
பாரி ஒருவனும் அல்லன்,
மாரியும் உண்டீண் டுலகுபுரப் பதுவே.

இந்தச் செய்யுளில், பாரி என்னும் வள்ளலை இகழ்ந்து கூறுவது போலக் கூறிப் பின்னர், 'மாரி (மேகம்) போலக் கைம்மாறு கருதாமல் கொடுக்கும் வள்ளல் பாரி' எனப் புகழ்ந்து கூறப்பட்டிருக் கிறது.

இவ்வாறு பழிப்பது போலப் புகழ்தலும் **வஞ்சப்புகழ்ச்சி அணியாகும்.**

6. சொற்பொருட்பின் வரு நிலையணி:

ஒரு சொல் ஒரு செய்யுளில் பலவிடங்களில் பொருள் மாறாமல் பயின்றுவருவது **சொற்பொருட்பின் வரு நிலையணி**யாகும்.

'செல்வத்துட் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாம் தலை.'

இக்குறட்பாவில் '**செல்வம்**' என்னும் சொல் அதன் பொருள் கெடாமல் பன்முறை திரும்பத் திரும்ப வந்துள்ளது. ஒரு செய்யுளில் முன் வந்த சொல் அதே பொருளில் பின்னும் பல முறை வருவது **சொற்பொருட்பின் வரு நிலையணி** எனப்படும்.

பயிற்சி:

1. 'அணி' என்பது யாது?
2. பின் வரும் அணிகளை வேறு எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக:—
   வஞ்சப்புகழ்ச்சி, வேற்றுமை, மடக்கு, வேற்றுப் பொருள் வைப்பு.
3. 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
   மெய்ப்பொருள் காண்பதறிவு.'
   இதில் அமைந்துள்ள அணி யாது?
4. சிலேடைகளை விளக்குக:—காவலர், இருப்பம்பலம், அரிவை, வெள்ளியரங்கம், என்பரவாமை.
5. 'அரங்க மையற்கு வெள்ளி யரங்கமே
   ஆல யம்பிற வெள்ளி யரங்கமே.'
   —இஃது என்ன அணி?
6. 'மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்முள்
   ஒலியும் பெருமையும் ஒக்கும்;—மலிதேரான்
   கச்சி படுவ கடல்படா; கச்சி
   கடல்படுவ எல்லாம் படும்.'
   இச்செய்யுளில் அமைந்துள்ள அணி யாது? விளக்கி வரைக.

இரண்டாம் பகுதி

மொழிப்பயிற்சி

1. வாக்கியம்—பல வகைகள்

தெளிவாகப் பொருள் விளங்குமாறு சொற்களை அமைப்பது 'சொற்றொடர்' அல்லது வாக்கியம் எனப்படும். அது, **தனி வாக்கியம், தொடர் வாக்கியம், கலவை வாக்கியம்** என மூன்று வகைப்படும்.

செய்தி வாக்கியம், கட்டளை வாக்கியம், வினு வாக்கியம், உணர்ச்சி வாக்கியம், செய்வினை வாக்கியம், செயப்பாட்டு வினை வாக்கியம், உடன் பாட்டு வாக்கியம், எதிர்மறை வாக்கியம், தன் வினை வாக்கியம், பிறவினை வாக்கியம் என்பன தனி வாக்கியத்தில் அடங்குபவையாகும்.

தனி வாக்கியம் :

திருமாவளவன் பாடுகிருன்.

இது, பொருள் தெளிவாக விளங்குகின்ற ஒரு தனி வாக்கியம். இதனை முதல் வாக்கியம் என்றும் கூறலாம். இவ்வாறு ஓர் எழுவாய் பயனிலையோடு கூடி வந்து, பொருள் தெரிவிப்பதாய் அமைந்த வாக்கியம் '**தனி வாக்கியம்**' எனப்படும்.

புகழேந்தியார் சிறந்த பேராசிரியர்.—இஃது ஒரு செய்தியைத் தெரிவிப்பதால் '**செய்தி வாக்கியம்**' ஆகும். இதன் முடிவில் முற்றுப்புள்ளி இடுதல் வேண்டும்.

'உன் வேலையைப் பொறுப்புடன் செய்.'— இது கட்டளையைத் தெரிவிப்பதால் **கட்டளை**

வாக்கியமாகும். இதன் முடிவில் முற்றுப்புள்ளி இடவேண்டும்.

'இந்நூலை எழுதியவர் எவர்?'—இது வினுப் பொருளைத் தருதலின் '**வினு வாக்கியம்**' ஆகும். இதன் முடிவில் கேள்விக்குறி இடவேண்டும்.

ஆ! எவ்வளவு உயர்ந்த கட்டடம்!
அந்தோ! பசியால் வாடுகின்ருர்களே!
சீச்சீ! இந்தப் பழம் புளிக்கும்!
ஐயோ பாவம்!

என மகிழ்ச்சி, துன்பம், வெறுப்பு, இரக்கம் முதலிய உணர்ச்சிகளைத் தெரிவிக்கும் வாக்கியம் '**உணர்ச்சி வாக்கியம்**' ஆகும். இதன் முடிவில் உணர்ச்சிக்குறி இடவேண்டும்.

சோழன் கோவில் கட்டினுன்.—இது செய்வினை வாக்கியம்.

கோவில் சோழனுல் கட்டப்பட்டது.—இது செயப்பாட்டு வினை வாக்கியம்.

கந்தன் நன்ருகப் படித்தான்.—இஃது உடன்பாட்டு வாக்கியம்.

கந்தன் நன்ருகப் படித்திலன்.—இஃது எதிர்மறை வாக்கியம்.

சேரன் சோறிட்டான்.—இது தன்வினை வாக்கியம்.

சேரன் சோறிடுவித்தான்.—இது பிறவினை வாக்கியம்.

இவ்வாக்கியங்கள் அனைத்தும் தனி வாக்கியத்தில் அடங்குபவை.

தொடர் வாக்கியம் :

(1) நச்சிஞர்க்கினியன் நல்ல பண்பாடுடை யவன் ; அறிவிற்சிறந்தவன் ; ஊக்கம் மிகுந்தவன் ; நீதி நெறியில் நின்றவன்.

(2) நான் ஆற்றுக்குச் சென்று நீராடிய பிறகு, கோவிலுக்குப் போய், இறைவனே வணங்கிவிட்டு வருகிறேன்.

இவ்வாறு பல தனி வாக்கியங்கள் தொடர்ந்து வருவதும், ஓர் எழுவாய் பல பயனிலேகளேப் பெற்று வருவதும் **தொடர் வாக்கியம்** எனப்படும்.

கலவை வாக்கியம் :

நாம் வாழ்வில் உயர வேண்டுமாளுல், நாடோறும் நன்ருக உழைக்க வேண்டும்.

இதில், 'நாம் நாடோறும் நன்ருக உழைக்க வேண்டும்,' என்பது தனி வாக்கியம். 'வாழ்வில் உயர வேண்டுமாளுல்' என்பது துணே வாக்கியம்.

இவ்வாறு ஒரு தனி வாக்கியம் அதனேடு தொடர்புடைய துணே வாக்கியத்துடன் இயைந்து வருவது '**கலவை வாக்கியம்**' எனப்படும்.

இவைதவிர, நம் தமிழ்மொழியில் ஒரே எழுத்து ஒரு வாக்கியமாக அமைதலும் உண்டு. 'வா' என்பது ஒரே எழுத்து. இந்த ஓர் உயிர்மெய் யெழுத்து பொருளுடைய ஒரு மொழியாயும் விளங்குகிறது. இது போன்ற ஓர் எழுத்தொரு மொழிகள் தமிழில் பல இருக்கின்றன. 'வா' என்பது ஓர் எழுத்து ஒரு மொழியாய் விளங்குவது போன்று, ஒரு வாக்கியமாயும் விளங்குகிறது. 'வா' என்பது 'நீ வா' என்று அமையும்போது

முழுக் கட்டளை வாக்கியமாய் அமைந்துவிடுகிறது. 'வா' என்பதை வாக்கியம் என்று சொல்லும் போது 'நீ' என்பது தோன்ரு எழுவாயாய் இருக்கிறது. இவ்வாறு ஏவலில்—கட்டளையிடும் பொருளில்—'போ, தா, வை, கா' என்னும் தனி எழுத்துக்கள் வாக்கியமாய் வருதலும் உண்டு. 'எடு, இரு, நட, ஓடு, பிடி' என ஈரெழுத்துச் சொற்களும் இங்ஙனமே வாக்கியங்களாக அமைதல் உண்டு.

2. வாக்கிய அமைப்பு

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் நிற்கும் முறை

பொன்னி வளவன் பால் குடித்தான்.

இந்த வாக்கியத்தில், பொன்னி வளவன்—எழுவாய்; குடித்தான்—பயனிலை; பால்—செயப்படுபொருள்.

இவ்வாறு எழுவாய் முதலிலும், பயனிலை இறுதியிலும், செயப்படுபொருள் இடையிலும் அமைவதே வாக்கியத்தின் இயல்பாகும்.

அவன் வேலன். அவன் யாவன்?

அவன் —எழுவாய்	அவன் —எழுவாய்
வேலன்—பயனிலை	யாவன்—பயனிலை

இவ்வாறு ஓர் எழுவாய் பெயரையும் வினையையும் பயனிலையாகக் கொள்ளும் என்ருலும், பெரும்பாலும் வினைமுற்றையே பயனிலையாகக் கொள்ளும் என்பதை உணர்தல் வேண்டும்.

ஒரு வாக்கியத்தில் எழுவாய் முதலிலும், பயனிலை ஈற்றிலும் அமைவது பெரும்பான்மை வழக்கே எனினும், விரைவு, வெகுளி, அச்சம், மகிழ்ச்சி, வியப்பு முதலியவற்றை உணர்த்த நேரும்போது, இந்த முறை மாறி, பயனிலை முதலிலும் இடையிலுமாய் நிற்றலும், எழுவாய் ஈற்றில் நிற்றலும் உண்டு.

செங்குட்டுவன் மலர் பறித்தான்.

இவ்வாக்கியத்தில் எழுவாய் முதலிலும், பயனிலை ஈற்றிலும் நிற்கின்றன. இஃது இயல்பாய் அமைந்த வாக்கியமாகும்.

பறித்தான் மலரைச் செங்குட்டுவன்.

இந்த வாக்கியத்தில் பயனிலை முதலில் நிற்கின்றது. எழுவாய் ஈற்றிலும் செயப்படு பொருள் இயல்பாயும் நிற்கின்றன.

மலரைப் பறித்தான் செங்குட்டுவன்.

இந்த வாக்கியத்தில் பயனிலை, முதலில் நிற்கும் செயப்படுபொருளுக்கும், ஈற்றில் நிற்கும் எழுவாய்க்கும் நடுவில் நிற்கிறது.

ஒரு வாக்கியத்தில் முதல், இடை, கடை என்னும் மூவிடங்களில் பயனிலை நிற்பது போலவே, செயப்படுபொருளும் நிற்கும்.

வெற்றிவேலன் பந்தை எறிந்தான்.

இயல்பாய் அமைந்துள்ள இந்த வாக்கியத்தில், பந்தை என்னும் செயப்படுபொருள் வாக்கியத்தின் நடுவில் நிற்கிறது.

எறிந்தான் வெற்றிவேலன் பந்தை.

இந்த வாக்கியத்தில் செயப்படுபொருள் ஈற்றில் வந்திருக்கிறது.

பந்தை எறிந்தான் வெற்றிவேலன்.

இந்த வாக்கியத்தில் செயப்படுபொருள் முதலில் நிற்கின்றது.

எச்சங்கள் நிற்கும் முறை

செங்குட்டுவனது வீரத்தை விளக்கக் கருதி, பரணர் சிறந்த கவிதைகளைப் பாடினுர்.— இந்த வாக்கியத்தில் பரணர்—எழுவாய். பாடினுர் — பயனிலை. கவிதைகளை — செயப்படுபொருள். கருதி — வினையெச்சம். சிறந்த — பெயரெச்சம். 'செங்குட்டுவனது வீரத்தை விளக்கக் கருதி' என்பது துணை வாக்கியம். 'பரணர் சிறந்த கவிதைகளைப் பாடினுர்' என்பது முதல் வாக்கியம்.

இவ்வாக்கியத்தில் எழுவாய் வாக்கியத்தின் இடையில் உள்ளது. பயனிலை வாக்கியத்தின் இறுதியில் உள்ளது. செயப்படுபொருள் எழுவாய்க்கும் பயனிலைக்கும் நடுவில் அமைந்திருக்கிறது. வினை எச்சம் வாக்கியத்தின் இடையில் அமைந்து வினைமுற்றைத் தழுவுகிறது. பெயரெச்சம் பெயரைத் தழுவிப் பெயருக்கு முன்னுல் நிற்கிறது. துணை வாக்கியம் முதல் வாக்கியத்துக்கு முன் நிற்கிறது.

இவ்வாறு வாக்கியங்கள் பலவாருக அமையும். அவ்வாக்கியங்களில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் முன் பின்னுக மாறி வந்து அமைதலும் உண்டு.

எழுவாய் பெயர்ச்சொல்லாகவோ, வினையாலணையும் பெயராகவோ இருக்கும். பயனிலை, வினைமுற்ருகவும், வினைப்பெயராகவும், பெயர்ச்சொல்லாகவும் அமையும்.

கண்ணன் கண்டு பேசினன்.—இவ்வாக்கியத்தில் வினை எச்சம் வினைமுற்றுக்கு முன்னல் நிற்கிறது. கண்ணன் பேசினன் கண்டு—என வரும் வாக்கியத்தில் வினையெச்சம் வினைமுற்றுக்குப் பின்னல் வந்தது. எனவே, வினை எச்சமானது வினைச்சொல்லுக்கு முன்னகவும் பின்னகவும் அமைவதுண்டு. ஆனல், பெயரெச்சமோ, இதைப்போலப் பெயருக்குப் பின் வருவதில்லை. அது பெயருக்கு முன்னேதான் வரும்.

எனவே, வாக்கியங்களை ஒழுங்காக அமைப்பதற்கு, எழுவாய் பயனிலைகளை அவற்றிற்குரிய இடங்களில் ஏற்றவாறு அமைத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைகள் இல்லாமல் வாக்கியங்கள் அமைவதில்லை. சில இடங்களில் நேர்க்கூற்றில் தன்மை முன்னிலை இடங்களில் எழுவாய் வெளிப்படையாக இல்லாவிடினும், தோன்ருஎழுவாயாகவேனும் இருந்தே தீரும். எனவே, ஒரு வாக்கியத்தின் உயிர் நாடியாய் விளங்குபவை, எழுவாய் பயனிலைகளேயாகும். பயனிலையின்றி எத்தகைய வாக்கியமும் அமைய இயலாது. எச்சங்கள் எழுவாய்க்காயினும் பயனிலைக்காயினும் அடையாக நிற்பவையாகும்.

3. ஒரே கருத்தைப் பல உருவ வாக்கியங்களில் வெளியிடுதல்

மலர்விழி கணக்குப் போட்டிலள்—இது செய்தி வாக்கியமாகும். மலர்விழியா கணக்குப் போடுபவள் ?—இது வினு வாக்கியமாகும். இவ்வாறு ஒரே கருத்து, செய்தி வாக்கியத்தாலும் வினு வாக்கியத்தாலும் விளக்கப்பட்டிருக்கிறது.

அறிவுடைநம்பி பந்து ஆடினுன்.—இது செய்வினை வாக்கியம். அறிவுடைநம்பியால் பந்து ஆடப்பட்டது—இது செயப்பாட்டு வினை வாக்கியம்.

இவ்வாறு ஒரே கருத்து, செய்வினை வாக்கியத்தாலும் செயப்பாட்டு வினை வாக்கியத்தாலும் விளக்கப்பட்டிருக்கிறது.

ஆ! எவ்வளவு இன்பமாய் இருக்கிறது இந்தக் காட்சி !—இஃது உணர்ச்சி வாக்கியம்.

இந்தக் காட்சியின்பம் என்னை மெய்ம்மறக்கச் செய்கிறது !

இந்தக் காட்சியின்பம் என்னை மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்த்திவிட்டது !

இந்தக் காட்சியின்பத்தால் யான் எவ்வளவு மகிழ்ச்சியடைந்தேன் என்பதை எடுத்தியம்பவும் இயலுமோ !

என, இவ்வாறு ஒரே கருத்தைப் பல வகையாய் விளக்குவதற்கேற்றவாறு வாக்கியங்களை அமைக்கலாம்.

திருவள்ளுவன் சுவடியைத் தொலைத்து விட்டான் ; அதை மறைக்காமல் கூறிவிட்டான்.

தான் சுவடியைத் தொலைத்துவிட்டதைத் திருவள்ளுவன் மறைக்காமல் கூறிவிட்டான்.

இவ்வாறு ஒரே கருத்தை வெவ்வேறு வாக்கியங்களால் விளக்கலாம்.

கண்ணன், 'நான் படிக்கிறேன்,' என்றான்.—இது நேர்க்கூற்று.

'நான் படிக்கிறேன்,' என்று கண்ணன் கூறினான்.—இதுவும் நேர்க்கூற்று.

கண்ணன் தான் படிக்கிறதாகக் கூறினான்—இஃது அயற்கூற்று.

இந்த மூன்று வாக்கியங்களும் ஒரே கருத்தைத் தெரிவிக்கின்றன.

வெயிலில் வந்த களைப்பால் வேலன் உறங்கினான்.—இது தனி வாக்கியம்.

வேலன் வெயிலில் வந்தான்; களைப்பால் உறங்கினான்—இது தொடர் வாக்கியம்.

வெயிலில் வந்த களைப்பு வேலனை உறங்கச் செய்தது.—இது கலவை வாக்கியம்.

இந்த மூன்று வாக்கியங்களும் ஒரே கருத்தைத் தெரிவிக்கின்றன.

மொழிகளுள் பல, இலக்கிய வளமில்லாதவை—இஃது எதிர் மறை.

மொழிகளுள் சிலவே இலக்கிய வளமுள்ளவை—இஃது உடன்பாடு.

எனவே, இவ்வாறுஒரே கருத்தை அக்கருத்துக் கெடாமல் பல உருவ வாக்கியங்களாக மாற்றி அமைக்கலாம் என்பதை அறிக.

4. பத்தியமைப்பு

எப்பொருளைப்பற்றிய செய்திகளை எழுதிஞலும், அப்பொருள் பற்றிய செய்திக் கருத்துக்களை எல்லாம் நாம் கோவைப்பட அமைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு நாம் அமைத்துக்கொண்ட கருத்துக்களை வேண்டுமளவு தனித்தனி கூறுகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். அத்தனித் தனி கூறுகளே பத்தியமைப்பு ஆகும்.

கட்டுரை, கடிதம், கதை முதலியன எல்லாம் பத்தியமைப்புடன் எழுதப்படல் வேண்டும். அவ்வாறு எழுதிஞல்தான், அவற்றைப் படிப்போர் தெளிவாகவும் எளிதாகவும் விளங்கிக்கொள்ள இயலும். மேலும், பத்தியமைப்புப் பொருளின் கருத்துக்களைத் தெளிவாக உணர்ந்துகொள்ளவும், கருத்துக்களை மனத்தில் நிறுத்திக்கொள்ளவும், படிப்பதற்கு வசதியாகவும் இருக்கும்.

இனி, பத்திப்பிரிவின் ஒருமைப்பாடு பற்றிக் காண்போம். ஒரு சொற்ருெடர் ஒரே கருத்தை விளக்குவது போல, ஒரே பத்தி ஒரே பொருட் கூருகிய கருத்தைப் பற்றியதாகவே இருத்தல் வேண்டும்.

எப்பொருளும் பல கருத்துக்களைக் கொண்டதாய் இருக்கும். அவற்றுள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பத்தியாய் அமைத்து எழுதவேண்டும். ஒரு கருத்தினை விளக்குகின்ற பல செய்திகள் இருக்கலாம். அவற்றிற்கெல்லாம் ஒவ்வொரு பத்தி அமைத்து எழுத வேண்டும். அப்பத்திப் பிரிவு அமைப்போ, பார்த்தவுடன் தெளிவாகத் தெரிந்து கொள்ளுதற்கு ஏற்றவாறு, ஒவ்வொரு பத்திக்கும்

இடையே இடை வெளி விட்டுச் சற்று வலப்புறம் தள்ளித் தொடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

ஒரு பத்தியில் எடுத்துக்கொண்ட பொருளுக் கேற்ற கருத்துக்களை எழுதும்போது, ஒரு பத்தி யின் இறுதிச் சொற்றொடர்க்கும் அடுத்து வரும் முதற்பத்தியின் முதற்சொற்றொடர்க்கும் தொடர்பு இருக்க வேண்டும்.

பொதுவாக ஒரு பத்தியின் முதற்சொற்றொடர் அப்பத்தியின் கருத்தைத் தொடங்குவதாக அமைதல் வேண்டும். அடுத்து வரும் சொற்றொடர் கள் அக்கருத்தை விளக்குவனவாகவோ, வளர்ப் பனவாகவோ, வற்புறுத்துவனவாகவோ அமைந் திருக்க வேண்டும். இறுதிச் சொற்றொடர் அதனை முடித்துக் காட்டுவதாய் அமைதல் வேண்டும். பத்திக் கருத்து அமைந்திருக்கும் சொற்றொடர் 'கருத்துச் சொற்றொடர்' எனப்படும். இக் கருத்துச் சொற்றொடர், பத்தியின் முதல், இடை, கடை என்ற மூவிடங்களுள் எவ்விடத்திலாவது அமையலாம். முதற்சொற்றொடர் படிப்பவரின் மனத்தை ஈர்த்து அவரது ஆர்வத்தைத் தூண்டுவ தாய் இருத்தல் வேண்டும். இடையில் உள்ள சொற்றொடர்கள் அவ்வார்வத்தை மேலும் வளர்ப் பனவாய் இருத்தல் வேண்டும். இறுதிச் சொற் றொடர் மன நிறைவு தருவதாய் இருத்தல் வேண்டும்.

பத்திகள் எல்லாம் செய்யுள்களைப் போலக் குறிப்பிட்ட ஒரே அளவினவாய் இரா. அவை, குறுகியதும், நீண்டதுமாய் இருக்கும். ஒரு பத்தி யின் அளவு அதன் கருத்தைப் பொறுத்துச்

சிறியதும் பெரியதுமாய் இருக்கலாம். ஒரு பத்தி பல சொற்ருெடர்களைக் கொண்டதாகவோ, ஒரு சொற்ருெடரைக் கொண்டதாகவோ இருக்கலாம். ஒரு பக்கத்திற்கு மேற்படும் பத்திகளைச் சிறு சிறு பத்திகளாகப் பிரித்துக்கொள்ளுதலே நலமாகும். பத்தியமைப்பின் பயன், படிப்பதற்கு வசதியும், பொருள் விளக்கத் தெளிவும் ஆகும். ஆதலின், அப்பலன் கெடுமாறு பத்திகளை அளவு கடந்து நீட்டுதல் கூடாது.

பத்தியின் நடுவில் மேற்கோட்செய்யுள் வந்தால், அதைத்தனித்து எழுதுதல் வேண்டும். எவ்வாறெனின், செய்யுள் உருவம் சிதையாதவாறு அடுத்து வரும் வரியில் இடம் விட்டுத் தொடங்கி எழுதுதல் வேண்டும்.

பத்தியமைப்பாவது யாதென்றும், அதனல் பெறும் பயன் என்னவென்றும், அதன் விளக்கமும் அளவும் எத்தகையவென்றும், மேற்கோட்செய்யுள் களை அமைத்து எழுதுவதெவ்வாறு என்றும் கூறப் பட்டுள்ளன.

பத்தி பிரியாத முன்:

"இக்காலத்தில் பலர் காதுகளுக்கும் மூக்குக் கும் நகை அணிந்துகொள்கிருர்கள். ஆனல், வள்ளுவர் நம் கண்களுக்கும் ஒரு நகை அணிய வேண்டும் என்கிருர். கண்களுக்குரிய நகை எது? அது கண்ணேட்டம்! அஃதாவது, வாடி வதங்கு வோரின் துன்பங்களைக் கண்டு பொருமல் வருந்தி முத்துமுத்தாக நீர் வடிப்பதே கண்களின் நகை யாய் இருக்க வேண்டும் என்கிறது வள்ளுவர் உள்ளம். 'கண்ணிற்கணிகலம் கண்ணேட்டம்

அஃதின்றேல், புண்ணென்றுணரப்படும்' என்பதே அக்குறள். கண்ணோட்டத்தை அணிகலமாய்க் கொண்டவர்களுடைய கண்களே கண்களென்றார். அப்படியானால் கண்ணோட்டமில்லாக் கண்கள் எத்தகையன? 'அவை கண்கள் அல்ல; புண்கள்,' என்று கூறுகிறார். கண் அறியும்; புண் அறியாது. ஆதலின், 'கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்,' என்கிறார். என்ன அருளுள்ளம் பாருங்கள்!"

பல சொற்றொடர்களால் தொகுக்கப்பட்ட இச்செய்தியில் இரண்டு கருத்துக்கள் உள்ளன. (1) காதுகளுக்கு மூக்குக்கு நகை வேண்டுவது போலக் கண்களுக்கும் நகை வேண்டும் என்பது ஒரு கருத்து; (2) கண் அணிகலம் கண்ணோட்டம் என்பதும், அதற்குரியதாய்க் காட்டப்படுகின்ற மேற்கோளும் இரண்டாவது கருத்து. இவ்விரு கருத்துக்களும் மேற்காட்டிய பகுதியில் அடங்கியுள்ளன. எனவே, இச்செய்தியை, இரு பத்திகளாகப் பிரித்து இடையில் வரும் மேற்கோளையும் முறைப்படி அமைத்துக் காண்போம்:

பத்திகள் பிரித்த பின்:

"இக்காலத்தில் பலர் காதுகளுக்கும் மூக்குக்கும் நகை அணிந்துகொள்கிறார்கள். ஆனால், வள்ளுவர் நம் கண்களுக்கும் ஒரு நகை அணிய வேண்டும் என்கிறார். கண்களுக்குரிய நகை எது? அது கண்ணோட்டம். அஃதாவது, வாடி வதங்குவோரின் துன்பங்களைக் கண்டு பொறுமல் வருந்தி முத்து முத்தாக நீர் வடிப்பதே கண்களுக்கு நகை

யாய் இருக்க வேண்டும் என்கிறது வள்ளுவர் உள்ளம்.

‘கண்ணிற் கணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென் றுணரப் படும்.’

என்பதே அக்குறள். கண்ணோட்டத்தை அணிகலமாகக் கொண்டவர்களுடைய கண்களே கண்கள் என்றார். அப்படியானால், கண்ணோட்டமில்லாக் கண்கள் எத்தகையன? ‘அவை கண்கள் அல்ல; புண்கள்,’ என்று கூறுகிறார். கண் அறியும்; புண் அறியாது. ஆதலின்,

‘கண்ணுக்கு அணிகலம் கண்ணோட்டம்’

என்றார். என்ன அருளுள்ளம் பாருங்கள்!

இங்ஙனம் பத்தி பத்தியாகப் பிரித்து எழுதினால், செய்தியில் உள்ள கருத்துக்கள் தெளிவாயும் எளிதாயும் விளங்கும். எனவே, பத்திகளை நீட்டிக் கொண்டே செல்லாமல், கருத்திற்கு ஏற்பப் பத்தி பிரித்து அமைத்து எழுதப் பழகிக்கொள்ளுதல் வேண்டும்.

5. நடை

குறித்த கருத்தை விளக்குவதற்குப் பொருத்தமான சொற்களும், சொற்றொடர்களும் தக்கதொரு முறையில் அமைந்து, இலக்கண அமைதி குறையாமல் வருவதே ‘நடை’ எனப்படும். இது பல வகைப்படும்.

வெள்ளை நடை அல்லது எளிய நடை:

நான் ஒரு சோலைக்குச் சென்றேன். அங்கே மரம் செடி கொடிகள் நிறைந்திருந்தன. மரங்களில் காய்கனிகளைக் கண்டேன். செடிகொடிகளில்

பல நிறப் பூக்கள் பூத்திருக்கக் கண்டேன்; அவ் வழகுகளைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தேன். பிறகு வீட்டிற்குத் திரும்பினேன்.

இதில் அமைந்துள்ள கருத்தும், சொற்களும், சொற்றொடர்களும் எளிய முறையில் அமைற்து உள்ளன. இவ்வாறு படிக்கும் போதே எல்லாரும் பொருள் புரிந்துகொள்ளும் வகையில் எளிதாக அமைந்திருப்பது வெள்ளை நடை, அல்லது எளிய நடை எனப்படும்.

ஆற்றொழுக்கு நடை, அல்லது ஒழுகு இசை நடை :

'சென்னை மாநகரின் அருகேயுள்ள கடற்கரை யூர்களிலே மிகு தொன்மை வாய்ந்தது திரு வொற்றியூர். மூவர் தமிழும் பெற்றது அம் மூதூர். பட்டினத்தார் என்று தமிழகம் போற்றும் பெரியார் அப்பதியிலே பல நாள் வாழ்ந்தார். அவரை நன்றாகப் பற்றிக்கொண்டது ஒற்றியூர். தமது உள்ளம் கவர்ந்த ஒற்றியூர்க் கடற்கரையிலே நின்று ஒரு நாள் அவர் உயரிய உண்மைகளை உணர்த்தலுற்றார்.'

—ரா. பி. சேதுப்பிள்ளை

இதில் கருத்துக்களும், அவற்றை விளக்கும் தொடர்களும் ஆற்றொழுக்குப் போலத் தங்கு தடையின்றிச் செல்கின்றன. ஆதலால், இதனை **ஆற்றொழுக்கு நடை** அல்லது '**ஒழுகு இசை நடை**' என்று சொல்லலாம்.

செந்தமிழ் நடை :

'பண்டைத்தமிழ் மக்கள், இயற்கை வழி வாழ்வு செலுத்தி, அதற்கு அடிப்படையாகவுள்ள

இறைவனுண்மை கண்டு, அவனழகால் இயற்கை அழகு பெறுவது நோக்கி, அவ்விறைவனை அழகன் என்னும் பொருள்பட முருகன் என்னும் பெயரால் அழைத்தார்கள். இவர்கள், இயற்கை வாயிலாக முருகைக் கண்டு நுகர்ந்த இன்பத்தைக் கலித்தொகை, பத்துப்பாட்டு, திருக்கோவையார் முதலிய நூல்களில் காணலாம்.'

—திரு. வி. கல்யாணசுந்தரனார்

இவ்வாறு பிற மொழிச் சொற்கலவாமல், எப்பிழையும் இல்லாமல், திருந்திய இனிய தமிழில் எழுதுவது 'செந்தமிழ் நடை' எனப்படும்.

கொடுந்தமிழ் நடை :

அச்சன் கழனிக்குச் சென்ற பின், தள்ளை சொன்றி அட்டாள். நான் பாழிக்குச் சென்று வெள்ளம் கொணர்ந்தேன். (அச்சன் - தந்தை. தள்ளை - தாய். பாழி - சிறுகுளம். வெள்ளம் - நல்ல நீர். இவை திசைச்சொற்கள்.)

இவ்வாறு வழக்கில் பயின்று வாராத திசைச் சொற்களைப் புகுத்தி எழுதுவது கொடுந்தமிழ் நடை எனப்படும். தமிழின் வளர்ச்சிக்குத் தடையான இந்நடை விலக்குதற்கு உரியதென்பதை அறிக.

கொச்சை நடை :

'நேத்திக்கி அவா ஆத்துலே ஒறமொறை வந்திருந்தாங்களாமே! நீ போனியா? அவங்க எதாச்சும் சொன்னாங்களா?'

இவ்வாறு வடிவம் இல்லாத சொற்களைப் புகுத்திப் பேச்சு வழக்கில் உள்ள கொச்சைச்

சொற்களைக் கையாண்டு எழுதுவது 'கொச்சை நடை' எனப்படும். இந்நடையும் தவிர்க்கப்பட வேண்டுவதே.

இலக்கிய நடை, அல்லது உரைச்செய்யுள் நடை :

'இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் அந்தமிலின்பத்தழிவில் வீடும் நெறியறிந்தெய்து தற்குரிய மாந்தர்க்குறுதியென உயர்ந்தோரா னெடுக்கப்பட்ட பொருள் நான்கு. அவை அறம் பொருளின்பம் வீடென்பன. அவற்றுள், வீடென்பது சிந்தையுமொழியுஞ்செல்லா நிலைமைத்தாகலின், துறவறமாகிய காரண வகையாற்கூறப்படுவதல்லது, இலக்கண வகையாற்கூறப்படாமையின், நூல்களாற்கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்.'

—திருக்குறள்—பரிமேலழகருரை

இவ்வாறுள்ள சொற்களும், சொற்றொடர்களும் புலமை சான்றவர்களுக்கேயன்றி மற்றவர்கட்கு எளிதில் விளங்காதனவாகலின், இஃது 'இலக்கியநடை' அல்லது '**உரைச்செய்யுள் நடை**' எனப்படும்.

மணி பவள நடை, அல்லது மணிப்பிரவாள நடை :

'ஸகல வித கைங்கர்ய உத்யோகத்துக்கு அநுகுணமாக ஸர்வேஸ்வரன் ஸர்வாத்மத் தன்மையைக் காட்ட அங்கே ஸர்வவித கைங்கர்யத்தையும் பண்ணுகைக்கு இச்சித்து அதற்கு அசக்தராய் ஸர்வேஸ்வரன் பண்ணின மாத்திரமே போது

மென்கிற வார்த்தையாலே வாசிக கைங்கர்யம் பண்ணினதையருளிச்செய்கின்றார்.'

—நம்மாழ்வார் 4ஆம் திருவாய் மொழி அவதாரிகை

இவ்வாறு வடமொழிச் சொற்களும் தென் மொழிச்சொற்களும் கலந்துள்ள நடையே '**மணி பவள நடை**' அல்லது '**மணிப்பிரவாள நடை**' எனப்படும். இங்ஙனம் எழுதுவதும் பலர்க்குப் பயன் தாராதென்பதை அறிக. எனவே, இதுவும் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

கலவை நடை :

'எங்கள் ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் மிகவும் நற்குணமுடையவர். நாங்களும் அவரிடம் ரொம்பக் கைண்டாக நடந்துகொள்வோம். வருஷந் தோறும் நல்ல ரிஸல்ட் வருகிறது; ஜனங்களும் அவரை வெகுவாகப் பாராட்டுகிறார்கள்.'

இதில் வடமொழிச் சொற்களும் ஆங்கில மொழிச்சொற்களும், தமிழ் மொழிச்சொற்களும் கலந்து வந்துள்ளன. இவ்வாறு பல மொழிகளைக் கலந்து எழுதும் நடை '**கலவை நடை**' எனப்படும். இவ்வாறு எழுதும் முறை முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டுவதே எனவறிக.

நடை பல வகைப்படும். அவை வெள்ளை நடை, ஆற்றொழுக்கு நடை, செந்தமிழ் நடை, கொடுந்தமிழ் நடை, கொச்சை நடை, இலக்கிய நடை, மணி பவள நடை, கலவை நடை என்பவை.

கொடுந்தமிழ் நடை, கொச்சை நடை, மணி பவள நடை, கலவை நடை போன்ற நடைகளை மாணவர்கள் எழுதப்பழகுதல் கூடாது. இவ்வாறு

எழுதினால் தமிழின் வளர்ச்சி கேடுறும். எனவே, ஆற்றொழுக்கு நடை, செந்தமிழ் நடை, இலக்கிய நடை போன்ற நல்ல நடைகளை எழுதப்பழகுதல் வேண்டும். அவ்வாறு எழுதப் பழகுதலே மொழி வளர்ச்சிக்கு மாணவர் செய்யும் சிறந்ததொரு பணியுமாகும்.

6. வழூஉச்சொற்களும் திருத்தமும்

இன்றுள்ள பேச்சுத் தமிழ் மொழியில் வழூஉச் சொற்கள் பல கலந்துவிட்டிருக்கின்றன. அவற்றைத் திருத்தமாகக் கூறக் கற்றாலன்றி எழுத்திலும் இத்தவறுகள் பயின்று வருதல் கூடும். எனவே, வழூஉச்சொற்களையும் அவற்றின் திருத்தத்தையும் அறிவோம் :

வழூஉச்சொற்கள்	திருத்தம்
அகண்ட	அகன்ற
அதுகள்	அவைகள்
அமக்களம்	அமர்க்களம்
ஆச்சு	ஆயிற்று
ஆத்தில்	அகத்தில்
ஆம்படையாள்	அகமுடையாள்
ஆக்ஷி	ஆட்சி
இசித்தல்	இழுத்தல்
இத்தினி	இத்தனை
இரும்பல்	இருமல்
இல்லாட்டி	இல்லாவிட்டால்
உடமை	உடைமை
உத்திரவு	உத்தரவு
உந்தன்	உன்றன்

வழூஉச்சொற்கள்	திருத்தம்
எதாச்சியும்	எதுவாயினும்
எண்ணே	எண்ணெய்
என்பேரில்	என்மேல்
என்னமோ	என்னவோ
ஒண்டியாய்	ஒன்றியாய்
கட்டிடம்	கட்டடம்
கண்ட்ராவி	கண்ணராவி
கவுறு	கயிறு
கழட்டி	கழற்றி
காக்ஷி	காட்சி
குறவளை	குரல் வளை
கேழ்வி	கேள்வி
கோடாலி	கோடரி
கோர்வை	கோவை
சிரோன்மணி	சிரோமணி
சீக்காய்	சிகைக்காய்
சுந்திரம்	சுந்தரம்
சும்மாயிரு	சும்மாவிரு
சுவற்றில்	சுவரில்
செவத்தில்	சுவரில்
தண்ணி	தண்ணீர்
தவக்களை	தவளை
தலகாணி	தலையணை
திகட்டுகிறது	தெவிட்டுகிறது
துளிர்	தளிர்
தொந்திரவு	தொந்தரவு
பாவக்காய்	பாகற்காய்
புழக்கடை	புழைக்கடை
பேத்தி	பெயர்த்தி

வழூஉச்சொற்கள்	திருத்தம்
மானம் பாத்த	வானம் பார்த்த
மாக்ஷி	மாட்சி
முழுங்கு	விழுங்கு
முளிச்சான்	விழித்தான்
மெரித்தான்	மிதித்தான்
ரொம்ப	நிரம்ப
வந்திச்சின்னு	வந்ததென்றால்
வந்துகிட்டே	வந்துகொண்டே
வயறு	வயிறு
வரச்சே	வரச்செய்தே
வாக்கப்பட்டு	வாழ்க்கைப்பட்டு
வாவரசி	வாழ்வரசி
வெக்கம்	வெட்கம்
வெடிஞ்சுது	விடிந்தது
வென்னீர்	வெந்நீர்

7. விலக்குதற்குரிய இழிவழக்குக்கள்

நாம் எழுதும்போது இலக்கண அமைதி வாய்ந்த நல்ல சொற்களையே பயன்படுத்த வேண்டும். சான்றோரால் விலக்கப்பட்ட அமங்கலச் சொற்கள், வசை மொழிகள், கொச்சை மொழிகள் எழுத்தில் இடம் பெறுதல் பிழையாகும்.

"பசிக்கிது காத்தால நாஸ்தா பண்ணலே."

"அதுக பேச்சை கேட்காதே."

"என்னமோப்பா வரச்சே ஒண்டியா வராதே."

"என் வயத்திலே பால் வாத்தை."

"அவர் கேட்ட கேழ்விக்கு பதில் தெரியாம முளிச்சேன்."

"ஆத்துக்கிட்ட ரெண்டு காணி நஞ்செ இருக்குது."

"என் திரேகம் ரொம்ப எளச்சிட்டது."

"வலது பக்கத் தாவாரத்துலே தலகாணி பாயி இருக்குது."

"வவுரு இசுத்துப் புடிச்சிகினு நோவுது."

"நீ செளக்கியமா கீரியா."

மேற்கண்டவாறு பேசுவதோ எழுதுவதோ இழிவழக்காகும். இவ்வாறெல்லாம் பேசுவதையோ எழுதுவதையோ, கல்வி கற்கும் மாணவர்கள் விட்டொழிக்க வேண்டும். மாணவர் நல்ல உரை நடை எழுத முயல வேண்டும்.

8. நிறுத்தக்குறிப் பயிற்சிகள்

முற்றுப்புள்ளி, முக்காற்புள்ளி, அரைப்புள்ளி, காற்புள்ளி, வினுக்குறி, உணர்ச்சிக்குறி, மேற் கோட்குறிகள், கீழ்க்கோடிடல், இடைப்பிற வைப் புக்குறி முதலியவற்றைப்பற்றி விரிவாக முன் வகுப்பில் நீங்கள் படித்திருக்கிறீர்கள். அவற்றை நினைவிற்கொண்டு, பின்வரும் வாக்கியங்களுக்குத் தக்க நிறுத்தக்குறிகளை இடுக :

எங்கள் ஊர்க்காட்டில் கடுக்காய் வேங்கை கிச்சிலி மரங்கள் ஏராளமாய் இருக்கின்றன அந்த மரங்கள் வீடு கட்டப் பயன்படுகின்றன கதவுகள் செய்யப் பயன்படுகின்றன சன்னல்கள் செய்யப் பயன்படுகின்றன என்ன வியப்பு வேங்கை மரத்தைச் செதுக்கித் தண்ணீரில் ஊறவைத்தால் அதிலிருந்து பச்சை நிறப்பொருள் வர்ணம் பூசப் பயன்படக்கூடியது வெளிப்படுகிறது.

உண்மை பேசுதல் சிறந்த அறங்களுள் ஒன்று யாமெய்யாக் கண்டவற்றுளில்லை எனைத்தொன்றும் வாய்மையினல்ல பிற என்ருர் வள்ளுவர் எனவே நாம் ஒவ்வொருவரும் உண்மையே பேசி வாழ்வில் நற்பயன் அடைய முயல வேண்டும்

இங்குப் புதியனவாக இரண்டு குறியீடுகளைப் பற்றிப் படிப்போம் :

செருகற்குறி : (∧)

நாம் ஒரு செய்தியை எழுதுகிருேம். ஐந்தாறு வரிகள் எழுதிய பிறகு, முதல் வரியில் மறுந்துவிடப் பட்ட இரண்டொரு சொற்களைச் சேர்க்க விரும்பு கிருேம். வரி பிளந்து அவ்வரிக்கு மேலே அச் சொற்களை எழுதுகிருேம். அவ்வாறு வரி பிளந்து இருப்பதைக் காட்ட ∧ என்னும் குறியீட்டை அங்கு இடுதல் வேண்டும். விடுபட்டுப்போன சொற்களை அவ்வரியில் எங்கு எழுத வேண்டுமோ, அங்கு இக்குறியிட்டு, அவ்வரிக்கு மேல் எழுத வேண்டிய சொற்களை எழுதினுல், படிக்கும் போது அவற்றை உரிய இடத்தில் சேர்த்துப் படிப்பது எளிதாயிருக்கும்.

விடுபாட்டுக்குறி : (* * * *)—(............)

நாம் மேற்கோள் ஒன்றை எடுத்துக் காட்டும் போது நமக்கு வேண்டாத பகுதியை விட்டு விடுகின்ருேம். ஓர் அடியில் ஒரு பகுதியை எடுத்துக்கொள்கின்ருேம். அப்படிச் செய்யும் போது அப்படி விடுபட்ட சொற்கள் இருக்க வேண்டுமிடத்தில் * * * * இவ்வாறு உடுக்குறிகள் இட்டோ .... இவ்வாறு புள்ளிகள் இட்டோ காட்ட வேண்டும்.

9. மரபு

நம் முன்னோர்கள் எப்பொருளை எச் சொல்லால் எவ்வாறு வழங்கி வந்தார்களோ, அவ் வாறே நாமும் நம் பேச்சிலும் எழுத்திலும் வழங்கு தலே மரபாகும். (மரபு-சான்றோரின் சொல்வழக்கு முறை.)

மயில் அகவுகிறது.	காகம் கரைகிறது.
குதிரை கனைக்கிறது.	சிங்கம் முழங்குகின்றது.
யானை பிளிறுகிறது.	நாய் குரைக்கிறது.
நரி ஊளையிடுகிறது.	கழுதை கத்துகிறது.
பல்லி கொட்டுகிறது.	அணில் கீச்சிடுகிறது.

இப்படிச் சொல்வதே மரபு. இதற்கு மாறாகச் சொல்வது மரபு வழுவாகும்.

ஆட்டுக்குட்டி	மான்கன்று
யானைக்கன்று	கோழிக்குஞ்சு
குருவிக்குஞ்சு	நாய்க்குட்டி

என்று கூறுதலே மரபு.

ஆட்டுப்பிழுக்கை	யானை லத்தி
மாட்டுச்சாணம்	பறவை எச்சம்

என்பதே மரபு.

கம்பந்தட்டு	தினைத்தாள்
வாழைத்தோட்டம்	கரும்புத்தோட்டம்
மாந்தோப்பு	பூந்தோட்டம்

என்பதே மரபு.

பழம் தின்.	சோறு உண்.
பால் குடி.	காய்கறி நறுக்கு.

பாட்டுப்பாடு. வாழையிலை
மாவிலை தென்னை ஓலை
பனை ஓலை முருங்கைக்கீரை

என்பதே மரபு.

'அடிசில்' என்பது உண்பன, தின்பன, நக்குவன, பருகுவனவற்றிற்கெல்லாம் பொதுச் சொல்லாதலால், அதனை 'அயின்றார், மிசைந் தார்' என்னும் வினையால் முடித்தல் மரபு.

'அணி' என்பது கவிப்பன, கட்டுவன, இடுவன, தொடுவனவற்றிற்கெல்லாம் பொதுச் சொல்லாதலின், 'அணிந்தார்' என முடித்தல் மரபு.

'இயம்' என்பது கொட்டுவன, ஊதுவனவற் றிற்கெல்லாம் பொதுவாதலின், 'இயம்பினார், படுத்தார்' என முடித்தல் மரபு.

அல்லி வந்தாள் அவளுக்குச் சோறிடுக.

பசு வந்தது அதற்குப் புல்லிடுக.

என உயர்திணைப் பெயர், அஃறிணைப் பெயர்களுக் குப் பின் சுட்டுப் பெயர் வருதல் மரபு.

மரபுச் சொற்களை நன்கு நினைவிற்கொண்டு, வழூஉச்சொற்களை அகற்றி, மரபு வழாச்சொற் களையே பயன்படுத்திப் பேசவும் எழுதவும் வேண்டும்.

10. உவமைகள், பழமொழிகள், மரபுத் தொடர்கள் அமைத்தெழுதுதல்

எவற்றை எழுதினாலும் பொருட்செறிவும் நயமும் அமைய, கருத்தைத் தெளிவாகவும் கேட் பவர் நன்குணரும் வகையிலும் எழுதவேண்டும்.

இவ்வாறு எழுதுவதற்கு உவமைகளும், பழமொழி களும், மரபுத்தொடர்களும் பெரிதும் உதவும். இவற்றை அமைத்து வாக்கியங்கள் எழுதினுல் மொழிநடை அழகடையும். உவமைகள், பழமொழி கள், மரபத்தொடர் இவற்றை முன் வகுப்பில் படித்தீர்கள் அல்லவா ? அவற்றுள் சிலவற்றை இங்குப் பயன்படுத்தியுள்ள முறையைக் கண்டறிக:

உவமைத் தொடர்கள்

1. அம்மாஞர் என் வீட்டிற்கு வந்தது **அத்தி பூத்தது** போல இருக்கிறது.

2. தலைவர் பேசத் தொடங்கியதும் அக் கூட்டம் **அலை ஓய்ந்த கடல் போலக்** காட்சி யளித்தது.

3. பேனு வாங்கத் தந்தையார் பணம் தருவார் என்று எதிர் பார்த்து **இலவு காத்த கிளி** யானேன்.

4. தந்தையாரிடம் கடுமையான ஏச்சுப் பெற்ற பிறகு, அண்ணன் நையாண்டி செய்தது **எரிகின்ற தீயில் எண்ணெய் ஊற்றுவது** போன்றிருக்கிறது.

5. இராவணன் போர்க்களத்தில் தன் வீரர் களையும் போர்க்கருவிகளையும் இழந்து நின்ற சமயம் **கடன்பட்டார் நெஞ்சம் போலக்** கலங்கிய நெஞ்சத்துடன் இருந்தான்.

6. பெரும்பேராசிரியர் வேணுகோபாலப் பிள்ளை மாபேரறிஞர் எனினும், ஆடம்பரத்தை விரும்பாதவர் ; ஆதலால் **குடத்திலிட்ட விளக்குப் போல** விளங்குகிருர்.

7. என்மகன் ஆண்டிறுதித்தேர்வில் தேர்ச்சி பெருமையால், அவனுக்காகச் செய்த பணச் செலவு ஆற்றிற்கரைத்த புளி போலாகிவிட்டது.

8. விவேகானந்த அடிகள், மேனுடுகளிலும் தம் திறமையை விளக்கியபடியால், குன்றின் மேலிட்ட விளக்குப் போல விளங்குகிருர்.

9. அண்ணன் கூறிய வசைமொழி காதில் ஈயம் காய்ச்சி ஊற்றியது போல இருக்கிறது.

10. என் பாட்டனுர் தாமரை இலைத் தண்ணீர் போலக் குடும்பத்தில் ஒட்டியும் ஒட்டாமலும் காலங்கழித்து வருகிருர்.

11. ஆசிரியர் கூறிய அறிவுரைகள் என் நெஞ்சில் பசுமரத்தாணி போலப் பதிந்துவிட்டன.

12. என் தங்கை வயிற்று வலியால் படும் துன்பத்தைக் கண்டு என் நெஞ்சம் நெருப்பிலிட்ட மெழுகு போல இளகிவிட்டது.

13. 'மலரும் மணமும் போல நீங்கள் வாழவேண்டும்!' என்று என் தந்தையார் என் மைத்துனரையும் தங்கையையும் வாழ்த்தினுர்.

14. மதிவாணன் பரம்பரைச் செல்வனுய் இருந்ததுடன், கல்வியிலும் சிறந்தவனுய் விளங்குவது பொன்மலர் மணம் பெற்றது போல ஆகும்.

15. குலோத்துங்க சோழனுடைய படைகளைக் கண்டதும் கலிங்கநாட்டு மக்கள் இடியோசை கேட்ட நாகம் போல நடுங்கினுர்கள்.

16. மக்கள் பின் தொடர்ந்து வருவதைக் கண்டு ஓடுகின்ற திருடன் எதிரில் ஊர் காவலர்

வருவதைப் பார்த்து இருதலைக் கொள்ளி எறும்பு போலத் துடித்தான்.

17. என் நண்பன் எனக்கு எழுதிய கடிதத்தில் இலை மறைகாய் போலச் சில தவறுகள் இருந்தன.

18. பாரி வள்ளலை இழந்த அவன் மகளிர் நடுக்கடலில் கலம் கவிழ்ந்தாற்போல வருந்தினர்.

19. திருடனுக்கு ஆபத்தில் உதவி செய்வது பாம்புக்குப் பால் வார்ப்பது போலத் துன்பம் பயக்கும்.

20. தந்தையை இழந்த மைந்தன் மாலுமியில்லா மரக்கலம் போலத் துன்புற்றான்.

21. வீட்டுக் கணக்குப் போட்டுக்கொண்டு வாராத நம்பிக்கு, ஆசிரியர் வகுப்பிற்குள் நுழைந்ததும் சிம்ம சொப்பனம் கண்டது போல ஆயிற்று.

22. கமலம் பட்ட பாடு அவள் தந்தையின் மனத்தை அனலிலிட்ட மெழுகென உருக்கியது.

23. உடற்பயிற்சி இல்லாமல் வெறும்படிப்பில் மட்டும் கவனம் செலுத்தல் பொருந்துமா? சுவரை வைத்துக்கொண்டல்லவா சித்திரம் எழுத வேண்டும்?

24. தேர்வில் தோல்வியுற்ற என் நண்பன் உயர்ந்த பதவி அடைய வேண்டுமென்று விரும்புவது முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப் பட்டதைப் போல உள்ளது.

பழமொழித் தொடர்கள்

1. படிப்பறிவே இல்லாத என் தங்கையை விட, ஓரளவு படித்த என் தம்பி, ஊமைக்கு உளறு வாயன் மேல் என்னும் நிலையில் உள்ளான்.

2. '**காற்றுள்ள போதே தூற்றிக்கொள்**' என்னும் பழமொழிக்கேற்ப நாம் இளமையிலேயே கல்வி கற்க வேண்டும்.

3. '**புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது,**' என்னும் பழமொழிக்கேற்பச் சான்றோர்கள் வறுமையுற்றாலும் தீய செயலைச் செய்ய மாட்டார்கள்.

4. செல்வத்தையிழந்து வறுமையடைந்த வரதன் வீடு தீப்பற்றி எரிந்தது, '**பட்ட காலிலேயே படும்; கெட்ட குடியே கெடும்,**' என்னும் பழமொழியை நினைவுபடுத்துகிறது.

5. கந்தனுக்கு ஒரே பிள்ளையிருந்தும், '**ஒரு பிள்ளையும் பிள்ளையல்ல, ஒரு மரமும் தோப்பல்ல**' என்பது போல அவன் பாராட்டப்படாமலிருக்கிறான்.

6. போர் நிதிக்கு ஆளுக்கொரு காசு கொடுத்தாலும் '**பல துளி பெருவெள்ளம்**' என்பது போல அது பெருகிவிடும்.

7. '**கோழி மிதித்துக் குஞ்சு முடமாவதில்லை,**' என்பது போல, ஆசிரியர் கடிந்து எந்த மாணவனும் கெட்டுப் போனதில்லை.

8. தீயவனுக்கு எவ்வளவு அறிவுரை கூறினாலும், '**நாயின் வாலை நிமிர்த்த முடியாது**' என்பது போல அவன் திருந்தமாட்டான்.

9. குமரன், பூங்கோதைக்கு இரண்டு ரூபாய் கொடுத்துவிட்டுக் '**கெண்டையையிட்டு வராலை இழுப்பது**' போலச் சில நாள் கழித்து இருபது ரூபாய் வாங்கிவிட்டான்.

10. '**ஆடிப்பட்டம் தேடி விதை**' என்னும் பழமொழிக்கேற்ப மதிவாணன் ஆடி மாதத்தில் அவரை விதைகளை ஊன்றினான்.

11. அறிஞரான எங்கள் ஆசிரியர் எம். ஏ. பட்டத் தேர்வில் இவ்வாண்டு தவறிவிட்டது, '**ஆனைக்கும் அடி சறுக்கும்**,' என்பதை விளக்குகிறது.

12. நமக்குச் சிறிய உதவி செய்பவர்களையும் '**உப்பிட்டவரை உள்ளளவும் நினை**,' என்பது போல, என்றும் மறத்தல் கூடாது.

13. கையில் கிடைத்த நல்ல நூல்களையெல்லாம் நன்கு படித்தால், '**கண்டது கற்கப் பண்டிதனாவான்**' என்பது போல அறிவு மிகப் பெறலாம்.

14. படிப்பில் அக்கறையுள்ளவன், புத்தகமேயில்லாமற்போனாலும், '**வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்**' என்பது போன்று, கிழிந்த ஏடுகளையேனும் எவரிடமேனும் பெற்றுப் படித்து முன்னேறுவான்.

15. எவருக்கு எதைக் கொடுப்பதாக இருந்தாலும், '**ஆற்றில் போட்டாலும் அளந்து போடு**' என்பது போல, எண்ணிப் பார்த்தே கொடுக்க வேண்டும்.

16. '**ஆறிலும் சாவு நூறிலும் சாவு**' என்பதை அறியாத முத்து, படையில் சேரக் கூடாதென்று என்னைத் தடுக்கிறான்.

17. **'அவனன்றி ஓரணுவும் அசையாது,'** என்பது போல, இறைவன் அருளின்றி எதுவும் நடைபெருது.

18. அறம் புரிபவனுக்குத்தான், **'இறைக்க ஊறும் மணற்கேணி; ஈயப் பெருகும் பெருஞ் செல்வம்'** என்பது போலச் செல்வம் வளர்ந்து வரும்.

19. பிறர்க்குத் தீமை செய்ய நினைப்பவன், **'தன் வினை தன்னைச் சுடும்,'** என்பதைப் போலத் தானே அழிந்து போவான்.

20. நாம் மிக்க ஏழையாயிருந்தாலும், **'கூழானாலும் குளித்துக் குடி; கந்தையானாலும் கசக்கிக் கட்டு,'** என்பது போலச் சுத்தமாக இருக்க வேண்டும்.

21. வரதனுக்கு அவன் செய்த தவற்றை எடுத்துச் சொன்னால், **'உள்ளதைச் சொன்னால் உடம்பெரிச்சல்'** என்பது போலக் கோபம் வருகிறது.

22. இளமையிலேயே அடித்துத் திருத்தாமல், தீய பழக்கங்களில் முதிர்ந்துவிட்ட பிறகு திருத்த முயல்வது **'ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமா?'** என்பதற்கு ஒப்பாகும்.

23. கல்வியறிவில்லாத கந்தனுக்குத் திருவாசகம் நூல் கொடுத்தது **'நாயின் முன் முழுத் தேங்காயை உருட்டிவிட்டது'** போல ஆகும்.

24. மதிவாணன் எதனையும் கடவுளைத் துதித்த பின் செய்யத் தொடங்குவதால், **'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'** என்பது போல அவன் வெற்றி பெற்றே வருகிறான்.

மரபுத் தொடர்கள்

1. குப்பன் வகுப்பில் காலிடறி அடியற்ற மரம் போல விழுந்தான்.

2. ஆளுக்கேற்ற வேடம் போடுவதில் அங்கப்பன் திறமைசாலி.

3. ஆண்டவன் ஆக்கவும் அழிக்கவும் வல்லவன்.

4. ஆராவமுதன் ஆசை காட்டி மோசம் செய்துவிட்டான்.

5. எதைச் செய்தாலும் இடம் பொருள் ஏவல் அறிந்து செய்ய வேண்டும்.

6. நேரு இமயம் முதல் குமரி வரை புகழ் பெற்று விளங்கினர்.

7. பரிமளத்தை உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால் வரை அலங்கரித்திருந்தனர்.

8. மதிவாணன் தான் எடுத்த வேலையைத் தொடுத்து முடிக்க வேண்டி ஊணுறக்கம் இன்றிப் பாடு பட்டான்.

9. காந்தியார் நம் நாட்டிற்காக உடல் பொருள் ஆவியனைத்தையும் தியாகம் செய்தார்.

10. நான் பட்ட துன்பம் எண்ணத் தொலையாது, ஏட்டிலடங்காது.

11. கந்தன் எவர் என்ன சொன்னலும் அதைக் கேட்டு நடப்பதால் அவன் எடுப்பார் கைப்பிள்ளை என்பது தெரிகிறது.

12. தம்பி சற்றும் பொறுப்பில்லாமல் ஏனோதானோ என்றிருக்கிருன்.

13. எதிலும் குற்றம் நீக்கிக் குணம் கொள்ளும் பண்பை மாணவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

14. கைம்மாறு கருதாமல் உதவி செய்வதில் மாரிக்கு நிகர் மற்றென்றுமில்லை.

15. கண்ணன் காலத்திற்கேற்ற கோலம் கொள்வதில் வல்லவன்.

16. கயவன் ஒருவனது தீய கருத்தினை மற்றொரு கயவனே ஒத்துப்பாடுவான்.

17. கந்தன் கேட்பாரும் மேய்ப்பாருமின்றித் திரிகிறான்.

18. மாணவர்கள் தட்டுத்தடங்கலில்லாமல் சொற்பொழிவாற்றப் பழக வேண்டும்.

19. காந்தியார் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் வாழ்ந்தார்.

20. கந்தன் கண்ணால் கண்டதைக் கையாற் செய்வதில் வல்லவன்.

21. என் தந்தையார் என்னைக் கல்லூரியில் சேர்த்தது என் கனவை நனவாக்கிவிட்டது.

22. சுந்தரம் மனம் போன போக்கில் பணம் செலவிடுகிறான்.

23. செழியன் நெற்றி வேர்வை நிலத்தில் சொட்டப் பாடு பட்டுப் பணம் சேர்த்தான்.

24. சோழனுக்கும் சேரனுக்கும் இடையே பகைமை நீறுபூத்த நெருப்பென இருந்து வந்தது.

25. ஆதிரை வாயுவேகம் மனோவேகமாய்ப் பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்தாள்.

26. மலர்விழி பள்ளியிலிருந்து **காற்றினும் கடுகி** வந்து வீடு சேர்ந்தாள்.

27. கண்ணன் **பட்டி மாடு போலக் கட்டுக் காவலின்றிச்** சுற்றுகிறான்.

28. பொன்னிவளவன் பேசுவது **முன்னுக்குப் பின் முரணா**யிருக்கிறது.

11. உவமை—உருவக மாற்றம்

பவள வாய் - பவளம் போன்ற வாய்

இத்தொடரில் வாய், பவளத்தோடு ஒப்பிடப் பட்டுள்ளது. ஒப்பாகக் காட்டப்பட்ட பவளம் உவமையாகும். ஒப்பிடப்பட்ட வாய் பொருள் (உவமேயம்) ஆகும். இவ்வாறு ஒரு பொருளோடு மற்றொரு பொருளை ஒப்பிட்டுக் காட்டுவது 'உவமை' எனப்படும். உவமையில், உவமை முன்னும் உவமேயம் (பொருள்) பின்னுமாக அமைந்திருக்கும்.

வாய்ப்பவளம் - வாய் ஆகிய பவளம்

இத்தொடரில் வாயே பவளம் என்று கூறப் படுகிறது ; வாய் வேறு பவளம் வேறு என்ற வேறு பாடு இல்லாமல் கூறப்படுகிறது. இவ்வாறு உவமையையும் பொருளையும் வேறுபடுத்தாமல், இரண்டும் ஒன்றே என நினைக்குமாறு ஒற்றுமைப் படுத்திக் காட்டுவது **உருவகம்** எனப்படும். உருவகத்தில் பொருள் (உவமேயம்) முன்னும் உவமை (உவமானம்) பின்னும் அமைந் திருக்கும்.

பவள வாய் — உவமைத் தொகை

வாய்ப்பவளம் — உருவகம்

மதி முகம் — உவமை

முகமதி — உருவகம்

இவ்வாறு உவமையை உருவகமாக மாற்ற, பொருளை முன்னும் உவமையைப் பின்னுமாக முறை மாற்றிச் சொல்லுதல் வேண்டும்.

உவமை—உருவக வேறுபாடு :

உவமை : உவமானம், உவம உருபு, பொதுத் தன்மை, பொருள் (உவமேயம்) என்னும் முறையில் சொற்கள் அமைந்து நிற்கும் ; உயர்ந்த பொருளோடு ஒப்புமை கூறப்படும். போல, புரைய முதலிய உவம உருபுகள் பயின்று வரும்.

உருவகம் : பொருள், 'ஆகிய', 'என்னும்' என்பவை போன்ற உருவக உருபுகள் பயின்று வரும். உவமையும் பொருளும் சமமெனக் கூறப் படும்.

கீழே உவமைகள் உருவகங்களாகவும், உருவகங்கள் உவமைகளாகவும் மாற்றிக் காட்டப் பட்டுள்ளன :

தமிழ்த்தேன் பருக வருக — உருவகம்

தேன் போன்ற தமிழ் நம் உயிர் — உவமை

கண் போன்ற கல்வியைக் கற்க — உவமை

கல்விக்கண் அற்றவன் கண்ணிருந்தும் குருடன் — உருவகம்

12. வல்லெழுத்துக்கள் மிகுமிடங்களும் மிகா இடங்களும்

(முன்னிலும் விரிவாக)

1. வல்லெழுத்து மிகும் இடங்கள்

1. 'அ, இ' என்னும் சுட்டெழுத்தின் பின்னும், 'எ' என்னும் வினவெழுத்தின் பின்னும் வரும் வல்லெழுத்துக்கள் மிகும்.

(எ. கா.) அ + புலி = அப்புலி
இ + கிணறு = இக்கிணறு
எ + சிறுமி = எச்சிறுமி

2. அந்த, இந்த, எந்த என்னும் சுட்டுத் திரிபுகளின் பின்வரும் வல்லெழுத்துக்கள் மிகும்.

(எ. கா.) அந்த + குதிரை = அந்தக்குதிரை
இந்த + சிறுவன் = இந்தச்சிறுவன்
எந்த + பறவை = எந்தப்பறவை

3. அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் வரும் வல்லெழுத்துக்கள் மிகும்.

(எ. கா.)

அப்படி + கூறினன் = அப்படிக்கூறினன்
இப்படி + படித்தான் = இப்படிப்படித்தான்
எப்படி + சிரித்தான் = எப்படிச்சிரித்தான்

4. அங்கு, இங்கு, எங்கு என்னும் சொற்களின் பின் வரும் வல்லெழுத்துக்கள் மிகும்.

(எ. கா.) இங்கு + கொடு = இங்குக்கொடு
எங்கு + சென்ருய் = எங்குச்சென்ருய்
அங்கு + போ = அங்குப்போ

5. அவ்வகை, இவ்வகை, எவ்வகை என்னுஞ் சொற்களின் பின்வரும் வல்லெழுத்துக்கள் மிகும்.

(எ. கா.)

அவ்வகை + காடு = அவ்வகைக்காடு
இவ்வகை + தோட்டம் = இவ்வகைத்தோட்டம்
எவ்வகை + பேச்சு = எவ்வகைப்பேச்சு

6. இனி, தனி என்ற சொற்களின் பின்வரும் வல்லெழுத்துக்கள் மிகும்.

(எ. கா.) இனி + பார்க்கலாம் = இனிப்பார்க்கலாம்
தனி + கட்டில் = தனிக்கட்டில்

7. மற்று, மற்ற, மற்றை என்னுஞ்சொற்களின் பின் வரும் வல்லெழுத்துக்கள் மிகும்.

(எ. கா.) மற்று + சிறுவன் = மற்றுச்சிறுவன்
மற்ற + கதை = மற்றக்கதை
மற்றை + பணம் = மற்றைப்பணம்

8. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

(எ. கா.)

கந்தனை + கண்டேன் = கந்தனைக்கண்டேன்
பந்தை + தேடினன் = பந்தைத்தேடினன்
பாட்டை + பாடினன் = பாட்டைப் பாடினன்

9. இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

(எ. கா.) தயிர் + குடம் = தயிர்க்குடம்
சிறை + பறவை = சிறைப்பறவை

10. மூன்ரும் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

(எ. கா.) பருத்தி + துணி = பருத்தித்துணி
ஓலை + பாய் = ஓலைப்பாய்
மலர் + தார் = மலர்த்தார்

11. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

(எ. கா.)
பள்ளிக்கு + சென்றான் = பள்ளிக்குச்சென்றான்
வேலைக்கு + கூலி = வேலைக்குக்கூலி

12. நான்காம் வேற்றுமைத் தொகையில் அஃறிணைப் பெயர்களின் பின் வலி மிகும்.

(எ. கா.) கூலி + தொழில் = கூலித்தொழில்

13. ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

(எ. கா.) வாய் + சொல் = வாய்ச்சொல்
விழி + புனல் = விழிப்புனல்

14. ஆறும் வேற்றுமைத் தொகையில் அஃறிணைப் பெயர்களின் பின் வல்லினம் மிகும்.

(எ. கா.) குதிரை + தலை = குதிரைத்தலை
நாய் + கால் = நாய்க்கால்

15. ஏழாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.

(எ. கா.) குடி + பிறந்தார் = குடிப்பிறந்தார்

16. ஏழாம் வேற்றுமை விரியில் 'இடை' என்னும் உருபின் பின் வரும் வல்லினம் மிகும்.

(எ. கா.) நல்லாரிடை + புக்கு = நல்லாரிடைப்புக்கு

17. ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகையிலும் வல்லினம் மிகும்.

(எ. கா.) நீர்+பாம்பு = நீர்ப்பாம்பு
மலை+குகை = மலைக்குகை

18. வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன் வரும் வல்லினம் மிகும். வன்றொடர்க் குற்றிய லுகரத்தில் அல்வழி வேற்றுமை ஆகிய இரு வழியி லும் வல்லினம் பெரும்பாலும் மிகும் என அறிக.

(எ. கா.)
கொக்கு+பறந்தது = கொக்குப்பறந்தது
பாக்கு+தூள் = பாக்குத்தூள்
அச்சு+கூலி = அச்சுக்கூலி

19. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின் பின் வரும் வல்லினம் மிகும்.

(எ. கா.) காணு+காட்சி = காணுக்காட்சி
செய்யா+செயல் = செய்யாச்செயல்

20. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

(எ. கா.) சதுர+பலகை = சதுரப்பலகை
புது+குடம் = புதுக்குடம்
துவர்+காய் = துவர்க்காய்

21. இரு பெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

(எ. கா.) சாரை+பாம்பு = சாரைப்பாம்பு
கார்+பருவம் = கார்ப்பருவம்
மார்கழி+திங்கள் = மார்கழித் திங்கள்

22. குறிலைச் சார்ந்து வரும் ஆகாரம், முற்றிய லுகரம் முதலியவற்றின் முன் வரும் வல்லினம் மிகும்.

(எ. கா.) கணு+கண்டேன் = கணுக்கண்டேன்
இரா+பகல் = இராப்பகல்

நடு + தெரு = நடுத்தெரு
கணு + கால் = கணுக்கால்

23. உவமைத் தொகையில் வல்லினம் மிகும்.

(எ. கா.) மலர் + கண் = மலர்க்கண்
கார் + குழல் = கார்க்குழல்
பனை + கை = பனைக்கை

24. 'ஆய், போய்' என்னும் வினை எச்சச் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகும்.

(எ. கா.)

ஆய்—நன்ருய் + சொன்னுன் = நன்ருய்ச் சொன்னுன்

போய்—போய் + பார்த்தான் = போய்ப் பார்த்தான்

இகர ஈற்று வினையெச்சத்தின் பின் வரும் வல்லினம் மிகும்.

(எ. கா.)

அன்றி + சொல்லான் = அன்றிச் சொல்லான்
இன்றி + பேசான் = இன்றிப் பேசான்

அகர ஈற்று வினையெச்சத்தின் பின் வரும் வல்லினம் மிகும்.

(எ. கா.)

நன்ருக + பேசினுன் = நன்ருகப்பேசினுன்
என + கூறினுன் = எனக்கூறினுன்
தேட + சொல் = தேடச்சொல்
மெல்ல + பேசு = மெல்லப்பேசு

25. மென்தொடர்க் குற்றியலுகரத்தில் வேற்றுமைப் புணர்ச்சியில் பெரும்பாலும் வல்லினம் மிகும்.

(எ. கா.)

குரங்கு + கூட்டம் = குரங்குக் கூட்டம்
பஞ்சு + கொட்டை = பஞ்சுக் கொட்டை

26. ஓரெழுத்தொரு மொழியின் பின் அல்வழி, வேற்றுமை ஆகிய இரண்டிடங்களிலும் வல்லினம் பெரும்பாலும் மிகும்.

(எ. கா.) தீ + பற்றியது = தீப்பற்றியது
ஈ + சிறகு = ஈச்சிறகு
பூ + பறி = பூப்பறி
ஆ + பயன் = ஆப்பயன்
கை + பணம் = கைப்பணம்
மை + கூடு = மைக்கூடு

27. அரை, பாதி, எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்ச்சொற்களின் பின் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.

(எ. கா.) அரை + காசு = அரைக்காசு
பாதி + பாட்டு = பாதிப்பாட்டு
எட்டு + குரங்கு = எட்டுக்குரங்கு
பத்து + பொருள் = பத்துப்பொருள்

2. வல்லெழுத்து மிகா இடங்கள்

1. **அது, இது** என்னும் சுட்டுச் சொற்களின் பின் அல்வழி, வேற்றுமை என்னும் இரண்டிடங்களிலும் வல்லினம் மிகாது.

(எ. கா.)

அது + சிறிது = அது சிறிது.
இது + பெரிது = இது பெரிது.
அது + கொடுத்தாள் = அது கொடுத்தாள்.
இது + செய்தாள் = இது செய்தாள்.

2. எது, ஏது, யாது என்னும் வினைச் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகாது.

(எ. கா.) எது + போன்றது = எது போன்றது?

ஏது + காசு = ஏது காசு?

யாது + சொல் = யாது சொல்?

3. அவை, இவை என்னும் சொற்களின் முன் வல்லினம் மிகாது.

(எ. கா.) அவை + கண்டன = அவை கண்டன.

இவை + பார்த்தன = இவை பார்த்தன.

4. எவை, யாவை என்னும் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகாது.

எவை + பார்த்தன = எவை பார்த்தன?

யாவை + செய்தன = யாவை செய்தன?

5. அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு—என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது.

(எ. கா.)

அவ்வளவு + பேச்சு = அவ்வளவு பேச்சு

இவ்வளவு + பொருள் = இவ்வளவு பொருள்

எவ்வளவு + கடுகு = எவ்வளவு கடுகு

6. படி என்னும் இடைச்சொல் வினைச் சொல்லுடன் சேர்ந்து வருகையில் வல்லினம் மிகாது.

(எ. கா.)

நிற்கும்படி + கூறினான் = நிற்கும்படி கூறினான்

செய்யும்படி + சொன்னான் = செய்யும்படி சொன்னான்

7. பல, சில என்னும் சொற்களின் பின், அல்வழி வேற்றுமை இரு வழியிலும் வல்லினம் மிகாது.

(எ. கா.) சில + கற்றார் = சில கற்றார்
சில + தந்தான் = சில தந்தான்
பல + பொருள் = பல பொருள்
பல + பெற்றான் = பல பெற்றான்

8. வினாவை உணர்த்தும் ஆ, ஓ, ஏ, யா என்னும் வினாவெழுத்துக்களின் பின் வரும் வல்லினம் மிகாது.

(எ. கா.)
அவனா + போனான் = அவனா போனான்?
அவனோ + செய்தான் = அவனோ செய்தான்?
அவனே + செய்வன் = அவனே செய்வன்?
யா + கொண்டான் = யா கொண்டான்?

9. ஏகாரம் இடைச்சொல்லாய் வந்தால் வல்லினம் மிகாது.

அவனே + சொன்னான் = அவனே சொன்னான்

10. இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.

(எ. கா.)
பறவை + பிடித்தான் = பறவை பிடித்தான்
தண்ணீர் + குடித்தான் = தண்ணீர் குடித்தான்

11. மூன்றாம் வேற்றுமை உருபுகளாகிய ஒடு, ஓடு ஆகியவற்றின் பின் வல்லினம் மிகாது.

(எ. கா.)
முருகனொடு + போனான் = முருகனொடு போனான்
முருகனோடு + பேசினான் = முருகனோடு பேசினான்

12. நான்காம் வேற்றுமைத்தொகை உயர் திணைப் பெயர்கள் முன்வரும் வல்லினம் மிகாது.

(எ. கா.)

கண்ணகி + கணவன் = கண்ணகி கணவன்

சிறுவர் + தந்தை = சிறுவர் தந்தை

13. ஐந்தாம் வேற்றுமையின் சொல் உருபு களான இருந்து, நின்று என்பவைகளின் பின் வரும் வல்லினம் மிகாது.

(எ. கா.)

பள்ளியிலிருந்து + போனன்
= பள்ளியிலிருந்து போனன்

ஊரினின்று + சென்றன்
= ஊரினின்று சென்றன்

14. ஆரும் வேற்றுமை உருபுகளின் முன் வல்லினம் மிகாது.

(எ. கா.)

வேலனது + கை = வேலனது கை
முருகனுடைய + சாடிகள் = முருகனுடைய சாடிகள்
என + கைகள் = என கைகள்

15. பொதுப் பெயர், உயர்திணைப் பெயர் களுக்கு முன் வரும் வல்லினம் மிகாது.

(எ. கா.)

கண்ணகி + பெரியள் = கண்ணகி பெரியள்
வள்ளி + தலை = வள்ளி தலை
தாய் + பெரியள் = தாய் பெரியள்

16. அகர ஈற்றுப் பெயரெச்சங்களின் பின் வரும் வல்லினம் மிகாது.

(எ. கா.)

படித்த + பையன் = படித்த பையன்
செய்யாத + செயல் = செய்யாத செயல்
ஓடிய + பெண் = ஓடிய பெண்
படித்த + சட்டம் = படித்த சட்டம்

17. அஃறிணைப் பன்மை வினைமுற்றுக்களின் பின் வரும் வல்லினம் மிகாது.

(எ. கா.)

பேசின + கிளிகள் = பேசின கிளிகள்
வந்தன + பசுக்கள் = வந்தன பசுக்கள்

18. 'செய்பிய' என்னும் வாய்பாட்டு வினையெச்சத்தின் பின் வரும் வல்லினம் மிகாது.

(எ. கா.)

காணிய + சென்றான் = காணிய சென்றான்

19. 'அம்ம' என்னும் இடைச்சொல்லின் பின் வரும் வல்லினம் மிகாது.

அம்ம + சாத்தா = அம்ம சாத்தா.

20. ஆ, மா என்பவற்றின் பின்னும், கேண்மியா என்பதிலுள்ள மியா என்னும் முன்னிலை அசைச்சொல்லின் பின்னும், ஆகார வீற்று அஃறிணைப் பன்மை எதிர்மறை வினை முற்றின் பின்னும் வரும் வல்லினம் மிகாது.

(எ. கா.)

ஆ + பெரிது = ஆ பெரிது
மா + சிறிது = மா சிறிது
கேண்மியா + கந்தா = கேண்மியா கந்தா
உண்ணா + குதிரை = உண்ணா குதிரைகள்

(உண்ணா என்பது எதிர்மறைப் பலவின் பால் வினைமுற்று.)

21. எழுவாய்த் தொடர், விளித் தொடர், வினைத்தொகை, உம்மைத் தொகைகளில் வல்லினம் மிகாது.

(எ. கா.) புலி + பெரிது = புலி பெரிது.
அண்ணா + பார் = அண்ணா பார்.
இடி + சுவர் = இடிசுவர்
இரவு + பகல் = இரவு பகல்

22. வன்றொடர்க் குற்றியலுகரமும், மென்றொடர்க் குற்றியலுகரத்தில் வேற்றுமை வழியும் தவிர, மற்றக் குற்றியலுகரங்களின் பின்னும், மென்றொடர்க் குற்றியலுகரத்தில் அல்வழியிலும் வல்லினம் மிகாது.

(எ. கா.)

மாடு + பாய்ந்தது = மாடு பாய்ந்தது
எஃகு + கடிது = எஃகு கடிது
வரகு + சிறிது = வரகு சிறிது
வந்து + போனான் = வந்து போனான்
பெய்து + போயிற்று = பெய்து போயிற்று

23. சில முற்றியலுகரச் சொற்களின் பின் வரும் வல்லினம் மிகாது.

(எ. கா.)

உறவு + கழிந்தது = உறவு கழிந்தது
இரவு + போயிற்று = இரவு போயிற்று

24. எண்ணுப் பெயர்கள் சிலவற்றின் பின் வரும் வல்லினம் மிகாது.

(எ. கா.)

இரண்டு + பொருள் = இரண்டு பொருள்
இரு + குதிரை = இரு குதிரை

மூன்று + குரங்கு	=	மூன்று குரங்கு
நான்கு + பைகள்	=	நான்கு பைகள்
ஐந்து + பழம்	=	ஐந்து பழம்
ஆறு + பானை	=	ஆறு பானை
ஏழு + குளம்	=	ஏழு குளம்
ஒன்பது + சக்கரம்	=	ஒன்பது சக்கரம்

13. இடம் விட்டு எழுதுதலும் சேர்த்து எழுதுதலும்

கீழே கூறியுள்ளவைகளை ஒவ்வொருவரும் கவனமாய்ப் படித்து இடம் விட்டெழுதப் பழகிக் கொள்ள வேண்டும்.

தாளின் தலைப்புறத்திலும் அடிப்புறத்திலும் இடப்புறத்திலும் குறைந்தது ஓர் அங்குலமாவது இடம் விட்டு எழுதவேண்டும்.

பத்தி தொடங்கும் போது மற்ற வரிகளைக் காட்டிலும் சிறிது தள்ளிப் பத்தியைத் தொடங்க வேண்டும்.

தலைப்பு எழுதுவதாய் இருந்தால் சிறிது தடித்த எழுத்துக்களில் மையத்தில் எழுத வேண்டும்.

தலைப்புக்கும் முதல் வரிக்கும் இடையில் மற்ற வரிகளுக்கிடையில் உள்ள இடைவெளியைக்காட்டி லும் இரு மடங்கு இடைவெளி இருப்பது நல்லது.

வரிகளுக்கிடையில் இடை வெளி இருக்க வேண்டும். ஒரு தாளின் ஒரு பக்கத்தில் இருபத் தைந்து அல்லது முப்பது வரிகளுக்கு மேற் படாமல் எழுதலாம்.

ஒரு பத்திக்கும் அடுத்த பத்திக்கும் இடையில் வரிகளுக்கிடையிலுள்ள இடைவெளியைக் காட்டிலும் வெளி அதிகமாக இருக்க வேண்டும்.

ஒரு வரியைத் தொடங்கி எழுதிச் செல்கையில் காகிதத்தின் இறுதி வரை எழுதாமல் தாளின் வலப் புறத்தில் அரை சென்டி மீட்டர் இடமாவது விட்டு வைக்கவேண்டும். வலப்புறத்தின் ஓரத்தில் ஒரே சமமான இடம் வரும்படி சொற்களைக் கவனத்துடன் எழுதுவது சிறப்பாகும்.

ஒரு வாக்கியம் முடிந்து முற்றுப்புள்ளி, வினைக் குறி அல்லது வியப்புக்குறி இட்டவுடன் போதுமான இடைவெளி விட்டு அடுத்த வாக்கியத்தைத் தொடங்க வேண்டும்.

செய்யுள்களை எழுதும்போது ஒவ்வோர் அடியிலும் இத்தனைச் சீர்கள் வந்துள்ளன என்று தெளிவாகத் தெரியும்படி ஒரு சீருக்கும், அடுத்த சீருக்கும் இடையில் போதுமான இடம் விட்டு எழுத வேண்டும். நேரிசை வெண்பாவாயின், உரிய இடத்தில் தனிச்சொல்லுக்கிடையில் சிறு கோடு இடுதல் வேண்டும்.

ஒரு செய்யுள் முடிந்து அடுத்த செய்யுளைத் தொடங்குமுன் இடையில் பத்திகளுக்கிடையில் விடுவதுபோலப் போதுமான இடம் விடவேண்டும்.

இவ்வாறு போதுமான இடம் விட்டு எழுதுவதால் படிப்பவர் எளிதாகப் படித்தலும், பொருளைத் தெளிவாக அறிந்துகொள்ளுதலும் கூடும். இவ்வாறன்றிச் சேர்த்து எழுதுவதால் படிப்பவர், படிக்கத் திண்டாடுவதுடன் பொருளையும் சரியான முறையில் அறிந்துகொள்ள இயலாது.

எனவே, எழுத வேண்டுவனவற்றைத் தெளிவாகவும், போதுமான இடம் விட்டும், உரிய இடங்களில் இடவேண்டிய நிறுத்தக்குறிகளை இட்டும் எழுத வேண்டும்.

14. சொற்களை இடம் விட்டு எழுதுதலும், சேர்த்து எழுதுதலும்

வரிகள், பத்திகள் இவைகளுக்கு இடையில் போதுமான இடம் விட்டு எழுதுவதைப் போலவே சொற்களுக்கிடையிலும் போதுமான இடம் விட்டு எழுதவேண்டும். ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு பொருளைக் குறிப்பதனுல் சொற்கள் வெவ்வேருகத் தெரியும்படி ஒரு சொல்லுக்கும் அடுத்த சொல்லுக்கும் இடையில் இடம் விட்டு எழுத வேண்டும். இவ்வாறு இடம் விட்டு எழுதாமல் சேர்த்து எழுதுவதனுல் பொருளை அறிய இயலாமல் படிப்பவர் குழப்பமடைவர்.

மேலும் தொடர் மொழிகளை இடத்துக்கேற்றவாறு பிரித்தும் எழுத வேண்டும். (1) அதுவே சரி என்ற தொடர் மொழி 'அது வேசரி' என்றும் 'அதுவே சரி' என்றும் 'இரு பொருள் தருவதால்' 'அது கோவேறு கழுதை' என்றும் 'அதுதான் சரியானது' என்றும் பொருள்படும். எனவே பொருளுக்கு ஏற்றவாறு பிரித்து எழுதுதல் வேண்டும்.

வாரும் இரும் படியும்—வாருங்கள், அமருங்கள், படியுங்கள் எனப் பொருள் தரும். இத்தொடரை 'வாரும் இரும்படியும்' என்று எழுதினுல், 'வாருங்

கள், இரும்பை அடித்து நீட்டுங்கள்' என்று பொருள் தருவதைக் காண்க.

காமரம்பயில்—இதனைக் 'காமரம் பயில்' என இடம் விட்டெழுதினால் 'வண்டுகள் பழகுகின்ற' எனப் பொருள் தருகிறது. இதனைக் 'காமர் அம்பு அயில்' என இடம் விட்டெழுதினால், 'அழகு பொருந்திய அம்பும் வேலும்' எனப்பொருள் தருவதை அறியலாம்.

1. எனவே, ஒவ்வொரு சொல்லும் பொருளுடையது. ஆதலால், ஒவ்வொரு சொல்லையும் தனித்தனியாகவும், ஒரு சொல்லுக்கும் அடுத்து வரும் சொல்லுக்கும் இடையில் போதுமான இடம் விட்டும் எழுத வேண்டும். சங்கிலி கோத்தாற் போலச் சொற்களைத் தொடர்ச்சியாக எழுதக் கூடாது.

2. இருபொருள் பயக்கும் தொடர்மொழிகளை இடத்துக்கேற்றவாறு பொருள் விளங்கும்படி பிரித்து எழுத வேண்டும்.

3. வரி முடியும் தறுவாயில் ஒரு சொல் முழுவதும் எழுதுவதற்குப் போதுமான இடமில்லாவிடில் சொல்லை மனம்போலப் பிரித்து எழுதுதல் கூடாது. எடுத்துக்காட்டாக எழுதுகின்றேன் என்ற சொல்லை 'எ + ழுதுகின்றேன்' எனப்பிரித்து 'எ' என்பதை வரியின் வலக்கோடியிலும், 'ழுதுகின்றேன்' என்பதை அடுத்த வரியின் முதலிலும் எழுதுவதோ அல்லது 'எழுதுகின்' என வரிக் கோடியில் எழுதிவிட்டு, 'றேன்' என அடுத்த வரியின் முதலிலும் எழுதுவதோ கூடாது. இட

மில்லையாயின் முழுச்சொல்லையும் அடுத்த வரியிலே எழுதலாம்.

4. வரியின் தொடக்கத்தில் மெய்யெழுத்தோ, தனி எழுத்தோ வருமாறு சொற்களைப் பிரித்தெழுதுதல் அறவே கூடாது.

5. மேலும், காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, மேற்கோட்குறி, கோடு ஆகியவைகளையும், வாக்கியத்தின் இறுதியில் பொருளுக்கேற்றவாறு, முற்றுப்புள்ளி, வினக்குறி, வியப்புக்குறி ஆகியவைகளையும் ஏற்ற இடங்களில் இட்டே எழுதுதல் வேண்டும்.

மூன்றும் பகுதி

கட்டுரைப் பயிற்சி

எழுதும் வகை:

நம் உள்ளத்தில் எழும் எண்ணங்களை நாம் பேச்சிலும் எழுத்திலும் வெளியிடுகையில், அவை, மற்றவர்க்கு நன்கு விளங்கும் வகையில் முறையாகவும் தெளிவாகவும் இனிமையாகவும் இருத்தல் வேண்டும். எனவே, மாணுக்கர்கள் பேச்சு, எழுத்து ஆகிய இவ்விரு வகையாற்றலையும் நன்கு வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற் காகவே கட்டுரை வரையும் பயிற்சி அளிக்கப் படுகிறது.

மாணுக்கர்கள் பேசுவதிலும், கட்டுரை, கதை முதலியன வரைவதிலும் திறமை பெற வேண்டு மாளுல், பெரும்புலவர்களால் எழுதப்பட்ட பல வகையான உரைநடை நூல்களையும், கருத்து வளம் செறிந்த கட்டுரைகளையும் படித்தல் வேண்டும். அவற்றில் கையாளப்பட்டுள்ள நடைத் திறம், கற்பனை நயம், பொருட்செறிவு, கருத்தாழம், மொழிவளம் முதலியவற்றை ஆழ்ந்து கற்றறிந்து மனத்தில் நன்கு பதிய வைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வண்ணம் படித்துவிட்டால் மட்டும், படித்தவற்றை மனத்தில் நன்கு பதியவைத்துக் கொண்டால் மட்டும், நல்ல முறையில் கட்டுரை எழுதும் ஆற்றல் உண்டாகிவிடுமா? உண்டாகாது. அவ்வாற்றல் பெற வேண்டுமாளுல், பல்வேறு

வகையான தலைப்புக்களில், பல வேறு வகைச் செய்திகள் பற்றிய கட்டுரைகளை எழுதிப்பழகுதல் வேண்டும்.

இங்ஙனம் எழுதத் தொடங்குகையில், வாக்கியப்பிழை, கருத்துப்பிழை, கருத்துத் தொடர்பில்லாமை, நல்ல உரைநடை அமையாமை முதலிய குறைபாடுகள் ஏற்படலாம். எனினும், மனந் தளராமல் விடாமுயற்சியுடன் எழுதியெழுதிப் பழகினால், படிப்பவர் மனத்தைக் கவரும்படி செம்மையாக எழுதும் ஆற்றல் உண்டாகிவிடும்.

கட்டுரை எழுதத் தொடங்குமுன்னர்த் தலைப்புக்கு ஏற்றவாறு நன்கு சிந்தித்துக் குறிப்புக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு, அக்குறிப்புக்களைத் துணையாகக்கொண்டு விரிவாகவும், தொடர் பறுமலும், கருத்துச் சிதையாமலும் எழுத வேண்டும்.

எழுதத் தொடங்குமுன், மனத்தில் சிந்தித்தவற்றை வாயால் சொல்லியும் பழக வேண்டும். இப்பழக்கம் நல்ல வாக்கியங்கள் அமைப்பதற்கு உதவியாக இருக்கும். இதனால், பிழையில்லாமல் உச்சரிக்கலாம்; சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளலாம்; மனநடுக்கம் நீங்கி நன்கு பேசும் திறமை பெறலாம்.

நினைவில் பதியவைக்க வேண்டுவன :

1. எழுதத் தொடங்கும் ஒவ்வொரு கட்டுரையும் தலைப்பு, முன்னுரை, துணைத்தலைப்புக்கள், முடிவுரை என்னும் பிரிவுகளுடன் அமைக்கப்பட வேண்டும்.

2. தலைப்புக்கு ஏற்ற வகையில், முன்னுரையைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் அமைக்க வேண்டும். கட்டுரையின் கருத்தை அறிமுகப் படுத்தும் வகையில் முன்னுரை இருத்தல் வேண்டும்.

3. கட்டுரைப் பொருள், பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுத் தேவைப்படும் இடங்களில் துணைத் தலைப்புக்கள் கொடுத்தல் வேண்டும்.

4. பத்தி பிரித்து எழுதுகையில், ஒவ்வொரு பத்தியிலும், முதல் வரியைச் சிறிது இடம் விட்டு எழுதத் தொடங்க வேண்டும். அதாவது, மற்ற வரிகளைவிடப் பத்தியின் இந்த முதல் வரி குறைந்த அளவு அரை சென்டி மீட்டராவது உள்ளடங்கி யிருத்தல் வேண்டும். பத்தித் தொடக்கம் தெளி வாகத் தெரிதல் வேண்டும்.

5. எந்தத் தலைப்பில் கட்டுரை எழுதத் தொடங்குகிறேமோ, அந்தத் தலைப்புக்குரிய செய்திகளை விட்டுப் புறம் போகாதிருத்தல் வேண்டும். ஒரு தலைப்புக்குரிய செய்தியைப்பற்றி எழுதிக் கொண்டே வருகையில், இடையில் வேறு ஒன்றைப் புகுத்தி அதனைச் சிறப்பாக விளக்கி வரைந்து, தொடங்கிய செய்தியை மறந்து, தலைப்பு ஒன்றும், கட்டுரை வேறுமாக எழுதிவிடக்கூடாது.

6. தலைப்புக்கு ஏற்ற மேற்கோள்கள், நல்ல சொற்றொடர்கள், மரபுத் தொடர்கள், பழமொழிகள் முதலியவற்றை இடத்துக்கேற்றவாறு எடுத் தாளுதல் வேண்டும்.

7. ஆனல், ஆகையால், ஆதலால், என்றும், எனவே முதலிய சொற்களை மீண்டும்

மீண்டும் பயின்று வருமாறு பயன்படுத்தக் கூடாது.

8. கொச்சை மொழிகளோ, பிற மொழிச் சொற்களோ, இழிவழக்குத் தொடர்களோ கலவாத நல்ல தெளிவான இனிய செந்தமிழ் நடை பயிலுமாறு எழுதப் பழக வேண்டும்.

9. சொற்களுக்கிடையில் இடம் விட்டு எழுத வேண்டும். சொற்களைச் சிதைத்தல் கூடாது. வரி முடிவில் ஒழுங்கான முறையில் சொற்களைப் பிரித்து எழுத வேண்டும்.

10. வரிகளின் தொடக்கத்தில் ஒற்றெழுத்தோ, தனி எழுத்தோ, மெய் எழுத்தோ வாராதபடி கவனித்துக்கொள்ளுதல் வேண்டும்.

11. முற்றுப்புள்ளி முதலிய நிறுத்தக்குறிகளை இடமறிந்து ஆங்காங்கே தக்கவாறு இடுதல் வேண்டும். நிறுத்தக்குறிகளை இட்ட பிறகு, அடுத்து வரும் சொல்லை மற்றவற்றிலும் சற்று அதிக இடம் விட்டுத் தொடங்க வேண்டும்.

12. கூடியவரை இலக்கணப்பிழை, வாக்கியப் பிழை, எழுத்துப் பிழை, சந்திப்பிழை முதலியன ஏற்படாமல், குறித்த எல்லையைக் கடவாமல், எழுதப் பழகுதல் இன்றியமையாததாகும்.

1. செய்தித் தாள்களுக்குச் செய்திப் பத்திகள் எழுதி அனுப்புதல்

உங்கள் ஊரிலோ பள்ளியிலோ நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகள், வழியில் காணும் வியப்பு நிகழ்ச்சிகள், விபத்துக்கள் முதலியன குறித்துச் செய்தித் தாளுக்குச் செய்திகள் எழுதி அனுப்பலாம்.

செய்தித்தாள்களைப் படிப்பவர்கள் நிலையை முதலில் மனத்திற்கொண்டே செய்திகளை எழுதத் தொடங்க வேண்டும். ஓரளவு எழுதப்படிக்கத் தெரிந்தவர்களும் செய்தித்தாள்களை வாங்கிப் படிக்கிறார்களாகலின், அவர்களும் விளங்கிக்கொள்ளும் வகையில் செய்திகளை எளிய நடையில், சுருக்கமாகப் பத்திகளாகப் பிரித்து எழுத வேண்டும். விரைந்து செய்தித்தாள்களைப் படிப்பவர்களும் எளிதில் தெளிவாக உணர்ந்துகொள்ளும் வகையில் செய்திகளை எழுத வேண்டும்.

நீங்கள் எழுதும் செய்தி தனித்தாளில் இருத்தல் வேண்டும். அதனைச் செய்தித்தாளில் வெளியிடுமாறு செய்தித்தாளாசிரியரை வேண்டி ஒரு தனிக்கடிதம் எழுத வேண்டும். எடுத்துக்காட்டாக இங்குத் தரப்பட்டிருப்பனவற்றைப் பாருங்கள் :

தமிழியல் மன்றம் 244, அங்கப்ப நாயக்கன் தெரு,
சென்னை–1.
29–10–67

ஆசிரியர்,
'கதிரவன்',
19, பெருஞ்சாலை, சென்னை–1.

அன்புடையீர்,

வணக்கம். அருள் கூர்ந்து இதனுடன் வரும் செய்தியை உங்கள் செய்தித்தாளில் வெளியிட்டு உதவுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

இங்ஙனம் :
உங்களன்புள்ள
ப. வே. இலக்குமிபதி
செயலாளர்

(வெளியிடவேண்டும் செய்தி)

மகாவித்துவான், சிந்தாமணிச் செல்வர்
மே. வீ. வேணுகோபாலப் பிள்ளையவர்களின் பிறந்தநாள் விழாவும் பட்டமளிப்பு விழாவும்

சென்னை, அக்டோபர், 29

சென்னைத் தமிழியல் மன்றத்தின் ஆதரவில், சிந்தாமணிச் செல்வர், மகாவித்துவான், மே.வீ. வேணு கோபாலப் பிள்ளை அவர்களின் 72ஆம் பிறந்த நாள் விழா, தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் அவர்கள் தலைமையில், பாலர் அரங்கத்தில் இன்று மாலை 7 மணிக்கு நடைபெற்றது. அவ்வமயம், மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்களுக்கு, விழாக் கூட்டத் தலைவர், பட்டாடை அணிவித்துப் பாராட்டுரை வழங்கினர். அடுத்துத் தமிழகத் தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் மு. இரா. பெருமாள் அவர்கள், மகாவித்து வான் அவர்கள் எழுதிய 'தமிழ்—அன்றும் இன்றும்' என்னும் நூலை வெளியிட்டு, 1000 படிகளை அவர்களுக்கு மன்றத்தின் அன்பளிப்பாக வழங்கிப் பாராட்டிப் பேசினர்.

பின்னர்த் தமிழக முதலமைச்சர் மாண்பு மிகு சி. என். அண்ணாத்துரை அவர்கள், புலவர் குழு உறுப் பினர்கள், தமிழகத் தமிழ்ப் பேரறிஞர் ஆகிய பலரால் தேர்ந்தெடுக்கப்பட்ட 'செந்தமிழ்க் களஞ்சியம்' என் னும் பட்டத்தைச் சூட்டி, அதற்குரிய பதக்கத்தைப் பிள்ளையவர்களுக்கு அணிவித்துச் சிறப்புரையாற்றினர் கள். அடுத்து, மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், பேராசிரியர் ந. சஞ்சீவி, பச்சையப்பன் கல்லூரித் துணைப்பேராசிரியர் ந. ஆறுமுகம், திருவாட்டி இராசேசுவரி நடராசன்

ஆகியோர் மகாவித்துவான் அவர்களின் குண நலன்களைப் பாராட்டிப் பேசினர்.

விழாத் தலைவர் மகாவித்துவான் மே. வீ. வேணு கோபாலப் பிள்ளை அவர்கள் நன்றியறிதலைத் தெரிவித்த பிறகு, புலவர் கா. சச்சிதானந்தம் நன்றி கூற விழா இனிது முடிவு பெற்றது.

2. வருணனைக் கட்டுரை

ஒரு பொருளையோ காட்சியையோ பெருமைப் படுத்திச் சிறப்பித்து எழுதுதல் வருணனை எனப்படும். பின்வரும் தலைப்புக்களில் இரண்டு பக்கங்களின் மிகாமல் கட்டுரை எழுதிப் பழகுக:

1. கதிரவன் தோற்றம்
2. கதிரவன் மறைவுக் காட்சி
3. முழு நிலவின் எழில்
4. சென்னைக் கடற்கரை
5. திருச்சி மலைக்கோட்டை
6. பொங்கல் திருநாள்
7. குமரி முனைக் காட்சி
8. சாத்தனூர் அணை
9. புகைவண்டிப் பயணம்
10. ஒரு கிராமக் காட்சி

3. விளக்கக் கட்டுரை

ஒரு பொருளைத் தகுந்த எடுத்துக்காட்டுக்களுடன் தெளிவாக விளக்கி எழுதுதல், ஒன்றன் பயனை விளக்கி வரைதல் முதலியவை விளக்கக் கட்டுரைகள் எனப்படும். பின் வரும் தலைப்புக்களில் கட்டுரைகள் வரையலாம்.

1. திரு. வி. க. அவர்களின் தமிழ்த்தொண்டு
2. அன்பும் அருளும்
3. புத்தரும் கொல்லாமை நெறியும்
4. வ. உ. சி. அவர்களின் நாட்டுப்பற்று
5. காந்தியடிகளும் தீண்டாமையும்
6. தமிழ் நாட்டின் சிறந்த கலைகள்
7. தமிழ் நாட்டின் சிற்பச் சிறப்பு

8. பண்டைக்காலத் தொழில்கள்
9. பாய் பின்னுதல்
10. குடும்பப் பண்பாடு
11. நம் நாட்டின் பண்டை நாகரிகம்

4. கருதியல் கட்டுரை

ஒரு பொருளைக் குறித்து உள்ளத்தில் எழும் எண்ணங்களைத் தொகுத்துக் கூறுதல் கருதியல் கட்டுரை எனப்படும். இத்தலைப்பில் நுண்பொருள்களை விளக்கிக் கூறும் கட்டுரைகள் எழுதலாம். பின் வரும் தலைப்புக்களில் கட்டுரைகள் எழுதிப் பழகுக.

1. தமிழ் மொழியின் சிறப்பு, நாட்டுப்பற்று, வீரம், விடாமுயற்சி, நட்பு, உண்மை, நாகரிகம், ஒற்றுமை, சிக்கனம் குறித்துத் தனித்தனி கட்டுரைகள்.

2. குடும்ப வாழ்வு, ஒழுக்கமுடைமை, விருந்தோம்பல், ஊக்கம், உழைப்பின் பெருமை, கற்ற வழி நிற்றல், செல்வர், வறுமை, கல்வியின் இன்றியமையாமை குறித்துத் தனித்தனி கட்டுரைகள்.

3. உடல் நலம், உள்ளுணர்வு, சமயநெறி, கடவுட் பற்று என்பவை குறித்துத் தனித்தனி கட்டுரைகள்.

4. காலந்தவறாமை, பொதுநலத் தொண்டு, வைகறைத் துயிலெழுதல், ஓய்வு நாள்களைப் பயன் படுத்தும் வகை, ஈகை முதலியன பற்றித் தனித்தனி கட்டுரைகள்.

5. எடுத்தியம்பும் கட்டுரை

ஒரு பொருளின் சிறப்பையோ, ஒரு நிகழ்ச்சியையோ, கற்பனை கலவாமல், உள்ளதை உள்ளபடி எடுத்துக் கூறுவதே எடுத்தியம்பும் கட்டுரையாகும். பின்வரும் தலைப்புக்களில் கட்டுரை எழுதிப் பழகுக:

1. ஒரு திருவிழா, 2. உன் வீட்டில் நடைபெற்ற ஒரு திருமணம், 3. வெள்ளத்தால் ஏற்பட்ட தொல்லை,

4. தீ விபத்து, 5. நிலநடுக்கம், 6. இன்பச் செலவு, 7. மழையால் ஏற்பட்ட சேதம், 8. பொருட்காட்சியின் சிறப்பு, 9. நீண்ட பயணத்தின் பலன்.

6. வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரை

சிறந்த முறையில் பிறர்க்குப் பயன்படுமாறு வாழ்ந்த பெரியார்களுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளை எடுத்தெழுதுதல் வாழ்க்கைக் குறிப்புக் கட்டுரையாகும். பின் வரும் தலைப்புக்களில் கட்டுரைகள் எழுதிப் பழகுக:

1. அண்ணல் காந்தியின் அறவாழ்க்கை
2. பாரதிதாசனின் இளமைப்பருவம்
3. அசோகரின் உயர்வாழ்க்கை
4. அதியமான் நெடுமான் அஞ்சியும் ஔவையாரும்
5. பாபரின் பெருமையை விளக்கும் வாழ்க்கை நிகழ்ச்சி
6. அக்பர் இந்துக்களின் மனத்தைக் கவர்ந்த முறை
7. திரு. வி. க. அவர்களின் ஆசிரியப்பற்று
8. வ. உ. சி. அவர்களும் தீண்டாமையும்
9. பாரதியாரின் வாழ்க்கை

7. நடைமுறைச் சமுதாயவியற்கட்டுரை

இன்றைய சமுதாயம் குறைகள் பல நிறைந்ததாகும். மக்கள் வாழ்வில் ஏற்றத்தாழ்வுகள், வறுமை, அறியாமை முதலியன நிறைந்து கிடக்கின்றன. மக்கள் ஒருவருக்கொருவர் உதவுதல், சேர்ந்து தொழில் நடத்துதல், அறிவுரை கூறுதல் ஆகியவை பற்றிக் கட்டுரைகள் வரைவதே சமுதாய இயல் கட்டுரைகளாகும். பின் வரும் தலைப்புக்களில் கட்டுரைகள் எழுதிப் பழகுக:

1. சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை
2. கூட்டு முறையில் வாணிகம்

3. கூட்டு முறையில் தொழில்
4. சாதி வேறுபாடுகளால் வரும் தொல்லை
5. பெண்கள் முன்னேற்றம்
6. சமத்துவத்தின் இன்றியமையாமை
7. சமுதாயத் தொண்டில் மாணவர் பங்கு
8. சமுதாயம் சீர்படும் வழிகள்
9. சமூக நலனுக்காக அரசாங்கம் செய்து வரும் பணிகள்
10. பிறர்க்குரியாளராக வாழ்தலின் இன்றியமை யாமை
11. வாழு, வாழவிடு

8. நடைமுறைப் பொருளியற் கட்டுரை

மக்களின் நல்வாழ்வுக்குப் பொருள் இன்றியமையாத தாகும். மக்கள் பொருளாதாரத் துறையில் வாழ்க்கை யில் முன்னேற்றம் காண வேண்டும். எனவே, பொருள் திரட்டும் வழிகள், அவற்றைப் பெருக்கும் முறைகள், கூட்டுறவு முறைகள், கூட்டு வாணிகம், சிறு கைத் தொழில்கள் முதலியன பற்றி வரைபவை பொருளியற் கட்டுரைகளாகும். பின் வரும் தலைப்புக்களில் கட்டு ரைகள் எழுதிப் பழகுக:

1. உழவுத் துறையில் அரசாங்கம் செய்யும் முயற்சிகள்
2. கூட்டுறவுப் பண்ணைகள்
3. கிராமக் கூட்டுறவு இயக்கங்கள்
4. கிராம முன்னேற்றம்
5. குடிசைத்தொழில் முன்னேற்றம்
6. அணைக்கட்டுத் திட்டங்கள்
7. ஓய்வு நேரத்திற்குரிய வேலைகள்
8. சிறுகைத்தொழில்கள்
9. வாணிக வளர்ச்சி
10. கோழிப்பண்ணை

11. பாங்குகள் செய்யும் உதவி
12. மக்கள் வாழ்க்கை நிலை உயர அரசாங்கம் செய்யும் உதவி
13. சிறு சேமிப்பின் இன்றியமையாமை

9. கல்வியியற்கட்டுரை

நாம் பயிலும் கல்வி பொதுக் கல்வி, தொழிற்கல்வி, ஆண் கல்வி, பெண் கல்வி, இயந்திரக்கல்வி, மருத்துவக் கல்வி, சமயக்கல்வி எனப் பல வகைப்படும். கல்வி முன்னேற்றம் பற்றி வரையும் கட்டுரைகள் கல்வியியற் கட்டுரைகளாகும். பின்வரும் தலைப்பில் கட்டுரை எழுதிப் பழகுங்கள் :

1. தொடக்கநிலைக் கல்வியின் நிலை
2. இடைநிலைக் கல்வியின் தரம்
3. உயர்நிலைக் கல்வியும் மாணவரும்
4. முதியோர் கல்வி
5. கல்லூரிக் கல்வியின் நிலை
6. ஆண் - பெண் சேர்ந்து கற்பது நல்லதா, கெட்டதா ?
7. விஞ்ஞானக் கல்வியின் இன்றியமையாமை
8. தொழிற்கல்வியின் தேவை
9. உயர்நிலைப்பள்ளிகளில் கற்பிக்கப்படும் தொழிற் கல்வி
10. கல்வியும் ஒழுக்கமும்
11. திரைப்படக்காட்சியும் கல்வியும்
12. வானொலி மூலம் கல்வி
13. வேளாண்மைக் கல்வி
14. மருத்துவக் கல்வி நிலை
15. இன்றைய கல்வி முறையில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள்
16. இளமையிற்கற்பதன் பயன்கள்

10. பிறர் சொற்பொழிவுகளைப்பற்றிக் குறிப்பெடுத்தல்

மாநாடுகளிலோ, பொதுக்கூட்டங்களிலோ, விழாக்களிலோ பேரறிஞர் அரிய சொற்பொழிவுகள் செய்கின்றனர். அவர்கள் பேசும்போது, ஆழ்ந்த அனுபவம், சிறந்த அறிவு, நிறைந்த ஆராய்ச்சி ஆகியவற்றின் பலனாகப் பல உயர்ந்த கருத்துக்களை வெளியிடுவார்கள். அத்தகைய சொற்பொழிவுகள் நடைபெறுகையில், மாணவர்கள், அவற்றை ஆழ்ந்து கவனித்துக் குறிப்புக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு குறிப்பெடுத்தல் சிறந்த பயிற்சியாக அமைவதுடன், அக்குறிப்புக்களைக் கொண்டு அச்சொற்பொழிவுகளையும் விரித்தெழுதிக்கொள்ளலாம். செவியால் நுகர்ந்து பின் வீட்டுக்கு வந்தபின் எழுதிக்கொள்ளலாமென்றால், அது இயலாது; செம்மையாக நினைவில் வாராது. எனவே, சொற்பொழிவு நடைபெறும் போதே குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். இப்படி விஞ்ஞானச் சொற்பொழிவுகளைக் குறிப்பெடுத்துப் படித்து முன்னுக்கு வந்தவர் பலர். இன்று உலகம் புகழும் விஞ்ஞானப் பேரறிஞராகிய மைக்கேல் பாரடே என்பாரும் இத்தகையவருள் ஒருவரே யாவர். எனவே, நீங்களும் இத்துறையில் முயல்க.

11. பிறர் வானொலிப்பேச்சைக் கேட்டுக் குறிப்பு எழுதுதல்

பொதுக்கூட்டங்களிலும் மாநாடுகளிலும் பேசுவதைப்போலவே, வானொலியில் சிறந்த அறிஞர் பலரின் பேச்சு ஒலி பரப்பப்படுகின்றது. கண்டுபிடிக்கப்பட்ட புதிய பொருள்கள், இலக்கியச் சிறப்புக்கள், விஞ்ஞானப் புதுமைகள் முதலிய பயனுடைய பல பேச்சுக்களை வானொலியில் கேட்கலாம். இவற்றையும்

முன்போலவே, அப்போதைக்கப்போது குறிப்பெடுத்து வைத்துக்கொண்டால் விரித்தெழுதிப் பின் பயன்படுத்திக் கொள்ளலாம். இத்துறையிலும் மாணவர்கள் முயலுதல் வேண்டும்.

12. கொடுத்த தலைப்புக்கள் பற்றிக் கட்டுரை எழுதுதல்

வகுப்பில் ஆசிரியர் தலைப்புக்கள் பல கொடுத்து உங்களைக் கட்டுரைகள் எழுதப் பணிக்கின்றார் அன்றோ? அவ்வாறு கொடுக்கப்படும் தலைப்புக்களைப் பற்றிக் கட்டுரைகள் எழுதவேண்டுமானால், கட்டுரை எழுதுமுன், அதுபற்றிய குறிப்புக்களைத் திரட்டிக்கொள்ளவேண்டும். நூலகத்தினின்று கட்டுரை நூல்கள், தலைப்புக்கேற்ற பிற நூல்கள் முதலியவற்றைப் பெற்று அவற்றினின்று கட்டுரைக்கு வேண்டியவற்றைத் திரட்டிக்கொள்ள வேண்டும். பிறகு, அக்குறிப்புக்களை முறைப்படுத்தி, ஆங்காங்கே அமைத்து, தக்க மேற்கோள்கள், பழமொழிகள், உவமைத் தொடர்கள், மரபுத் தொடர்கள் முதலியவற்றைத் தக்கவாறு பயன்படுத்திக் கட்டுரைகள் எழுத வேண்டும். பின் வரும் தலைப்புக்களில் அவ்வாறு கட்டுரைகள் எழுதிப் பழகுக :

1. நாட்டுக்குழைத்த நல்லவர் ஒருவர் வரலாறு
2. உழைப்பின் பெருமை
3. படிப்பை முடித்த பின் மேற்கொள்ள நாடும் தொழில்
4. சொந்த ஊரின் சிறப்பு
5. விரும்பும் பொதுநலப் பணி
6. தமிழரின் பண்டைய நாகரிகம்
7. மின்னாற்றலின் பயன்கள்
8. தமிழ் மொழியின் இக்கால நிலை

9. இலக்கியத்தின் சிறப்பு
10. சிக்கனத்தின் இன்றியமையாமை
11. நூலகங்களின் பயன்

13. கொடுக்கப்பட்ட மேற்கோள் நூல்களிலிருந்து கட்டுரைப்பொருள் திரட்டல்

நீங்கள் இன்னின்ன கட்டுரைகளையே எழுத வேண்டும் என்று ஒதுக்கி, அதற்குரிய மேற்கோள் நூல்களை ஆசிரியர் குறிப்பிட்டால், நீங்கள் அந்த நூல்களை நூலகத்தினின்று பெற்று, அவற்றிலிருந்து குறிப்பெடுத்துக் கட்டுரை எழுத வேண்டும். கொடுக்கப்பட்ட மேற்கோள் நூல்களிலிருந்து கட்டுரைப்பொருள் திரட்டவும், அவற்றை முறைப்படுத்திக் கட்டுரை எழுதவும் பழகிக் கொள்ள வேண்டும். பின் வரும் தலைப்புக்களில் அத்தகைய கட்டுரைகள் எழுதிப் பழகுக:

1. காவிரிப்பூம்பட்டினப் பெருமை	— பட்டினப்பாலை
2. இந்திரவிழா 3. கோவலனது மதுரைப் பயணம் 4. செங்குட்டுவனது வட நாட்டுப் பயணம்	சிலப்பதிகாரம்
5. நளனும் சூதும்	— நளவெண்பா
6. மணிமேகலை அமுதசுரபி பெற்ற விதம் 7. ஆபுத்திரன் வரலாறு 8. மணிமேகலை சுதமதியுடன் கண்ட வனங்கள்	மணிமேகலை
9. வாய்மையின் பெருமை	— திருக்குறள்
10. வாக்குத் தவறுமை	— 'சத்திய சோதனை'

11. ஜவாஹரின் இளமைப்பருவம்

—'ஜவாஹர் வாழ்க்கை வரலாறு'

12. இலால் பகதூரின் தியாகம்

—'இலால் பகதூர் வாழ்க்கை'

14. பொருளாலும் நடையாலும் சிறந்த கடிதங்கள் எழுதுதல்

உங்கள் நண்பர்களுக்கோ, பெற்றோர்களுக்கோ, உறவினர்களுக்கோ, உங்கள் கல்வி நிலை பற்றியோ, நீங்கள் கண்ட வியத்தகு காட்சியினைப் பற்றியோ, உங்கள் மனங்கவர்ந்த நூல்களைப் பற்றியோ நீங்கள் கடிதங்கள் எழுதுவதுண்டல்லவா? அந்தக் கடிதங்கள், நல்ல முறையில் ஒழுங்காக அமைதல் வேண்டும்.

கடிதம் எழுதத் தொடங்கும் போது, வலப்பக்கத் தலைப்பில் உங்கள் முகவரியையும் நீங்கள் கடிதம் எழுதும் தேதியையும் தவறாமல் குறிக்க வேண்டும். இங்குத் தரப்பட்டுள்ள எடுத்துக்காட்டினைக் கவனியுங்கள் :

பு. செ. திருமாவளவன் 10, நடுத்தெரு,
'ரேஸ் வியூ' குடியிருப்பு,
கிண்டி, சென்னை-32.
20-12-1967.

பேரன்பு கெழுமிய நண்பா,

...........இங்குச் செய்தி எழுத வேண்டும்.

முடிக்கும்போது,

உனது அன்பு கெழுமிய நண்பன்
பு. செ. திருமாவளவன்

எனக் கையொப்பமிட்டு முடித்து, நீங்கள் யாருக்குக் கடிதம் எழுதுகிறீர்களோ, அவர் முகவரியை இங்கே கடி

தத்தின் அடியில் இடப்புற ஓரத்தில் குறிக்க வேண்டும். இவ்வகையில், பின்வரும் தலைப்புக்களில் சில கடிதங்கள் எழுதிப் பழகுக:

1. இன்பச் செலவின் விவரங்களை விளக்கி நண்பனுக்கு ஒரு கடிதம்.
2. படித்த ஓர் இலக்கியத்தைப் பற்றித் தம்பிக்கு ஒரு கடிதம்.
3. படிப்பை முடித்த பின், மேற்கொள்ளவிருக்கும் தொழில் பற்றித் தந்தையாருக்கு ஒரு கடிதம்.
4. கல்வியில் காட்டி வரும் ஊக்கம், அதனால் ஆசிரியர்களிடம் பெற்றுள்ள சிறப்பு ஆகியவற்றைப் பற்றி விளக்கித் தாயாருக்கு ஒரு கடிதம்.

15. அரசியல் அலுவலகங்களுக்குக் குறித்த பொருள் பற்றி விண்ணப்பம் எழுதுதல்

நம் சொந்தக் கடிதங்கள் எழுதுவதற்கும், அரசியல் அலுவலக விண்ணப்பங்கள் எழுதுவதற்கும் வேறுபாடுண்டு. அலுவலகங்களுக்கு எழுதப்படும் விண்ணப்பங்களில், முதலில் நமது முகவரியை எழுதி, அதன்கீழ் அலுவலரின் முகவரியை எழுத வேண்டும். எவருக்கு விண்ணப்பம் எழுதுகிறோமோ, அவரது சொந்தப் பெயரை எழுதாமல், பதவிப்பெயரை மட்டும் எழுத வேண்டும். எழுதப்படும் பொருளைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுத வேண்டும். இறுதியில் உங்கள் உண்மையுள்ள, நம்பிக்கையுள்ள, பணிவுள்ள, என்பன போன்ற சொல்லை எழுதி அதன்கீழ்க் கையொப்பமிட வேண்டும். இதைக் கவனியுங்கள் :

அனுப்புநர் :

பு. செ. வெற்றிவேலன்,
10, நடுத்தெரு,
கிண்டி, சென்னை-32.

பெறுநர் :

மாவட்டத் தலைவர்,
சென்னை மாவட்டம்
சென்னை.

ஐயா,

விண்ணப்பச் செய்தி இங்கு எழுதியபின் முடிவில்,

உங்கள் உண்மையுள்ள
பு. செ. வெற்றிவேலன்

எனக் கையொப்பமிட்டு முடிக்க வேண்டும். பின்வரும் தலைப்புக்களில் சில விண்ணப்பங்களை எழுதிப் பழகுக:

1. நிலவரியைக் குறைக்குமாறு மாவட்டத் தலைவருக்கு ஒரு விண்ணப்பம்
2. உங்கள் பகுதியில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்துமாறு கல்வி அமைச்சருக்கு ஒரு விண்ணப்பம்
3. நீ வசிக்கும் வட்டாரத்தின் சுகாதாரச் சீர்கேடு பற்றி நகராண்மைக் கழகச் சுகாதார அதிகாரிக்கு ஒரு விண்ணப்பம்
4. பயிற்சிப் பள்ளியில் உன்னைச் சேர்த்துக் கொள்ளுமாறு கல்வி அதிகாரிக்கு ஒரு விண்ணப்பம்

16. கற்பனைக் கட்டுரை

ஏதேனும் ஒரு பொருளையோ, நிகழ்ச்சியையோ, காட்சியையோ, கற்பனை நயம் புலப்படுமாறு சிறப்பித்து எழுதுவது கற்பனைக் கட்டுரையாகும். பின் வரும் தலைப்புக்களில் எழுதிப் பழகுக:

1. தஞ்சாவூரின் சிறப்பு
2. உலகப்புகழ் வாய்ந்த சென்னைக் கடற்கரை
3. காவிரியாற்றின் பெருமை
4. கிராமத்தின் இயற்கை வளம்
5. படித்த ஓர் இலக்கியத்தில் காணப்படும் கற்பனை நயம்
6. முழு நிலாவின் எழில்
7. நான் அமைச்சனுனல்
8. செய்த ஒரு பயணம்
9. கண்ட ஓர் அழகிய பூங்கா

17. நிறைவேற்றிய தீர்மானங்களை உரிய இடங்களுக்கு அனுப்புதல்

மாணவர் மன்றக் கூட்டத்தில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டனவென்ருல், அவற்றை உடனே உரியவிடத்திற்கு அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் அத்தீர்மானங்களை நிறைவேற்றிப் பயனில்லை. இது போலவே, எவையெவை குறித்துத் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறதோ, அவை சம்பந்தப்பட்ட தலைவர்களுக்கோ அதிகாரிகளுக்கோ அத்தீர்மானங்களை அனுப்பி வைத்தல் வேண்டும். எடுத்துக்காட்டாக ஒரு மாவட்ட மக்கள் சங்கம், தங்கள் மாவட்டத்தில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்த வேண்டுமென்று கோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருந்தால், அதைத் தெளிவாக எழுதி, எங்கே, எப்பொழுது, எவர் தலைமையில் நடந்த கூட்டத்தில் அத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டதென்ற விவரத்துடன், அதனை மாவட்டக் கல்வி அதிகாரிக்கு அனுப்ப வேண்டும்.

18. ஒருபொருள் அல்லது சூழ்நிலை பற்றி ஒட்டியும் வெட்டியும் உரையாடல் அமைத்தல்

ஒரு பொருள் பற்றிய வெவ்வேறு கருத்துக்களை அறிய வேண்டுமாயின், அப்பொருள் குறித்துச் சிலர் ஒட்டிப்பேசியும் சிலர் வெட்டிப்பேசியும் முடிவு காண வேண்டும். இவ்வாறு ஒட்டியும் வெட்டியும் பேசுபவர் தத்தம் கொள்கைக்குச் சாதகமாகச் சான்றுகள் அளித்தல் வேண்டும். பின் வரும் தலைப்புக்களில் ஒட்டியும் வெட்டியும் பேசுவதற்குரிய கட்டுரைகளை எழுதிப் பழகுங்கள் :

1. திரைப்படக்காட்சி—நன்மைக்குரியதா, தீமைக் குரியதா ?
2. குடியரசு சிறந்ததா, சர்வாதிகார ஆட்சி சிறந்ததா ?
3. சிக்கனம் நல்லதா, செலவிடுதல் நல்லதா ?
4. ஏட்டுக்கல்வி—தொழிற்கல்வி
5. கிராம வாழ்க்கை—நகர வாழ்க்கை
6. வாணிகம்—அலுவலகங்களில் உயர்பணி

19. நூல் மதிப்புரை எழுதுதல்

ஒரு நூலைக் கொடுத்து மதிப்புரை எழுதச் சொன்னால் அந்த நூல் முழுதும் நன்கு படித்துப்பார்த்து, விருப்பு வெறுப்பு இல்லாமல், அதில் நல்ல கருத்துக்கள் இருப்பின் அவற்றைக் குறிக்க வேண்டும். சிறந்த நூலன்று எனின் அதற்குரிய தக்க சான்றுகள் காட்டி, அந்நூல் எவ்வகை யில் சிறந்ததன்று என்பதைக் குறிக்கவேண்டும். சிறந்த தாயின் எவ்வகைச் சிறப்புக்கள் அதில் உள்ளன என்பதை விளக்க வேண்டும். தொடக்கத்தில் நூலின் பெயர், அதனை எழுதியவர் பெயர், அதனை வெளியிட்ட

நிலையத்தின் முகவரி, நூலின் விலை ஆகியவற்றைக் குறிக்க வேண்டும்.

1. படித்த ஒரு கதைப்புத்தகத்துக்கு மதிப்புரை
2. அண்மையில் பார்த்த ஒரு நாடகக் காட்சி குறித்து ஒரு மதிப்புரை
3. அண்மையில் கண்ட திரைப்படம் ஒன்றுக்கு மதிப்புரை

20. செய்யுளின் திரண்ட பொருளை எழுதுதல்

திரண்ட பொருளை எழுதுமாறு கொடுக்கப்படும் செய்யுளை ஒரு முறைக்கு இரு முறை நன்கு கருத்துடன் படித்துப்பார்க்க வேண்டும். அச்செய்யுளின் மையக்கருத்தை உணர வேண்டும். முக்கியமான கருத்தைத் தெரிவிக்கும் தொடர்களைக் குறித்துக்கொண்டு எளிய உரை நடையில் எழுத வேண்டும். பின் வரும் செய்யுளுக்குத் திரண்ட கருத்தை அவ்வாறு எழுதுக:

1. பொங்கரி னுழைந்து வாவி
புகுந்துபங் கயந்து ழாவிப்
பைங்கடி மயிலை முல்லை
மல்லிகைப் பந்தர் தாவிக்
கொங்கலர் மணங்கூட் டுண்டு
குளிர்ந்துமெல் லென்று தென்றல்
அங்கங்கே கலைகள் தேரும்
அறிவன்போ லியங்கு மன்றே.

2. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறியர் என்றிருக்க வேண்டா—கடல்பெரிது
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

21. கூட்டங்கள், மாநாடுகளுக்கு வரவேற்புரை எழுதுதல்

பொதுக்கூட்டங்களுக்கு, அல்லது மாநாடுகளுக்குத் தலைமை தாங்கவோ, திறந்து வைக்கவோ, படங்களைத் திறக்கவோ, சொற்பொழிவாற்றவோ வருகின்ற அறிஞர் களுக்கு வரவேற்புரை வாசித்தளிக்கப்படுகிறதல்லவா? அத்தகைய வரவேற்புரைகளை நீங்களும் எழுதப்பழக வேண்டும்.

1. மாணவர் மன்றச் சிறப்புக் கூட்டத்திற்குத் தலைமை தாங்க வரும் அறிஞருக்கு ஒரு வரவேற்புரை
2. திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைக்க வரும் கல்வியமைச்சருக்கு ஒரு வரவேற்புரை
3. இலக்கிய மன்றத்தில், சிலப்பதிகாரக் காப்பியச் சுவை பற்றிப் பேச வரும் தலைவருக்கு ஒரு வரவேற்புரை

22. பிரிவுரை எழுதுதல்

மாற்றப் பெற்றோ, பதவிக்குரிய கால முடிவால் ஓய்வு பெற்றோ, வேறு காரணங்களாலோ நம்மை விட்டுப் பிரிந்து செல்லும் ஆசிரியர்களுக்கோ, அதிகாரி களுக்கோ, தலைவர்களுக்கோ பிரிவுரை எழுதி வழங் கலாம். பிரிந்து செல்லும் அந்த அன்பருடைய நல் லியல்புகளையும், சிறப்புக்களையும், நற்பண்புகளையும், ஆற்றிய தொண்டுகளையும் அப்பிரிவுரையில் எடுத்துக் கூறிப் பாராட்டிப் பிரிவுரை எழுத வேண்டும். பின் வரும் தலைப்புக்களில் எழுதிப் பழகலாம்.

1. மாற்றப்பட்டு வேறு ஊர் செல்லும் தலைவருக்கு ஒரு பிரிவுரை

2. பதவிக்காலம் முடிந்து விலகும் ஆசிரியருக்கு ஒரு பிரிவுரை
3. வெளியூர் செல்வதால் பதவியிலிருந்து விலகும் சங்கத் தலைவருக்கு ஒரு பிரிவுரை

23. வெள்ளி விழாக்காலப் புகழுரையும் மறுமொழியும்

இருபத்தைந்தாண்டுகள் வரையில் ஒரே இடத்தில் பணியாற்றிய ஒருவருக்கு வெள்ளிவிழாக் கொண்டாடுதல் இயல்பு. அப்படிக் கொண்டாடப்படும் நிகழ்ச்சியில் அந்த இருபத்தைந்தாண்டுகளில் அவர் ஆற்றியுள்ள சிறந்த தொண்டுக்காக அவரைப் பாராட்டிப் புகழ்ந்து ஒரு புகழுரை எழுதலாம்.

புகழுரை பெறும் அவர் தம்மைப் பாராட்டிப் புகழ்ந்தவர்களுக்குத் தக்க முறையில் மறுமொழி அளித்து, நன்றி கூறிப் பேசுதல் வேண்டும். இவ்வாறு ஒரு வெள்ளி விழாப் புகழுரையையும், அதைப் பெற்ற ஒருவர் மறுமொழி அளிப்பதையும் எழுதிப் பழகுக.

ஓர் அலுவலகத், தோழருக்கு வெள்ளி விழா வாழ்த்துரை அளிப்பது போலவும், அவர் அதற்கு நன்றியுரை கூறுவது போலவும் எழுதுக.

24. நாடகக் காட்சிகள் அமைத்தல்

நாடகக் காட்சிகள் அமைப்பது ஒரு சிறந்த பயிற்சியாகும். பல நாடகக் காட்சிகளை நீங்கள் பாட நூலில் படித்திருக்கிறீர்கள். அவற்றை மனத்திற்கொண்டு பின் வரும் தலைப்புக்களைப் பற்றிய நாடகக் காட்சிகளை அமைக்கலாம்.

1. கண்ணகி வழக்குரைத்த நிகழ்ச்சி
2. உவவனத்தில் சுதமதியும் உதயகுமரனும்

3. சாதுவன் வரலாறு
4. மனோன்மணியும் வாணியும்
5. அசோகவனத்தில் அனுமன் சீதையைக் காணல்

25. மாணவ மன்றங்களுக்கு விதிகள் அமைத்தல்

மாணவ மன்றத்தின் நோக்கங்கள் என்னென்ன என்பதையும், மாணவர்கள் எவ்வெக்கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டுமென்பதையும் குறித்துக்கொண்டு, 'நோக்கங்கள்' என்ற தலைப்பில், ஓராண்டில் அது செய்ய விருக்கும் செயல்களைக் குறித்து எழுதலாம். மற்ற நடைமுறைகளை விதிகளாக அமைக்கலாம். இங்ஙனம் ஒரு விளையாட்டு மன்றத்திற்கோ தமிழ் இலக்கிய மன்றத்திற்கோ நோக்கங்களும் விதிகளும் எழுதிப் பழகுக.

கிடைக்குமிடம் :

மாட்ரோ பப்ளிஷிங் அவுஸ்,
1, நரசிம்மலால் தெரு,
திருவல்லிக்கேணி : : சென்னை–5

[ரூ. 1·80]